கல்கி

KALKI
14.9.97
ரூ. 4.00



வீரப்பனும் நானும்!
– 'நக்கீரன்' கோபால்



அ.தி.மு.க. கூட்டு அசிங்கம் இல்லையா?


இதுவரை கண்டிராத உண்மை சுவை!
GREAT TASTE. GREAT VALUE.
Supreme
VANASPATI
IS : 10633
IS : 11352
SSD Oil Mills Co. Ltd., Chennai - 600 056.

"கல்லடி படப்போவது நம் குடும்பம்தான் என்று அப்போதே எச்சரித்தேன்!"

பேட்டி என்றதும் முதலில் யோசித்தார். பிறகு 'என் குடும்பத்துக்கு எதிராகத்தான் கல்கி எழுதிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் பேசுவதில் எனக்கென்ன பயம்?' என்று நீண்ட நேரம் பேசினார்...

"சமீபத்தில் ஜெயலலிதா விட்ட அறிக்கையொன்றில் உங்களை 'அடிமாடு' என்று வர்ணித்திருக்கிறார். அது பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"

"அதற்கு நான் பதில் சொல்லவே விரும்பவில்லை. ஆனாலும் 'ஆடு உறவாம்; குட்டி பகையாம்' என்று கிராமத்திலுள்ள தாய் மார்கள் சொல்கிறார்கள். ஆமாம்; அவர்கள்தான் சொல்கிறார்களே தவிர, இது என் பதிலல்ல!"



கல்கி கன்ஸல்டன்ஸி!

கலப்படத்தை ஊக்குவிக்கும் விலையுயர்வு!

'மண்ணெண்ணெய் விலை ஏறவில்லையே, ஏழை பாழைகளெல்லாம் பாதிக்கப்படமாட்டார்கள்!' என்பது வெறும் கண்துடைப்பு! நாட்டில் விற்பனையாகும் மண்ணெண்ணெய்யில் பெரும்பகுதி டீசலுடன் கலப்படம் செய்யத்தான் பயனாகிறது! டீசல் விலை, லிட்டருக்கு மூன்று ரூபாய் ஏறிவிட்டதால் இனி கலப்படம் மிக அதிகமாகும் என்பதை ஏன் அரசு எதிர்பார்க்கவில்லை...!

மற்ற நாடுகளுடன் ஒப்பு நோக்க, பெட்ரோலுக்கு மிக அதிக விலை கொடுப்பது நாம்தான். பெட்ரோல் விற்பனை மூலம் கிடைக்கும் உபரியைக் கொண்டு மண்ணெண்ணெய், டீசலுக்கான மானிய செலவை சமாளிக்க அரசு முயன்று வருகிறது. பெட்ரோல் உபயோகிப்பவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி இது என்பது உணரப்படவில்லை.

"ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோது, நீங்களும் ஓர் அதிகார மையம்போல் செயல்பட்டீர்கள், இல்லையா?"

"இல்லவே இல்லை. நான் எப்போதுமே extra constitutional authorityயாகச் செயல்பட்டதில்லை."

"கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி பல மட்டங்களிலுள்ளவர்களும் அப்போது உங்களை வந்து சந்தித்துக் கொண்டிருந்தார்களே?"

"முதலில் சொன்னதைத்தான் நான் இப்போதும் வலியுறுத்திச் சொல்வேன். சொல்லப் போனால் 91-ல் ஜெயலலிதா அவர்கள் வெற்றி பெற்ற உடனேயே, என் மனைவி, மற்றும் மைத்துனர்களுக்குத் திறந்த கடிதம் ஒன்றை ஒன்பது பக்கத்துக்கு அனுப்பினேன். அதில், 'கட்சி ஆட்சிக்கு வந்து விட்டது. இனியும் போயஸ் தோட்டத்தில் இருப்பது சரியல்ல. அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் என்று பலரும் பல தவறுகள் செய்வார்கள். அதெல்லாம் உன் பேரில்தான் வந்து விழும். கடைசியில் கல்லடிபடப் போவது நம் குடும்பம்தான்!' என்று என் மனைவி சசிகலாவுக்குச் சொல்லியிருந்தேன்."

"அதற்கு உங்கள் மனைவியின் ரியாக்ஷன் என்னவாயிருந்தது?"

"அவளும் 'கட்சி ஆட்சிக்கு வந்து விட்டது. இனி என் கணவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்' என்றுதான் கூறியிருக்கிறாள். ஆனால் அவர் (ஜெ)தான் விடவில்லை. தன் கூடவே இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்."

"அதன் பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"எந்தப் பதவியுமே இல்லாமல் போயஸ் தோட்டத்தில் இருக்காதே' என்று என் மனைவியிடம் தெளிவாகச் சொன்னேன். 'கட்சியில் ஒரு பதவி கேள் அல்லது ஆட்சியில் அமைச்சர் பதவி கேள். இல்லையென்றால் அட்லீஸ்ட் ஒரு கெஸட்டட் பியூன் பதவியாவது கேள்!' என்றேன். அவள் கேட்கவில்லை. அதன் விளைவுதான் இன்றைய நிலை. நான் சொன்னது போலவே அவள் மேல் பழி விழுந்து விட்டது."

"அப்படியானால் வழக்குகளெல்லாம்.."

"வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதுபற்றிப் பேச வேண்டாமே..."

"அ.தி.மு.க. ஆட்சியில் தவறுகளே நடக்கவில்லை என்றா சொல்ல வருகிறீர்கள்?"

"எல்லா ஆட்சியிலும் என்னென்ன தவறுகள் நடக்குமோ அந்தத் தவறுகள்தான் அ.தி.மு.க. ஆட்சியிலும் நடந்தன. அதை உங்களைப் போன்ற பத்திரிகையாளர்களும் பத்திரிகைகளும் கருணாநிதியும்தான் பெரிது படுத்தி விட்டீர்கள். இப்போது மட்டும் தவறுகளே நடக்கவில்லையா என்ன?"

"எல்லா ஆட்சியிலும் தவறுகள் நடக்கலாம். ஆனாலும் அ.தி.மு.க. ஆட்சியில் தானே கோடிகோடியாக ஊழல்கள் நடந்தன!"

"அப்படி நீங்கள் சொல்கிறீர்கள்..."

"நான் மட்டுமா! அப்படிச் சொல்லாதவர்களே இல்லையே!"

"கருணாநிதி கூடத்தான் ஜெயலலிதா அவர்கள் ஆயிரம் கோடிக்கு ஊழல் புரிந்ததாகச் சொன்னார். ஆனால் அறுபது கோடிக்குத்தானே வழக்குப் போட்டிருக்கிறார்! ஏன் ஆயிரம் கோடிக்குப் போடவில்லை? காரணம், எல்லாம் பொய்யானவை; மிகைப்படுத்தப்பட்டவை! இப்போதும் என்ன நடக்கிறது தெரியுமா? 'மொலாசஸ்' விஷயத்தில் மாதம் ஒன்றரைக்கோடி ரூபாய் ஆட்சியாளர்களுக்கு தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கிறது."

"தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறதென்றால் முன்பும் வந்து கொண்டிருந்தது என்று தானே அர்த்தம்?"

"வந்து கொண்டிருக்கிறது, அவ்வளவுதான்!"

"உங்களுக்குச் சொத்துக்களே இல்லை என்கிறீர்களா?"

"ஊரில் பூர்வீகச் சொத்து இருக்கிறது. வீடு இருக்கிறது. சென்னையில் இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கிறோமே இந்த வீடு



அரசு அதிகாரிகளும் அரசுத் துறையும், அமைச்சர்களும் செலவிடும் பெட்ரோலை யாராவது ஒழுங்காகக் கணக்கெடுப்பது நல்லது. அனாவசியமாக ஆகிற பெட்ரோல் செலவை அது காட்டிக் கொடுத்துவிடும். அந்த தண்டச் செலவையெல்லாம் நிறுத்தினாலே oil pool கணக்கில் இருக்கிற குறையைச் சரி செய்து விடலாம்!

ஆனால், பெட்ரோல் பொருள்களை விலை ஏற்றியது போதாதென்று 22,000கோடி ரூபாய் மதிப்புக்குப் பத்திரங்களை வேறு அரசு வெளியிடுகிறது. இந்தப் பத்திரங்களை ஆயில் கோ ஆர்டினேஷன் கமிட்டிக்கு கொடுப்பதன் மூலம் ஆயில் பூல் கணக்கை நேர் செய்வார்களாம்!

பத்திரங்களுக்குக் காலக் கெடு உண்டு. ஐந்தாண்டு கழித்து அவற்றுக்கான தொகையை வட்டியும் (குறைந்தபட்சம் 10.5 சதவிகிதம்) முதலுமாக ஆயில் கோ ஆர்டினேஷன் கமிட்டி திருப்பித் தர வேண்டும். அந்த சமயத்தில் அரசாங்கம் எந்தக் கணக்கில் கை வைக்க முடியும் என்பது தெரியவில்லை.. அப்போதும் பெட்ரோலிய பொருட்கள் விலையை உயர்த்தி மக்களைத் திணறடிக்கத் தான் போகிறார்கள்!

— வி. கோபாலன்

இருக்கிறது. அவ்வளவுதான்!"

" 'தமிழரசி' பில்டிங் உங்களுடையது இல்லையா?"

"இல்லை. அது என்னுடையது என்று சொன்னவர்கள் மேல் மான-நஷ்ட வழக்குப் போட்டிருக்கிறேன்..."

"உங்கள் மனைவி பெயரில்..."

"அப்படிப் பேச்சு இருக்கிறது. அதைப் பத்திரிகையாளர்களும் உண்மை போல் போடுகிறார்கள். ஆனால் உண்மையல்ல. இதெல்லாம் பழி வாங்குகிற நடவடிக்கை. ஏன் போட்டி அ.தி.மு.க.விலுள்ளவர்கள்மேல் வழக்குகள் போடவில்லை? கருணாநிதி அதை ஏன் செய்யவில்லை? வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளதால் இது பற்றியெல்லாம் நாம் பேசுவது சரியல்ல..."

"நீதிமன்றத்துக்குச் செல்கிறபோது, உங்கள் மனைவி படுத்த படுக்கையாக ஸ்டெரெச்சரில் சென்றபோதெல்லாம் அதை யாருமே உண்மை என்று நம்பவில்லை..."

"என் மனைவியின் உடல் நலம் பற்றி எனக்குத்தான் தெரியும். அவளுக்கு இதயத்தில் ஓர் ஓட்டை இருப்பது உண்மை. அதனால் டென்ஷனாகிற போது, அவளுக்கு மயக்கமும் வலிப்பும் வரும். அப்படி வருகிற போது உடனடியாகக் கவனிக்காவிட்டால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும் என்பதுதான் உண்மை. இதெல்லாம் உங்களைப் போன்றவர்களுக்கு என்ன தெரியும்? அதனால்தான் உண்மைகளை விசாரிக்காமல் கண்டபடி எழுதுகிறீர்கள்."

"உங்கள் வழக்கு என்றால் பெரிய பெரிய வக்கீல்கள்தான் வந்து ஆஜராகிறார்கள் இல்லையா?"


"எனக்கு நண்பர்கள் அதிகம். பல்வேறு மட்டங்களிலும் இருக்கிறார்கள். கபில்சிபல் முன்பு (ஜெ.அணி-ஜா. அணி வழக்கில்) இரட்டை இலைச் சின்னத்துக்காக வாதாடியவர். எனக்கு இலவசமாகவே வந்து வாதாடுவார். இப்போது நீங்கள் என்னோடு புறப்பட்டு வரத் தயாரா? பாஸ்போர்ட் விசா மாத்திரம் போதும். இப்படியே புறப்படுவோம். உலகம் பூராவும் சுற்றி வரலாம். நீங்களும் ஒரு பைசா எடுத்து வர வேண்டாம்; நானும் ஒரு பைசா எடுத்து வரவில்லை. போகலாமா? உலகம் பூராவும் நம்மை எப்படி வரவேற்று உபசரிக்கிறார்கள் என்று பாருங்கள்... அப்படிப்பட்ட நண்பர்கள் எனக்கு இருக்கிற போது இப்படிப்பட்ட கேள்விகளே தேவையில்லாதவை!"

"பெரும்பாலும் தவறுகள் செய்பவர்கள் சாமர்த்தியமாகத்தானே செய்கிறார்கள்!"

"அது மாதிரியான சாமர்த்தியமெல்லாம் எனக்குக் கிடையாது. நான் எப்போதுமே வெளிப்படையானவன்."

"உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் போயஸ் கார்டனுடனான தொடர்பு எப்போது, எப்படி ஏற்பட்டது?"

"நான் திருநெல்வேலி மாவட்ட மக்கள்



"ஊழலை ஒழிப்போம்னு எல்லோரும் உறுதிமொழி எடுத்தப்புறமும் நம்ம தலைவர் சாமர்த்தியமா சம்பாதிச்சிட்டாரு!"

"எப்படி?"

"ஊழலைக் களைய களைக் கொல்லி வாங்கிய செலவுன்னு கணக்குக் காட்டியிருக்கார்!"

– பொன்மலை ஆர். பிரகாஷ்

தொடர்பு அதிகாரியாக இருந்த போதுதான்– 81–ல் பாரதியார் நூற்றாண்டு விழா நடந்த போது– எட்டயபுரத்தில் ஜெயலலிதா அவர்களை முதன் முதலாகச் சந்தித்தேன். அதன் பிறகு என் மனைவியும் சந்தித்தாள். அப்போதே நான் ஜெயலலிதா ஒரு good leader என்பதை உணர்ந்தேன். இப்போதும் அவர் good leader தான். சங்கடமே, அவருக்கு மற்றவர்கள் மேலுள்ள சந்தேகம்தான். கருணாநிதிக்கு இருக்கிற அவசரப்புத்தி மாதிரி..."

"எப்படி?"

"முன்பு ஜெயலலிதா அவர்கள் அரசியலை விட்டே விலகப் போவதாக எழுதிய கடிதத்தை, கருணாநிதி அவசரப்பட்டு போலீஸைக் கொண்டு எடுத்து வெளியிட்டதால்தான், அவர் மீண்டும் மனதை மாற்றிக் கொண்டு அரசியலுக்கே வந்தார். இல்லையென்றால் அவர் ஹைதராபாத் போவதாகத்தான் திட்டமிட்டிருந்தார்."

"முன்பும் ஒரு முறை போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டீர்களே, ஏன்?"

"அவர் வெளியேற்றவில்லை. நான்தான் வெளியேறினேன். நான்தான் சொன்னேனே, அவருக்குள்ள சங்கடமே சந்தேகம்தான் என்று!"

"ஒரு முறை நீதி மன்றத்தில் உங்களுடைய தொழில் என்னவென்று கேட்கப்பட்ட போது, 'முதல்வரின் ஆலோசகர்' என்று பதில் சொல்லப்பட்டதாகச் செய்தி வந்தது..."

"நான் அப்படிச் சொல்லவில்லை. எனது வக்கீல் அப்படிச் சொன்னார். பிறகு 'He was' என்று திருத்திக் கொண்டார். அப்போது ஒரு நீதிபதி 'more than that' என்று கூடச் சொன்னார். ஆனால் நான் எந்தச் சமயத்திலும் யாரிடத்திலும் அப்படிச் சொல்லிக் கொண்டதும் இல்லை. நடந்து கொண்டதும் இல்லை."

"இப்படிப்பட்ட நீங்கள் குமுதத்தில் உங்கள் வாழ்க்கை பற்றி எழுதத் தொடங்கியபோது, உடனடியாக அதற்குத் தடையுத்தரவு வாங்க வேண்டிய அவசியம் என்ன?"

"மாலன் பொய்யை உண்மைபோல் எழுதினார் என்பதுதான். எல்லோருக்குமே தெரியும் மாலன், கருணாநிதிக்கும் மூப்பனாருக்கும் வேண்டியவர் என்பது. அந்த அடிப்படையில் அவர் கருணாநிதியின் தூண்டுதலின் பேரில்தான் அப்படி எழுதினார். பணம் கூட வாங்கியிருக்கலாம்!"

"நீங்கள் வாங்கிய தடையுத்தரவுக்கு இன்னொரு கோணமும் இருக்கலாமே?"

"என்ன?"

"அதாவது, உங்களைப் பற்றிய உண்மையான செய்திகள் வெளி வந்து விடுமோ என்கிற பயத்தில் கூட நீங்கள் தடையுத்தரவு வாங்கியிருக்கலாமே?"

"உண்மையான செய்திகள் வரவில்லை என்பதுதானே எனது குற்றச்சாட்டு. நான் ஒன்றும் விலாசம் தெரியாதவனில்லை. நான் மாணவப் பருவத்திலிருந்தே அரசியலில் ஈடுபட்டவன் என்பதும் எங்கள் குடும்பம் எப்படிப்பட்டதென்பதும் கருணாநிதிக்கே தெரியும். எனவே, உண்மைகளை எழுதினால் நான் ஏன் கவலைப்படப் போகிறேன்? பொய்யை உண்மைபோல் எழுதியதால்தான் நீதிமன்றத்தை நாடினேன்!"

"இப்போதும் கட்சிக்காரர்களெல்லாம் உங்களை வந்து சந்திக்கிறார்களா?"

"நானும் அவர்களின் ஓர் அங்கமாகத்தான் இருக்கிறேன். அவர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள். நீங்கள் வந்திருக்காவிட்டால் இப்போது கைது செய்யப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் கரூர் சின்னசாமியை பார்க்கக் கிளம்பியிருப்பேன்."

"இப்போது உங்கள் மனைவியை நீங்கள் சந்திக்கிறீர்களா?"

"உறவு எப்போதுமே உறவுதான். என்னுடைய வருத்தமெல்லாம் அவள் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் இருக்கிறாளே என்பதுதான்!"

பேட்டி: **இளங்கோவன்**

வண்ணப்படம்: **உத்ரா**

டயானா மரணம்:

பத்திரிகையாளர்கள் பின்தொடர்ந்தது சரியா?

'பத்திரிகையாளர்களின் கைங்கர்யத்தால்தான் டயானா இறக்கப் போகிறாள் என்று நான் எண்ணியதுண்டு. ஆனால் அவளது சாவில் பத்திரிகை உலகம் இப்படியொரு நேரடிப் பங்கேற்கும் என்று கற்பனை கூட செய்ததில்லை!'' என்று குற்றம் சுமத்தியிருக்கிறார் இளவரசி டயானாவின் சகோதரர் சார்லஸ் ஸ்பென்ஸர். அவரது குற்றச்சாட்டு சரிதானா? கருத்துக் கேட்டோம்...



'நேருக்கு நேர்' வீரபாண்டியன் : இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிஸம் என்கிறார்களே அதன் வேக மான வளர்ச்சிதான் இது போன்ற விபரீதங்களுக்கு வழிவகுக்கிறது என்று நினைக் கிறேன். இந்த வகை ஜர்னலிஸம் கத்தி போன்றது. முறையான ஆராய்ச்சிகள் மூலம் உண்மையை வெளிக் கொண்டு வந்தால், கத்தி அறுவை சிகிச்சை செய்யப் பயன்பட்டதாக அர்த்தம். ஆனால் குரங்கின் கையில் உள்ள கத்தி எவ்வளவோ விபரீதங்களுக்கு வழிவகுத்து விடுமே! பரபரப்புக்காக பொய் யான செய்திகளைக் கூட பல பத்திரிகைகள் அச்சிடுகின்றன. ஹவாலா வழக்கையே எடுத்துக் கொள்ளுங்கள். அத்வானி மீது குற்றம் சாட்டப்பட்ட போது, இதுதான் சாக் கென்று அவர் மீது சில பத்திரிகைகள் சேற்றை வாரியிறைத்தன. ஆனால் அவர்



மீது குற்றமில்லை என்று நீதி மன்றம் தீர்ப்பளித்த பிறகு அந்தப் பத்திரிகைகள் தாங்கள் தவறாக எழுதியதற்காக எந்த வருத்தமும் தெரிவிக்கவில்லை. அடுத்த பரபரப்புச் செய்தியின் மீது கவனம் செலுத்தத் தொடங்கி விட்டார்கள். டயானா விஷயத்தில் லண்டன் பத்திரிகையாளர்கள் நடந்து கொண்டவிதம் சரியல்ல. அவரை விரட்டி, தொல்லைகள் தந்து இப்படித் தவறான அணுகுமுறையின் மூலம் டயானாவுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தி, விபத்துக்கு வழிகோலியதில் தங்களுக்கும் பங்குண்டு என்பதை அந்த நாட்டுப் பத்திரிகையாளர்கள் மறைக்க முடியாது.



லேனா தமிழ்வாணன் :
பொது வாழ்க்கையில் ஈடுபட்டுப் பிரபலமானவராகவும் ஆகிவிட்டால் பத்திரிகையாளர்கள் அவர்களைப் பற்றிய பல விஷயங்களையும் எழுத முற்படுவது என்பது தவிர்க்க முடியாதது. டயானா தவறான வாழ்க்கையை வாழ்ந்தவர்தான். விவாகரத்து பெறாத நிலையிலேயே ராணுவ அதிகாரி ஒருவரிடம் தொடர்பு கொண்டிருந்தார். இங்கிலாந்து நாட்டில் சாதாரண குடிமகள் ஒருத்தி இப்படி வாழ்ந்திருந்தால் அதில் பேரதிர்ச்சி ஏற்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் அரச பரம்பரையில் அடியெடுத்து வைத்த பிறகு கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு டயானாவுக்கு உண்டு. பொதுவாழ்வுக்கு வந்த பிறகு, தனிப்பட்ட முறையிலும் ஒருவர் ஒழுக்கத்தைக் கட்டிக்காப்பதுதான் நியாயம்.

இதே டயானா நிலக் கண்ணிவெடிகள் நீக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்த வியட்நாம் சென்றார். ஊனமுற்ற குழந்தைகள் நலத்துக்காக சில திட்டங்களை அறிவித்தார். இம்ரான்கானின் புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை வளர்ச்சிக்காக பாகிஸ்தான் சென்றிருந்தார். அப்போதெல்லாம் பத்திரிகையாளர்கள் அவருக்கு முறையான 'கவரேஜ்' அளித்தார்களே. புகைப்படம் எடுத்துத் தள்ளினார்கள். அப்போதெல்லாம் டயானா பயந்து ஓடவில்லையே. பாரிஸில் அப்படி பத்திரிகையாளரிடமிருந்து மறைந்து கொள்ள நினைத்தார் என்றால் அதற்குக் காரணம் தவறான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதுதானே. இரண்டு பிள்ளைகளுக்கு - அதுவும் வருங்கால இளவரசருக்குத் தாயான - டயானா தமது நடவடிக்கைகளில் முன் உதாரணமாக அல்லவா விளங்கியிருக்க வேண்டும். அப்படியிருக்க டயானாவின் இறப்பிற்கு பத்திரிகையாளர்களே காரணம் என்பதை - அதுவும் அவரது காரோட்டி குடித்துவிட்டு காரோட்டியிருக்கிறான் என்ற செய்தி வந்திருக்கிற இந்த நேரத்தில் - என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

'நியூஸ் டுடே' ஆசிரியர் ஜவஹர் :
பத்திரிகையாளர்களின் தவறை ஒரேயடியாக இது போன்ற விஷயங்களில் மூடி மறைத்துவிட முடியாது. அதுவும் லண்டன் தினசரிகளைப் பொறுத்தவரை டயானாவிடம் ஒரு பெரும் மயக்கமே காணப்பட்டது. அவரைப் பற்றிய எந்த செய்தியாக இருந்தாலும் கட்டம் கட்டி பிரசுரித்தார்கள். அவரது எத்தகைய புகைப்படம் என்றாலும் போட்டி போட்டுக் கொண்டு அச்சிட்டார்கள். ஆனால் இதற்கெல்லாம் அவர்களை ஐம்பது சதவீதம்தான் குறைசொல்ல முடியும். மீதி குற்றச்சாட்டு இது போன்ற செய்திகளை விழுந்து விழுந்து படிக்கிற வாசகர்கள் மீதும் விழுகிறது. அவர்கள் இந்த செய்திகளை உதாசீனப்படுத்தியிருந்தால் பத்திரிகைகள் இவற்றில் பரபரப்பு காட்டியிருக்காது. என்னைக் கேட்டால் நிருபர்கள், புகைப்படக்காரர்கள், வாசகர்கள் ஆகிய எல்லோரையும் விட பத்திரிகை ஆசிரியரின் பொறுப்பு மிக அதிகம். ஒரு வி.ஐ.பி.யைப் பற்றிய அந்தரங்கச் செய்தி வந்து சேர்ந்தால் கூட, பரபரப்பு கருதி அதைப் பிரசுரிக்கத் துடிப்பது தவறு. பொது வாழ்வுக்கு வந்துவிட்ட ஒரே பாவத்துக்காக அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை முழுவதும் வெளிச்சம் போட்டு காட்டப்பட வேண்டுமா என்ன? ஒரு குறிப்பிட்ட செய்தியைப் பிரசுரிப்பதா, வேண்டாமா என்பதில் என் மனம் ஊசலாடினால், அதைப் பிரசுரிக்காமலே விட்டுவிடுவேன்.



டயானாவின் விஷயத்தில் அவரது காரும் வேக எல்லையை மீறியிருக்கிறது; அவரது காரோட்டி உட்கொண்ட மதுவின் அளவும் எல்லை மீறியிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இந்த முடிவில் பத்திரிகையாளர் பங்கு ஓரளவுதான் என்றே தோன்றுகிறது. அதே சமயம் டயானா விபத்தில் சிக்கிய பிறகு அவரைப் பற்றியோ, விபத்தின் தீவிரம் பற்றியோ அறியாமல் சிலர் கடந்து செல்ல, இரண்டையுமே அறிந்த சில பத்திரிகையாளர்கள் அந்த நிலையிலும் டயானாவைப் புகைப்படமெடுப்பதிலேயே ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். சந்தேகமில்லாமல் இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான்.

பேட்டி : **ஜி.எஸ்.எஸ்.**

திசை மாறிய வாழ்வு!



என் தந்தை மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார். அது மிகவும் சிரமமான தொழில் என்பதால் என்னை நன்றாக படிக்க வைத்து ஆபிஸ் சென்று வேலை பார்க்க வைக்க வேண்டும் என்று ஆசைப் பட்டார். அது நடக்கவில்லை. ஏனெனில் எனக்கு படிப்பில் அவ்வளவாக ஆர்வம் இல்லை. இருந்தாலும் 10ம் வகுப்பு தேர்வு பெற்றுவிட்டேன்.

இந்நிலையில் என் நண்பன் ஒருவன் என்னிடம் வெளிநாடு சென்றால் சீக்கிரம் பணக்காரனாகலாம் என்று ஆசை காட்டினான். என் மனதும் சலனப்பட்டது. கடையில் இருந்து 20 ஆயிரம் ரூபாய் எடுத்து வெளிநாடு செல்வதற்காக கொடுத்து ஏமாந்தேன். வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிட்டவில்லை, கொடுத்த பணமும் திரும்ப வரவில்லை. குடும்பமே சோகத்தில் ஆழ்ந்தது. வயதானவன் சேர்த்து வைத்த பணத்தை இப்படி அழித்து விட்டாயே என்று தந்தை என் மேல் கோபப் பட்டார். உன் தங்கைக்கு வேறு திருமணம் செய்தாக வேண்டும். இப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொண்டாயே என்று திட்டினார்.

என்றும் மாறா எங்கள் நேசம்

கடையில் சரக்கு குறைந்ததால் வியாபாரமும் குறைந்து விட்டது. இந்நிலையில்தான் ஸ்ரீராம் சிட்ஸ் (என் தங்கையின் திருமணத்திற்காக சேர்த்து வைத்தது) எங்களுக்கு கை கொடுத்தது. அதன் மூலம் கிடைத்த பணத்தில் மீண்டும் கடைக்கு சரக்கு வாங்கிப் போட்டதில் தொழில் முன்பை விட நன்றாக நடந்தது. என் தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்தேன். என் தந்தை மட்டும் சந்தாதாரராகச் சேராவிடில் என் வாழ்வு எப்படியோ திசை மாறிப் போயிருக்கும். நான் இன்று வாழ்க்கையில் ஓரளவுக்கு வசதியாக உள்ளேன் என்றால் அதற்கு காரணம் ஸ்ரீராம் தான் என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். அன்று என் தந்தை வீடு கட்டும் போதும் ஸ்ரீராம் தான் உதவி செய்தது. இவ்வாறாக ஸ்ரீராம் அன்று என் தந்தைக்கும் இன்று எனக்கும் தொடரும் இனிய உறவாக இருக்கிறது.

அன்புடன்

ப. சேகர்

1A/4, அந்தணர்குறிச்சி மெயின் ரோடு,
திருவையாறு, தஞ்சாவூர் – 613 204.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி பற்றி எப்போது விசாரித்தாலும் சுற்றுப் பயணத்தில் இருக்கிறார் என்கிற பதில்தான். ஒரு சிறிய இடைவெளியில் சென்னை வந்திருந்த அவரை ஒரு முன்னிரவு நேரத்தில் சந்தித்தோம். 'பத்திரிகைகள் என்னை மிகவும் damage செய்கின்றன. ஆனாலும் அவற்றின் மீது எனக்கு வருத்தமோ, கோபமோ கிடையாது' என்றவர் நம்மிடம் சுமார் இரண்டு மணிநேரம் பேசினார்...

“சென்... பொதுத்... தேர்தலில்... உங்கள் கட்... சிக்கு ஏற்பட்ட... படு தோல்விக்... குப் பிறகும் நீங்... கள் மனந்தளரா... மல் சுற்றுப் பய... ணம் செய்து... கொண்டிருக்கிறீர்... களே, அது எப்படி?”

“நான் ஒரு பிறவிப் போராளி (born fighter). எத்தனை பெரிய தோல்வி வந்தாலும் அதையே நினைத்து உழன்று கொண்டிருக்க மாட்டேன். பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியான 24 மணி நேரத்துக்குள்ளாகவே கட்சியின் நிர்வாகக் குழுவைக் கூட்டினேன். அதன் பிறகு தமிழகம் முழுவதும் சென்று கட்சித் தொண்டர்களைச் சந்தித்துப் பேசினேன். அந்தத் தோல்வியால் ம.தி.மு.க. சிதறிப் போய் விடும் என்று கலைஞர்தான் கனவு கண்டார். எங்கள் தொண்டர்களின் கட்டுக் கோப்பான நிலை கலைஞரின் கனவைச் சிதறடித்து விட்டது. எங்கள் கட்சியின் நான்காவது ஆண்டு விழாவில் பேசும் போது, ‘21-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் தமிழகத்தின் தலையாய கட்சியாக நாம் திகழ்வோம்' என்று பேசினேன். அதை நோக்கித்தான் இப்போது எங்கள் பயணம்.”

“ஆனால்...”

“நீங்கள் என்ன கேட்க வருகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. அ.தி.மு.க.வுடன் கூட்டுச் சேர்ந்தது ஏன்? இத்தனை காலமாக அவர்கள்மேல் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவிட்டு இப்போது எப்படிச் சேர்ந்தீர்கள் என்று கேட்க வருகிறீர்கள்... இல்லையா... எப்பாடு பட்டாவது கலைஞர் எங்களை அழிக்க நினைக்கிறார். அதனால் நாங்கள் அ.தி.மு.க.வுடன் சேர்ந்து செயல்படுவது கண்டு பதற்றப் படுகிறார். வேறு சிலர், ‘அ.தி.மு.க.வுடன் கூட்டு என்பது அசிங்கம் இல்லையா?' என்று கேட்கிறார்கள். கல்கியில் கூட



இப்படியெல்லாம் எழுதியிருக்கிறீர்கள்... இன்றைக்கு எதிர்க் கட்சியாகச் செயல்படுகிறது அ.தி.மு.க. என்பதால், நாங்களும் அந்தக் கட்சியுடன் சேர்ந்து எதிர்க்கட்சிக்குரிய ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதில் என்ன தவறு? அ.தி.மு.க.வும் சரி, ம.தி.மு.க.வும் சரி, திராவிடக் கட்சிகளின் இரு கூறுகள் தானே! பரஸ்பரம் ஊழல் குற்றச்சாட்டுகளைக் கூறிக் கொண்டவர்கள் இதுவரை கூட்டணி அமைத்துக் கொண்டதில்லையா என்ன? எமர்ஜென்சி கொடுமைகளையெல்லாம் மறந்துவிட்டு இந்திராகாந்தியுடன்

தி.மு.க. கூட்டணி அமைத்துக் கொள்ளவில்லையா? ராஜீவின் மரணத்திற்குத் தி.மு.க.தான் காரணம் என்று பேசப்பட்டபோது, அதை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசாத மூப்பனாருடன் தானே கலைஞர் கூட்டணி அமைத்துக் கொண்டார்!"

''ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான கட்சிகள் ஒன்றுடன் ஒன்று கூட்டணி வைத்துக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் ம.தி.மு.க. மேல் இது வரை ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லையே! அப்படிப்பட்ட ம.தி.மு.க., அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்டது தான் அசிங்கம் என்று விமர்சிக்கிறார்கள்.''

''நாங்கள் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு



அ.தி.மு.க. கூட்டு அசிங்கம் இல்லையா?

ஆளாகாதவர்கள் என்ற நிலையிலும் கடந்த பொதுத் தேர்தலில் என்ன நடந்தது? இப்படியொரு கட்சிக்கு, நாடாளுமன்றத்திலாவது சட்ட மன்றத்திலாவது நமது பிரச்னைகளுக்காகக் குரல் கொடுக்க ஒரு வாய்ப்புக் கொடுப்போம் என்று மக்கள் நினைக்கவில்லையே! பத்திரிகைகளும் எழுதவில்லையே!"

"அன்றைக்கிருந்த அரசியல் சூழ்நிலையே வேறு..."

"சென்ற பொதுத் தேர்தலில் எங்களைத் தேர்ந்தெடுத்து ஆட்சியில் அமர்த்தியிருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கவில்லை; எதிர்பார்க்கவுமில்லை. ஆனால் ஓரிடத்திலாவது எங்களை வெற்றி பெறச் செய்திருக்கலாமே! செய்யவில்லையே! இந்த நிலையில் நாங்கள் என்னதான் செய்வது? அதனால் அ.தி.மு.க.வுடன் கூட்டு என்பதில் தவறே இல்லை. இதெல்லாம் ஓர் அரசியல் வியூகம். 'தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான் ஒருவன் இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று' என்கிறார் வள்ளுவர். அதாவது தனக்கு உதவுவதற்குத் துணை இல்லை. பகையோ இரண்டு. இந்த நிலையில் இரண்டு பகைகளில் ஒன்றை இனிய துணையாகச் செய்து கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர். எனவே, எங்கள் கூட்டில் எந்தவிதமான தவறும் இல்லை. நீங்களெல்லாம் விமர்சிக்கிற மாதிரி அசிங்கமும் இல்லை."

"அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைப்பதற்கு முன்பும் நீங்கள் தமிழகம் முழுக்கச் சுற்றுப் பயணம் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகும் இப்போது சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலையில் தொண்டர்களின் மனோநிலையில் ஏதேனும் மாற்றத்தைப் பார்க்கிறீர்களா?"

"சிலர், நாம் நமது தனித்தன்மையோடுதான் இருக்க வேண்டும் என்று கூறியது உண்மைதான். ஆனால் கட்சியின் அரசியல் வியூகத்தை எடுத்துச் சொன்ன பிறகு அவர்களும் சமாதானமாகிவிட்டார்கள். வை.கோ. செய்வது சரியாகத்தான் இருக்கும் என்பதில் அவர்களுக்கும் நம்பிக்கை வந்து விட்டது!"

"கட்சி, பதவியில் இல்லாவிட்டால் தொண்டர்கள் சோர்ந்து போய்விடுவார்கள். உங்கள் தொண்டர்கள் எப்படி இருக்கிறார்கள்?"

"ம.தி.மு.க.விலிருந்து பத்துத் தொண்டர்கள் விலகினால், பத்தாயிரம் பேர் விலகியதாகக் கலைஞர் பொய்ப் பிரசாரம் செய்தாலும் எங்கள் தொண்டர்கள் கட்டுக் கோப்பாக இருக்கிறார்கள். புடம்போட்ட தங்கமாக இருப்பவர்கள் எங்கள் தொண்டர்கள்."


"சி.பி.எம்முடனான உங்கள் கூட்டணி தொடராததற்கு என்ன காரணம்?"

"கூட்டணி தொடரவில்லை என்பது உண்மைதான். அது அவர்களின் நிலைப்பாடு. ஆனாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் மரியாதை வைத்திருக்கிறோம்."

"தி.மு.க.ஆட்சியை எதிர்ப்பதற்கு என்ன காரணங்களை வைத்திருக்கிறீர்கள்?"

"நிறையக் காரணங்கள் இருக்கின்றன. எல்லா மட்டத்திலும் ஊழல் இருக்கிறது. அண்மையில் சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியதில் ஏகப்பட்ட பணம் கைமாறியிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையிலும் ஊழல்தான். 'சிங்காரச் சென்னையாக மாற்றுவேன்' என்று சொன்னார் ஸ்டாலின். அவர்தான் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாரே தவிர, சென்னை காலரா சென்னையாகிவிட்டது. உயிர்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலை உருவாகி விட்டது. தினசரி கொலை, கொள்ளை, ஜாதிச் சண்டை, குண்டு வெடிப்பு என்கிற நிலைதான். இதையெல்லாம் மறைப்பதற்கு ஹிட்லரின் பிரசார சாதனமாக கோய பல்ஸ் இருந்தது போல், கலைஞருக்கு சன் டீவி இருக்கிறது. எந்த வங்கியில் கட்சியின் பணம் போடப்பட்டிருந்ததோ அந்த வங்கியில் ஓவர் டிராப் வாங்கித்தான் சன் டீவி துவங்கப்பட்டது என்பது தனிக் கதை. அது ஒருபுறமிருக்க, எல்லா வழிகளிலுமே எங்களை முடக்கப் பார்க்கிறார். சுதந்தரப் பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கான கமிட்டியில் எங்கள் கட்சிக்கும் இடம் கொடுத்திருக்க வேண்டாமா? கொடுக்கவில்லை. 'சட்ட சபையில் உறுப்பினர் இல்லாத கட்சிகளுக்குக் கமிட்டியில் இடமில்லை' என்று ஒரு புது சட்ட

◆◆◆



"எனக்கு பத்தாயிரம் ரூபா பாங்க் லோன் வேணும். உங்களுக்கு லஞ்சமா எவ்வளவு வேணும்?"

"வாங்குற கடனை நீங்க ஒழுங்கா கட்டுற ஆளானா ஐந்நூறு கொடுங்க. நாலஞ்சு வருஷம் இழுத்தடிச்சு கொடுக்கிற ஆள்னா இரண்டாயிரம் தாங்க. கடனை வாங்கிட்டு கம்பிய நீட்டுற ஆள்னா ஐயாயிரம் கொடுக்கணும்!"

— கு. அருணாசலம்

திட்டம் பேசுகிறார். உள்ளாட்சித் தேர்தலில் நாங்களும் கணிசமான அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிற நிலையிலும் உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் பற்றிப் பரிசீலிக்க அமைத்திருக்கும் கமிட்டியிலும் எங்கள் கட்சிக்கு இடமில்லை. இப்படி ஜனநாயக விரோதப் போக்குக் கொண்ட கலைஞர்தான் பொன்விழாக் கொண்டாட்டங்களில் 'திருவாளர் தேசியம் பிள்ளை'யாகி விட்டார். மெரீனா கடற்கரையில் செங்கோட்டைபோல் செட் அமைத்துப் பேசி பிரதமர் பதவிமேல் தமக்குள்ள ஆசையையும் நாசூக்காக வெளிப்படுத்தித் திருப்திபட்டுக் கொண்டார்."

"திருவாளர் தேசியம் பிள்ளை ஆவது தவறு என்கிறீர்களா?"

"கலைஞர் தேசியம் பிள்ளையானது பற்றிப் பேசினால் அது மிகப் பெரிய அளவுக்கு நீண்டு விடும். அது வேண்டாம்."

"கலைஞருக்கு பிரதமர் பதவிமேல் ஆசை என்கிறீர்கள். அப்படியொரு சந்தர்ப்ப சூழ்நிலையில் கேட்கப்பட்டபோது 'என் உயரம் எனக்குத் தெரியும்' என்று அவரே சொல்லியிருக்கிறாரே?"

"அது அவருக்காகச் சொல்லப்பட்டதல்ல. மூப்பனாருக்காகச் சொல்லப்பட்டது!" (சிரிக்கிறார்.)

"அண்மையில் அ.தி.மு.க.வுடன் நீங்கள் நடத்திய கூட்டுப் போராட்டத்தில், அ.தி.மு.க. தொண்டர்களைவிட உங்கள் கட்சித் தொண்டர்கள்தான் அதிகம் கலந்து கொண்டதாகச் செய்திகள் வந்ததே? அது உண்மையா?"

"இல்லை. இரண்டு கட்சித் தொண்டர்களும் சமமாகத்தான் கலந்து கொண்டார்கள். பத்திரிகைகள் எங்களைப் பற்றிச் செய்திகள் வெளியிடுவதில், என்ன காரணத்தாலோ நடுநிலை வகிப்பதில்லை. அதனால்தான் இப்படிப் பட்ட செய்திகள் வருகின்றன."

"விடுதலைப் புலிகள் விஷயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?"

"விடுதலைப் புலிகள் பற்றித் திருச்சி மாநாட்டில் போட்ட தீர்மானம்தான் எங்கள் நிலைப்பாடு. அதாவது தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடுகிற இயக்கம்தான் விடுதலைப் புலிகளின் இயக்கம். ஈழ மண்ணில் அவர்கள் நடத்துகிற போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். பாலஸ்தீனியர்களுக்குத் தனிநாடு என்பது எப்படிச் சரியோ, அதுபோலவே தனி ஈழம் அமைவதும் சரிதான். ஆனாலும் அவர்கள் தமிழ்நாட்டை வன்முறைக் களமாகப் பயன்படுத்தக் கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறோம்."

பேட்டி: **இளங்கோவன், ஸ்ரீநிவாசன்**



"என் காதலிக்கு அவ வீட்டிலே வேற இடத்தில் கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டாங்கன்னு கேள்விப்பட்டு நான் போறதுக்குள்ளே கல்யாணம் முடிஞ்சு போச்சு!"

"ஐயையோ அப்புறம்?"

"அப்புறம் என்ன, மாப்பிள்ளைக்கு ஆறுதல் சொல்லிட்டு வந்தேன்."


— வெ. ராஜாராமன்

"உங்க பையன் எதிர்காலத்துல பெரிய அரசியல்வாதியா வருவான் பாருங்க."

"எப்படி சொல்றீங்க?"

"ஏன்டா ஸ்கூலுக்கு வரலேன்னு கேட்டா நெஞ்சுவலி சார்'ங்கறான்!"

— சேத்தூர் அன்பழகன்




"அந்த 'ஸ்டாஃப்' இருந்தாலும் ரொம்ப மோசம்..."

"என்ன செய்தாரு?"

"நேத்து ஏன் லீவு போட்டீங்கன்னு கேட்டா, நான் லீவு போடலை. 24 மணி நேரம் லேட்டா வந்தேன் அவ்வளவுதான்னு சொல்றாரு!"

— பா. ஜெயக்குமார்





• காட்டில் வீரப்பனுடன்...

'நான் ஏன் இந்தக் காரியத்தை மடத்தனமாகக் கையில் எடுத்துக் கொண்டேன்?'

- முதல் முறையாக, நான் செய்யத் துணிந்த அந்தக் காரியத்துக்காக மனத்துக்குள் என்னை நானே கடிந்து கொண்டேன்! வெறுப்பும் விரக்தியும் கோபமும் எரிச்சலும் பதற்றமுமாக ஒரு கலவை உணர்ச்சியில் கொந்தளித்துக் கொண்டிருந்தேன்.

இடம் - ஆறாயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள 'வீரப்பன் காட்டின்' ஏதோ ஒரு இருட்டு மூலை. இரண்டாவது முறையாக நான் அரசுத் தூதுவனாகப் போயிருந்த சமயம்.

வழக்கமாக, 'வாங்க ஆசிரியரே' என்று இணக்கமாக வரவேற்கும் வீரப்பன் அன்று இல்லை. அவன் முகமும் குணமும் மாறியிருந்தன. வாயைக் கூடத் திறக்காமல், தூர இருந்து வெறும் விரலசைப்பில் என்னை அருகே வரச் சொன்ன விதம் எனக்கு விபரீதமாகப் பட்டது.

அடுத்த விபரீதம், அவன் பிணைக்கைதிகளை சங்கிலியால் கட்டி, ஒரு மூட்டை போலப் போட்டிருந்தது. என்னைப் பார்த்த மாத்திரத்தில் அந்த ஒன்பது பேரும் கதறிக் கொண்டு காலில் விழுந்தபோதுதான் அப்படித் தோன்றியது. 'நான் ஏன் இந்தக் காரியத்தைக் கையில் எடுத்துக் கொண்டேன்?'

ஜூலை 27-ம் தேதி, வீரப்பனுக்குப் பொதுமன்னிப்பு சாத்தியமில்லை என்று இரு மாநில அரசுகளும் முடிவு செய்து ரேடியோவில் அறிவித்ததுதான் விபரீதத்துக்குக் காரணம்.

செய்தி கேட்டதிலிருந்து வீரப்பன் மிருகமாக மாறத் தொடங்கி விட்டிருக்கிறான்.

ஒன்பது பேரில் ஒருவர் (ராஜு) கிட்டத்தட்ட மரணப்படுக்கையில் கிடக்க, மீதி எட்டுப் பேரில் இருவரைப் பிடித்து தரதரவென்று ஒரு பாறைக்கு இழுத்துப் போயிருக்கிறான் வீரப்பன்.

"உங்களை வெட்டி, தலையை ரோடுல வெச்சாத்தான்டா உங்க அரசாங்கத்துக்கு புத்தி வரும்!"

- அவன் கத்தியைத் தீட்டவும் அவகாசம் தராமல் உடனிருக்கும் சகா ஒருத்தன் நல்ல புத்தி சொல்லி, சற்றுப் பொறுமை காக்கச் சொல்லி அமைதிப்படுத்தியதால்தான் அந்த இருவரின் தலை தப்பியது! - இது அவர்களே என்னிடம் சொன்னது. எனக்கு, வீரப்பனின் கோபத்துக்கான காரணம் புரிந்தது.

சட்டப்படி பொதுமன்னிப்பு வழங்க

'நக்கீரன்' கோபால்

இயலாததற்கான காரணங்களோ, ஒரு குற்றவாளி தண்டிக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது என்பதோ - யாரும் மறுப்பதற்கில்லைதான். ஆனால் ஒன்பது உயிர்கள் அவன் பிடியில் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது, அவனைச் சீண்டிவிடும் விதமாக, அப்படி பகிரங்கமாக அதை ரேடியோவில் அறிவித்திருக்க வேண்டாம் என்றுதான் எனக்குத் தோன்றியது. இந்தச் சம்பவம்தான் - அந்த ஒன்பது பேரை எப்படியாவது மீட்டுவிட வேண்டும் என்கிற வெறியையும் எனக்குத் தந்தது.

"இதோ பார்! பொதுமன்னிப்பெல்லாம் சட்டப்படி சாத்தியமில்லை. செஞ்ச தப்புக்கு தண்டனை அடைஞ்சுதான் தீரணும். இப்ப மக்களோட ஒட்டுமொத்தப் பார்வையும் உம்மேல இருக்குது. இந்த ஒம்பது பேரை என்ன செய்யப் போறேங்கறதுதான் எதிர்பார்ப்பு..."

- இப்படி நான் அடிமேல் அடியாக வைத்து நான் அவனுக்கு உண்மை நிலையை விளக்க முற்பட்டபோதுதான் ஒரு 'த்ரெட்' கிடைத்தது.

• மீட்கப்பட்ட பணயக் கைதிகளுடன்...



வீரப்பனும் நானும்

1

ஐந்து கோடி பணம் கேட்டான் வீரப்பன்.

"பணமோ, மன்னிப்போ ரெண்டுல ஒண்ணுமட்டும்தான் எதிர்பார்க்கலாம். உனக்குப் பணம்தான் வேணும்னா, அது சுலபம். நான் போயிட்டு பத்து நாள்ள திரும்பி வரேன். ஆனா அது வரைக்கும் இவங்க பாதுகாப்புக்கு உத்தரவாதம்? இதோ சாகக்கிடக்கிறானே.... இவன் கதி....?"

"செத்தா செத்துட்டுப் போவட்டும்!"

அலட்சியமாகச் சொன்னான் வீரப்பன்.

"இந்தா பார்! உன் பக்க நியாயங்கள் எப்படி மக்களுக்குப் போய்ச் சேரணும்னு நினைக்கறியோ, அதே போல இப்படி நீ அநியாயமா நடந்தாலும் நான் எழுதிடுவேன். சம்மதமா?" என்றேன் கறாராக.

"எழுதிடுவியா?"

"நிச்சயமா எழுதுவேன். நான் ஒரு பத்திரிகைக்காரன். ரெண்டு பக்கமும் உள்ளதை எழுதறது தான் என் வேலை."

ஓரிரவு முழுக்க யோசித்து மறுநாள் ஒரு கைதியை மட்டும் விடுவித்து என்னுடன் அனுப்பினான் வீரப்பன்.

வீரப்பன் ஐந்து கோடி கேட்டதை நான் அரசிடம் தெரிவித்த போதே மனத்துக்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தேன். அரசு ஒரு வேளை அதற்கு ஒப்புக் கொண்டாலும் - 'பணத்துடன் சத்தியமாக நான் மறுபடி போவதில்லை' என்பதுதான் அது!

பணம் தருவதென்பது சரியான அணுகுமுறை இல்லை என்பது ஒருபுறம் இருக்க, நான் அதைக் கொண்டு போனால், 'உனக்கு எத்

தலை கமிஷன்?' என்ற கேள்வி எழுந்து விடுமே!

சரி. ஒரு தலையை மீட்டதுடன் நம் வேலை முடிந்தது என்று என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்ட சமயம் -

பணம் கொடுப்பதற்கில்லை என்று அரசு அறிவித்து விட்டது. வழக்கம் போல் பகிரங்கமாக! சுதந்தரப் பொன்விழா தினத்தை அந்த எட்டுப் பேர் உயிருக்கும் கெடு தினமாகச் சொல்லியிருந்தான் வீரப்பன்.

'அறிவிப்புகளை மட்டும் தயவு செய்து அடக்கி வாசியுங்கள். அவனைச் சீண்டிவிட வேண்டாம்' என்கிற என் வேண்டுகோள் எடுபடாமல் போயிற்று.

வேறு வழியில்லாமல் நான் அவசர அவசரமாக வீரப்பனுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"இரண்டு தரப்பிலும் முரட்டுப் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். நடுவில் எட்டு உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. அரசு தர மறுத்த பணத்தை, மக்கள் தரத்தயாராயிருக்கிறார்கள். இப்போது, நீ ஒரு பணவெறியன் என்கிற உணர்வு மட்டும்தான் அவர்களுக்கு எழுந்திருக்கிறது. ஏதாவது விபரீதம் செய்து ஒட்டுமொத்த வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வதற்குமுன் கொஞ்சம் யோசி. எட்டுப் பேரை நீ உயிருடன் விட்டால் மக்கள் மத்தியில் உன் மதிப்பு, எப்படி உயரும் என்று யோசித்துப் பார்..."

இப்படியொரு கடிதம் எழுதி, அதை ரேடியோவில் படிக்கச் செய்ய யோசனை வந்தது தான் பெரிய விஷயம். என் வெற்றியின் ஆரம்பம் இது. அதைப் பூரணமாக முடித்து வைத்தது - வீரப்பன் அல்ல; கர்நாடக முதல்வர் ஜே.எச். பாட்டீல்!

வீரப்பனுக்கு அவனைப் பற்றிய தகவல்கள், பத்திரிகைச் செய்திகள், அரசியல்வாதிகளின் அறிக்கைகள் எதுவாயினும் உடனுக்குடன் போய்ச் சேர்ந்து விடும். அதற்காக அங்கே கிராமப்புறங்களில் ஒரு கோஷ்டியே இயங்கிக் கொண்டிருக்கிறது. அவனே தவறாமல் ரேடியோ கேட்பவன்தான் என்பதாலும், அந்தத் தகவல் மனிதர்களின் உடனடி அறிவிப்பாலும் எனது இந்தக் கடிதம் அவனை விரைவாக எட்டி, ஆகஸ்ட் 16 அன்று இரவு எனக்கு அவனிடமிருந்து ஒரு கேஸட் வந்தது.

'சாணடைகிறேன். பணம் கேட்டது எனக்காக அல்ல; மக்களுக்காக..' என்ற அந்த விவரங்களெல்லாம் எல்லாருக்கும் தெரியும்.

எப்படியும் எட்டுபேரை மீட்டு விடலாம் என்கிற நம்பிக்கையை மீண்டும் என்னுள் விதைத்தது அந்த கேஸட்தான். உடனடியாக அரசைத் தொடர்பு கொண்டு, விவரம் சொல்லி, அவனது கோரிக்கைகளில் சிலவற்றை (?) நிறைவேற்றுவதாக உறுதி வாங்கிக் கிளம்பும் போது, பிரச்னை வேறு விதத்தில் கண்ணை உருட்டி விழித்தது!

எனக்குக் காட்டுக்குள் போவதில் இருந்த பயங்கரத்தை விட, வீரப்பனைச் சந்திப்பதில் இருந்த சவாலை விட, வேறொரு விஷயத்தில் தான் பெரிய சிக்கல் இருந்தது!

அது - போலீஸ்!

நூற்றுக்கணக்கான போலீஸார் வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் அங்கே மலைப் பகுதிகளில் கூடாரமிட்டு சுகவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை கோடி பணம் அவர்களுக்காக ஒதுக்கப்படுகிறது! எத்தனை வசதிகள்! சுக, சௌகரியங்கள்! வீரப்பன் மாட்டி விட்டாலோ அத்தனையும் போய்விடுமே!

ஆகவே என்னை வழியிலேயே மடக்கி, தீர்த்துவிடுவது என்று அதிரடி போலீஸ் தரப்பில் முடிவு செய்திருப்பதாக எனக்கு ஒரு இன்



ஃபார்மர் மூலம் தகவல் வந்தது.

எனக்குத் தகவல் தந்த அந்த இன்ஃபார்மர் ஒரு தொலைபேசித்துறை ஊழியர். போனில் போலீஸ்காரர்கள் பேசியதைக் கேட்டு, அங்கிருந்த என் நிருபர் மூலம் தகவல் சொன்ன அந்த இளைஞர் என்ன ஆனார் தெரியுமா?

அவரைக் கண்டு பிடித்துவிட்ட போலீஸார், உயிர்போகும் அளவுக்கு அடித்து, ஓடையில் வீசி விட்டார்கள், இறந்து விட்டதாக நினைத்து! அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய அவர் இன்றும் கோயமுத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

போலீஸாரின் திட்டம் இதுதான்: வீரப்பனால் பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஒன்று செத்தேசல்.

இந்த செத்தேசல் கிராமத்தவரால்தான் வீரப்பனின் மனைவி போலீஸிடம் பிடிபட்டாள். அந்த ஆத்திரத்தில், இந்த கிராமத்தைச் சேர்ந்த ஏழு பேரைக் கொன்று தீர்த்தான் வீரப்பன். வீரப்பனை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்று காத்திருந்த இந்த கிராமத்தவர்களைக் கொண்டே, என்னைக் கொல்ல வழி திட்டியது போலீஸ். இந்தத் திட்டத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டது, அங்கே அதிரடி போலீஸ் பிரிவின் எஸ்.ஐ.யாக உள்ள மோகன் நவாஸ்.

நான் மூன்றாவது முறையாக அரசுத் தூதுவராகக் கிளம்பிவிட்ட நேரத்தில் சத்தியமங்கலத்திலிருந்து என் நிருபர் மூலம் இந்த ரகசியத் திட்டம் எனக்கு வந்து சேர, "நான் போகவில்லை என்று சி.எம்மிடம் சொல்லி விடு" என்று என் இணை ஆசிரியர் காமராஜிடம் சொல்லிவிட்டேன்.

முதல்வர் விஷயமறிந்ததும் அதிர்ச்சி கொண்டார். எட்டுப் பேர் மீளப் போகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, போனஸாக வீரப்பனும் சரணடைய முன் வந்திருக்கிறான் என்பது சாதாரண விஷயமா?


"உங்களுக்கு என்ன உதவி வேண்டும் சொல்லுங்கள்" என்றார் முதல்வர்.

"எஸ்.ஐ. மோகன் நவாஸை உடனடியாக டிரான்ஸ்ஃபர் பண்ணுங்கள்!"

அப்படியே ஆயிற்று!

பிறகுதான் நான் கிளம்பி ஈரோடுக்குச் சென்றேன்.

போகும் போது இரு மாநில அரசுகளும் என் உயிருக்கு உத்தரவாதம் தந்திருந்தும் நான் போலீஸிடம் அதிக எச்சரிக்கையாக இருக்க முடிவு செய்து கொண்டேன். ஏனெனில் அதிரடி போலீஸைப் பொறுத்தவரை வீரப்பன் அவர்களது நிஜ எதிரி அல்ல! நக்கீரனும் கோபாலும்தான்!



"நம்முடைய பகுத்தறிவு மகா நாட்டுக்கு இவ்வளவு பேர் வருவாங்கன்னு எதிர்பார்க்கலை. என்ன கூட்டம்... என்ன கூட்டம்!"

"சும்மா இருங்க தலைவரே... உங்க கண்ணே பட்டுடப்போவுது."

— ஆர்.ஆர். தமன்

ஒவ்வொரு முறையும் போலீஸுக்குத் தெரியாமலே (அரசு தூதுவராகச் சென்ற போதும் கூட!) நான் காட்டுக்குள் சென்று வீரப்பனைச் சந்தித்து விட்டுத் திரும்புவது அவர்களுக்கு பயங்கர எரிச்சல் தந்திருந்தது. இம்முறை நான் வரக் கூடிய பாதைகளை கவனமாகக் கண்காணித்துக் காத்திருந்தார்கள்.


எப்போதும் நான் செக் போஸ்டுகளைக் கடப்பதில் கவனமாக இருப்பேன். ஆங்காங்கே இன்ஃபார்மர்கள் மூலம் செக்போஸ்ட் திறந்திருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டுதான் கிளம்புவேன்.

இம்முறை சற்றே அசந்துவிட, மாலை 6½ மணிக்கு சத்தியமங்கலம் செக்போஸ்டை அடைந்தபோது, அது மூடியிருந்ததைக் கண்டு அதிர்ந்தேன். செக்போஸ்டில் என்னை எதுவும் செய்து விட முடியாதுதான். ஆனால் நான் அங்கிருந்து நகர்ந்து அடுத்த செக்போஸ்டை அடைவதற்குள் விஷயம் போலீஸுக்குப் போய் அவர்கள் பின் தொடர ஆரம்பித்து விடுவார்கள்!

வேறு வழியில்லை. யார் தடுத்தாலும் நிறுத்தாமல் போய்விடு என்று டிரைவருக்குச் சொல்லிவிட்டு, முகத்தை மறைக்கும் குரங்கு குல்லாவை அணிந்து கொண்டேன்.

இம்மம் கடக்கையில் இன்னொரு பூதாகரப் பிரச்னை! வழியில் ஒரு பெரிய காட்டு யானை! சாலையில் எங்கள் காருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு அசைந்து அசைந்து...

"யானை வருது.. ஓடு, ஓடு!" எங்கிருந்தோ ஒரு ஆதிவாசி குரல் கொடுத்தபடி ஓடி வந்தான். சரியான மழை. பயங்கரமான இருள். யானையை ஒரே வீச்சில் கடந்து, அடுத்தடுத்த செக்போஸ்டுகளில் டிமிக்கி கொடுத்து விட்டு எங்கள் கார் சீறிப் பாய்ந்து தாளவாடியைக்



"அந்த ஆள் படா கில்லாடியா இருப்பான் போலிருக்கு?"

"எப்படி சொல்றே?"

"ஆயிரம் ரூபாய் கடனா கொடுன்னு போன மாசம் கேட்டான். இந்த மாதம்தான் கொடுத்தேன். அதுக்கு வட்டியோட கொடுக்கறான்!"

— வெ. ராஜாராமன்

கடந்தது.

நட்ட நடு சாலையில் ஒரு சோற்றுப் பானை போட்டு உடைத்திருக்கும். அதுதான் வீரப்பன் சொல்லியிருந்த இட அடையாளம். மழையிலும் இருட்டிலும் அந்த இடத்தைத் தேடி அடைய, நள்ளிரவாகியிருந்தது! சாலையில் காரை நிறுத்துவதோ, இறங்கி நிற்பதோ நல்லதல்ல. யாராவது ஒரு கிராமத்தான் பார்த்து, அடுத்த செக்போஸ்டில் தகவல் தந்தாலும் போயிற்று!

காரை வேகம் குறைத்து நாங்கள் இறங்கிக் கொள்ளவும், கார் பறந்து விட்டது.

இருள், பேய் மழை! சட்டென்று சரிவிலிருந்து எங்களை அழைத்த குரலை அடையாளம் கண்டு கொண்டேன்.

சேத்துக்குளி கோவிந்தன்! வீரப்பனின் முதல் தளபதி. எங்களை அழைத்துப் போக முக்கியமான நபரான இவனே வந்திருக்கிறானென்றால் விபரீதம் ஏதோ இருக்கிறது என்பது புரிந்தது. அவனிடமே அதைக் கேட்ட போது, "இந்த ரூட்லே யானை தொந்தரவு அதிகம். அதான் அண்ணன் என்னயவே அனுப்பினாரு..."

மறுநாள் காலை எட்டு மணி வரை நடந்து வீரப்பனை அடைந்தேன். முடியெல்லாம் வெட்டி, ஷேவ் செய்து, ட்ரிம்மாக இருந்தான் வீரப்பன். சரணடையத் தயாராகி விட்டான் என்றுதான் நினைத்தேன். இம்முறை ஆரவாரமான வரவேற்பு, மான்கறி விருந்து என்று ரகளையான உபசாரம்தான். ஆனால் பேச்சுவார்த்தைதான் மணிக்கணக்கில் நீண்டு கொண்டே போனது!

'வீரப்பனுக்கு மன்னிப்பே கூடாது' என்று ஜெயலலிதா காரசாரமாக விட்டிருந்த அறிக்கை, பிரேமானந்தா வழக்குத் தீர்ப்பு இப்படிப் பல சங்கதிகள் அவனைப் பதுங்க வைத்தன. ஒரு கட்டத்தில், "நீ போயி இந்திரஜித் குப்தாவாண்ட கையெழுத்துப் போட்டு லெட்டர் வாங்கிட்டு வந்தாத்தான் ஆச்சு!" என்று விடாப்பிடியாக நின்றான்.

சரணடைகிறேன் என்று முன்வந்தவன் ஏன் மீண்டும் முருங்கை மரம் ஏறுகிறான் என்று குழம்பினேன். காரணத்தை அவனே சொன்ன போது அதிலேயே எனக்கொரு ஹாப்-ஹேறால் கிடைத்து விட்டது!

"பாட்டீல் என்னா சொல்லிருக்காரு பாரு. எட்டுப் பேரை வீரப்பன் கொன்னா, கொன்னுட்டுப் போறான். அவங்க குடும்பத்துக்கு ஒரு லட்சம் தந்து விஷயத்தை முடிச்சிருவோம்னுருக்கார் பாரு...!" பேப்பரைக் காட்டினான்.

"நம்ம உயிருக்கு ஒரு உத்தரவாதமும் இல்லியே? நான் எப்படி சரணடையறது?"

நான் எந்தச் செய்திகளை அவனிடம் மறைக்க வேண்டும் என்று நினைத்தேனோ, அதையெல்லாம் அவன் என் கண்முன் நீட்டி நீட்டிப் பேசியது அதிர்ச்சியாக இருந்தது. இவன் இப்போது சரணடைய முன்வர மாட்டான் என்று தோன்றியது. சரி, வந்த காரியத்தையாவது பார்ப்போம் என்று, "இதோபார்! நீ புடிச்சி வெச்சிருக்கற எட்டு பேரும் கர்நாடகாக்காரங்க. நீ ஏற்கெனவே கொன்னவங்களும் நிறையப் பேர் கர்நாடகாக்காரங்கதான்! இப்ப கர்நாடகா முதல்வரே எட்டு பேர் உயிர் போனா போகட்டுங்கற மாதிரி அறிக்கை விட்டிருக்கப்ப, நீ இவங்களை ரிலீஸ் பண்ணா, அவங்களுக்கு உயிர்ப்பிச்சை தந்தா மாதிரி ஆவும். கர்நாடகா மக்களும், முதல்வரை விட இந்தக் கொலைகாரன் பரவாயில்லைப்பான்னு உன் பக்கம் அனுதாபப்படுவாங்க. யோசி" என்றேன்.

இரவெல்லாம் யோசித்தான். மறுநாள் காலை என் கையைப் பிடித்துக் கொண்டு, "நீங்க ஜெயிச்சிட்டீங்க. கூட்டிட்டுப் போங்க" என்றான். இன்னொன்றும் சொன்னான் : "உங்க மனசு குளிர்றபடி நான் நடந்துக்கிட்டேன். என் மனசும் குளிரணும். அது உங்க கையிலதான் இருக்கு..."

வீரப்பன் மனசு...


அப்படி ஒன்று இருக்கிறதா?

திரும்பி வரும் வழியெல்லாம் அதே யோசனைதான். அவனை முதன் முதலாக சந்தித்த ஞாபகம்...

அடேயப்பா!

அன்று பார்த்த வீரப்பன் எப்படி இருந்தான்!

(தொடரும்)





1997 செப்டெம்பர் 14
ஈசுவர ஆவணி 29
மலர் : 56
இதழ் : 7

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




கலெக்டர்கள் மாநாடு; கருணாநிதியின் கோபம்!

மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பிடித்து விளாசியிருக்கிறார் முதல்வர். 'வளர்ச்சிப் பணிகளும் நலத்திட்டங்களும் டிசம்பர் மாதத்துக்குள் நிறைவுபெற வேண்டும். அவற்றுக்காக ஒதுக்கிய தொகையில் 17.5 சதவிகிதம்தான் செலவழிக்கப்பட்டுள்ளது. இது மிகுந்த அதிருப்தியளிக்கிறது. நிர்வாகச் சீர்கேட்டை சரிசெய்யவே முடியாது என்கிற சாக்குப் போக்கையெல்லாம் இனி ஏற்க முடியாது. கடும் உழைப்பினால் சிறந்த பயன்களை அடைய முடியும். எனவே ஓயாமல் உழைத்து, தமிழகத்தை இந்தியாவின் முன்னணி மாநிலமாக மாற்றுங்கள்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

முதல்வரின் தார்மீகக் கோபமும் தமிழகத்தின் முன்னேற்றத்தில் அவர் கொண்டுள்ள அக்கறையும் வரவேற்புக்குரியவைதான். இந்தக் கோபத்தினிடையே, மாநில திட்டக் கமிஷன் தலைவர் பதவியிலிருந்து சமீபத்தில் 'உதிர்க்கப்பட்ட' பொருளாதார நிபுணர் எல்.ஸி.ஜெயின் சுட்டிக்காட்டிய சில விஷயங்களையும் முதல்வர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாநில பஞ்சாயத்து சட்டத்தில் ஒரு திருத்தத்தை அண்மையில் கொண்டுவந்தது தி.மு.க. அரசு. அதன்படி மாவட்ட திட்டக் குழுக்களுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு கலெக்டர்களுக்கு வழங்கப்பட்டது. ஜெயின் இதை ஆட்சேபித்தார். மாவட்ட ஆட்சிக் குழுக்களின் தலைமையை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்தான் வகிக்க வேண்டும் என்பது



அவர் வாதம். அதிகாரப் பரவலாக்கல் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டன பஞ்சாயத்து அமைப்புகள். அவற்றின் செயல்பாடு சிறப்பாக அமைய வேண்டுமானால், அந்தந்த மாவட்டங்களின் பஞ்சாயத்துத் தலைவர்களிடமோ முனிசிபல் தலைவர்களிடமோதான் தலைமைப் பொறுப்பு தரப்பட வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார். ஆனால், சட்டத் திருத்தமோ கலெக்டர்களைத் தலைவர்களாக்கி, பஞ்சாயத்துத் தலைவர்களை அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக்கியது. 'இது பஞ்சாயத்து அமைப்புகளின் நோக்கத்தையே வீழ்த்திவிடும் முடிவு' என்றார் ஜெயின். இதை அரசுக்குத் தெரிவித்து, அவர் எழுதிய கடிதத்துக்கு ஒரு பதில் கூட கிடைக்கவில்லை.


கொள்கையளவில் முரண்பட்ட அரசுடன் இணைந்து செயல்பட முடியாத ஜெயின், அதன்பின் நடந்த மாநில திட்டக் கமிஷன் கூட்டத்துக்குப் போகவில்லை. இப்போது, தமது பதவியிலிருந்து நீக்கப்பட்டும் இருக்கிறார்!

அனுபவசாலியும் வளர்ச்சிப் பொருளாதார வல்லுனருமான எல்.ஸி. ஜெயின் சுட்டிக்காட்டியதை தமிழக அரசு ஏன் ஏற்கவில்லை?...

மாவட்ட திட்டக் குழுக்களின் தலைமையைப் பஞ்சாயத்து அல்லது முனிசிபல் தலைவர்களிடம் ஒப்படைப்பதில் என்ன தயக்கம்...?

இன்று அந்த உள்ளாட்சித் தலைமைப் பொறுப்புகளை வகிப்பவர்கள் அனேகமாக அரசியல் கட்சிக்காரர்கள்தான். அந்தந்த மாவட்டங்களுக்கு திட்டக் கமிஷன் ஒதுக்கும் நிதி, முறைகேடாகக் கையாளப்பட்டு விடும் என்கிற அச்சம் முதல்வருக்கு இருந்திருக்கக்கூடும்.

கட்சி அரசியலும் பொதுப்பணக் கையாடலும் இணைபிரியா 'நண்பர்'களாகிவிட்ட ஒரு பரிதாப நிலையை இன்று நாம் பொதுவாழ்வில் பார்க்கிறோம். இந்த நிலை காரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களையே திட்டப் பணிகளுக்குப் பொறுப்பாக்கும் முடிவுக்கு முதல்வர் தள்ளப்பட்டிருக்கக்கூடும். எல்.ஸி.ஜெயின் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் முறையான பதில்



சொல்ல முடியாமலிருந்ததற்கும் இதுவே காரணமாயிருந்திருக்கலாம்.

கலெக்டர்கள் மாநாட்டில் முதல்வரே சொல்லியிருப்பது போல, வரலாறு காணாத வகையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவ்வாண்டு நிதியொதுக்கப்பட்டுள்ளது. ஆனால், கலெக்டர்கள் பொறுப்பில் விடப்பட்ட அந்த நிதி, உரிய வேகத்தில் செலவழிக்கப்படவில்லை; பலனும் பெற்றுத் தரவில்லை. உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள்; ஆனால் திட்டங்களை அமுல்படுத்தும் பொறுப்பும் பொருளாதார அதிகாரமும் அவர்களுக்கு இன்னும் போய்ச் சேரவில்லை....

காசிக்குப் போயும் கருமம் தொலையவில்லை என்கிற இந்த நிலை மாற வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் இருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து கட்சி அரசியலைப் பூண்டோடு ஒழித்தாக வேண்டும். இது இன்று சொல்லப்படும் புதிய யோசனை அல்ல... இன்று எல்லா அரசியல் கட்சிகளுக்கும் ஏற்புடைய தலைவரான அண்ணா, பல ஆண்டுகளுக்கு முன்பே சொன்னதுதான்.

உள்ளாட்சித் தேர்தல்களிலிருந்து கட்சி அரசியல் களையப்பட்டால்தான் அந்தந்த பகுதிகளில் மக்களால் மதித்துப் போற்றப்படும் மெய்யான தலைவர்கள் பதவிக்கு வருவார்கள். தங்கள் ஊர்ப் பெருமையைப் போற்றும் இவர்களுக்கு, 'போட்ட பணத்தைத் திரும்ப எடுக்கும்' உள்நோக்கமெல்லாம் இருக்காது என்பதால் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி, முறையாகச் செலவாகிப் பயன்தர வாய்ப்பு உண்டு.

மாறாக, கட்சி தாதாக்கள் உள்ளாட்சித் தேர்தல் களத்தில் குதிக்கும்போது, உள்ளூர் பெரிய மனிதர்கள் 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிவிடுவார்கள். உள்ளாட்சி அமைப்புகள் கட்சிக்காரர்களின் கோட்டையாக மாறிப் போகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் சூடு பறக்கப் பேசிய முதல்வர், இது குறித்து ஆற அமர யோசிக்கட்டும்!

தில்லி நியூஸ்

சந்திரசேகரின் புதுக் கணக்கு!

● விடுதலைப் பொன் விழாவை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் நான்கு நாள் சிறப்புக் கூட்டம் நடத்த முடிவு செய்து அது ஆறு நாட்களாக நடைபெற்றது. 22 மணி நேரம் தொடர்ந்து அவை நடைபெற்றதாகப் பெருமையோடு சொன்னார்கள். அதில் -



● பெரும்பாலான இருக்கைகள் காலி. பேச வேண்டியவர்கள் மட்டுமே அவையில் இருந்தனர். ஒரு வேளை, தொலைக் காட்சியில் நேரடியாக ஒளிபரப்புவதை நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது. நாம் இல்லாவிட்டால் என்ன என்று எண்ணி விட்டார்களா அல்லது, வழக்கமான கூச்சல், சத்தம் எதுவுமில்லாத அவையில் உட்கார்ந்து போரடித்துவிட்டதா?

● பெரும்பாலும் தலைவர்கள் மட்டுமே பேசக்கேட்ட நாடாளுமன்றத்தில், உறுப்பினர்களின் குரலையும் கேட்க முடிந்தது. பேச விரும்புவோரின் பட்டியல் நீண்டு கொண்டே போக, விடிய விடிய கூட்டம் தொடர்ந்தது. ஒவ்வொருவருக்கும் பத்து நிமிடங்கள். ஆனால், மைக்கைப் பிடித்தவர்கள் சுலபமாக விடுவதாயில்லை (பழக்கதோஷம்!) இதற்கு காங்கிரஸ் எம்.பி. ஒருவர் தீர்வு சொன்னார்: தொலைக் காட்சி கேமராவை நிறுத்திவிடுங்கள். எல்லாரும் பத்து நிமிடங்களுக்குள் முடித்து விடுவார்கள்! நல்ல யோசனை. ஆனால் செயல்படுத்தவில்லையே.

● வேலையின்மை, வறுமை, படிப்பறிவின்மை பற்றி பலரும் பேசினர். 'சிவப்பு நாடாத்'தனம் பற்றிப் பேசியவர் - காங்கிரஸ் எம்.பி. சுப்பராமி ரெட்டி. ஆறு மாதங்கள் கூட கோப்புகள் தீண்டப்படாமல் கிடக்கின்றன என்று கூறி, தலையாய பிரச்னை சிவப்பு நாடாத்தனம்தான் என்றார் அவர். திரைப்படத் தயாரிப்பாளரான சுப்பராமி ரெட்டி, தம் 'விவேகானந்தா' திரைப்படத்தை நாடாளுமன்றத்துக்கு அர்ப்பணிப்பதாகக் கூறினார். அவை காலியாக இருந்ததால் கைதட்ட ஆளில்லை.

● நாட்டில் 95 சதவிகிதம் தூயவர்கள்தான். எனவே ஊழல் தலையாய பிரச்னையல்ல(!) என்று முன்னாள் பிரதமர் சந்திரசேகர் பேசியதுதான் ஆச்சர்யம். ஊழல் செய்கிற ஐந்து சதவிகிதத்தினர் தானே நாட்டை ஆள்பவர்களாக இருக்கிறார்கள். இந்த எளிய கணக்கு மறந்துவிட்டதா அல்லது ஜெயப்பிரகாஷரின் சீடராக இருந்தவர் சந்திராசாமியின் நண்பராக ஆனதன் விளைவா?

● நாடாளுமன்ற மேலவைக்கு 12 புதிய உறுப்பினர்களை குடியரசுத்தலைவர் நியமனம் செய்தார். இந்த 12 பேரும் முழுக்க குஜ்ரால் தேர்வுதான். வெறும் தலையாட்டிகளாக இல்லாமல், தலைக்குள் இருப்பவர்களாகப் பார்த்து நியமித்திருக்கிறார். பரவாயில்லையே. குஜ்ராலுக்கு தைரியம் வந்து விட்டதே.

● சாலையில் செல்லும் மற்ற வாகனங்களையும், பாதசாரிகளையும் பதறவைத்தபடி பறந்து செல்லும் நீலநிற டவுன் பஸ்களை தில்லிக்கு வந்தவர்கள் பார்த்திருக்கலாம். விபத்து ஏற்படுத்துவதில் முதலிடத்தைப் பெற்றவை இவை. அண்மையில் ஒரு ப்ளூலைன் பஸ்ஸின் சாகசத்தை நேரில் அனுபவித்தவர் தில்லி முதல்வர் சாஹிப் சிங் வர்மா. அவருடைய காரும், காவலர்களின் காரும் ஒரு சிவப்பு விளக்கில் நின்றிருந்தன. வழக்கம்போல வந்த ஒரு ப்ளூலைன் பஸ் பின்னால் நின்ற மாருதி மீது மோத, மாருதி காவலர்களின் காரில் மோத, அது முதல்வரின் காரில் மோதியது. முதல்வருக்கு அடிபடவில்லை. இனியாவது ப்ளூ லைன்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று எதிர்பார்க்கிறார் தில்லிவாசி. முதல்வருக்கு இருந்த அதிர்ஷ்டம் எத்தனை பேருக்கு இருக்கும்!

● ஐந்தாவது ஊதியக் கமிஷனில் அதிருப்தி கொண்ட அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறார்களாம். அதற்கு முன்னால், 'விதிகளின்படி வேலை Work to Rule' செய்வார்களாம். 'அப்பாடா - இனியாவது வேலை செய்வாங்களே' என்று நிம்மதியடைகிறார் விவரம் தெரியாத சாமானியர்.

புதுதில்லியிலிருந்து : **புதியவன்**



கூந்தலுக்கு
எரிகா
இரட்டை
பாதுகாப்பு
ERRICA
ERRICA
ERRICA
எரிகா
ஹெர்பல் ஹேர் ஆயில்
ஹெர்பல் ஷாம்பு
ஆரோக்கியமான கூந்தலுக்கு ....எரிகா மட்டுமே
Dales
A Quality Product from:
DALE CARE, Pondicherry - 605 013.
Available at all leading
Medical Shops and General Stores
in Tamil Nadu & Pondicherry

இந்திய கிரிக்கெட்:

மோசமான நிலைக்கு யார் காரணம்? தேர்வுக்குழுவா? ஆட்டக்காரர்களா?



• மூர்த்தி

மோதுகிறார்கள்:

இந்திய கிரிக்கெட் அணியின் ஆட்டம் மோசத்தின் சிகரத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், இதற்கு அடிப்படைக் காரணம் தேர்வுக் குழுதான் என்று வாதிடுகிறார் பரத்குமார். இல்லை; ஆட்டக்காரர் களைத்தான் குறை சொல்ல வேண்டும் என்கிறார் மூர்த்தி. இனி மோதலின் ரன்னிங் காமெண்டரி....

பரத்குமார்: இந்த அளவு இந்திய அணி மோசமடைந்ததற்கு. இந்தியாவில் கிரிக்கெட் திறமை இல்லாமல் போய்விட்டது என்று நான் சொல்ல மாட்டேன். நிறைய பொடன்ஷியல் இருக்கவே செய்கிறது.

மூர்த்தி: நான் அதை ஒப்புக் கொள்ள மாட்டேன். சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்?

பரத்குமார்: சட்டியில் நிறைய இருக்கிறது என்பதுதான் என்

னுடைய வாதம். ஆனால் அகப்பை சரி யில்லை: ஓட்டை. அதனால் சட்டியில் இருப் பது அகப்பையில் வரவில்லை. தேர்வுக் குழு வினர் சரியில்லை. அங்கே பாலிடிக்ஸ், சொந்த விருப்பு, வெறுப்புகள் விளையாடுகின்றன. அது கிரிக்கெட் டீமை பாதிக்கிறது. விளைவு? மோசமான பர்ஃபாமன்ஸ்.

மூர்த்தி: நம்ம ஆட்டக்காரர் களுக்குப் பணத்தில்தான் குறி. ஃபிஸிக்கல் ஃபிட்னஸ் பற்றி ஒருவரும் கவலைப்படு வது கிடையாது. இந்திய அணியின் ஃபிஸியோ தெர பிஸ்ட்டான டாக் டர் அலி இரானி என்ன சொல்லி யிருக்கிறார் தெரி யுமா? நம் ஆட் டக்காரர்களில் அஸாருதீன் தவிர மற்ற எல் லோருமே ஓவர் வெயிட்டாம்.

பரத்குமார்: மற்ற எல்லா ரும் ஓவர் வெயிட் என்று தெரியு மில்லையா? அப்புறமும் அவர்களை செலக்ட் பண்ணினது யார்? செலக்‌ஷன் கமிட்டிதானே? அப்போ, அவர்கள்தானே இந்திய அணியோட மோசமான பர்ஃபாமன்ஸுக்குக் காரணம்?

மூர்த்தி: திறமையான ஆட்களை நிறைய செலக்ட் பண்ணி வெயிட்டிங் லிஸ்ட்ல வைக் கணும். டீம்ல சரியா ஆடலைன்னா நம்மளை உடனே தூக்கிடுவாங்கன்னு ஆடறவங்களுக்கு ஒரு பயம் இருக்கணும். ஆஸ்திரேலியாவுல, தென் ஆப்ரிகாவுல எல்லாம் கிரிக்கெட் டீமோட பெஞ்ச் ஸ்டிரெங்த் (அணியில் இடம் பெற காத்திருக்கும் தகுதியானவர்கள்) நல்லா டெவலப் ஆகியிருக்கு. இங்கே அதுமாதிரி இல்லை. எனவே, ஆட்டக்காரர்கள், மனகல பயம் இல்லாம போயிட்டது.

பரத்குமார்: செலக்‌ஷன் கமிட்டியில கோட்டா ஸிஸ்டம் மாதிரி வந்தாச்சு. அப்புறம் எப்படி டீம் உருப்படும்? இந்திய அணியா? கர்நாடகா அணியான்னு சந்தேகப்படற அள வுக்கு, மெஜாரிடி ஆட்டக்காரர்கள் கர்நாட காவிலே இருந்து செலக்ட் ஆனாங்க. விஸ் வனாத் புண்ணியம் கட்டிக்கிட்டாரு. இதை கவனிக்கிற மற்ற செலக்‌ஷன் கமிட்டி உறுப் பினர்கள், நாமும் நம்ம ஆளுங்களை உள்ளே அனுப்பலாமேன்னு நினைக்கிறாங்க. மொத் தத்துல பாதிக்கப்படறது இந்தியன் டீம்தான்!



* பரத்குமார்

மோதுகிறார்கள்:

மூர்த்தி: நம்ம ஆட்டக்காரர்கள் பாகிஸ்தான், ஸ்ரீலங்கா டீம் போல ஜெயிக்கணும் என்கிற வெறியோட ஆட றதில்லை. கிரிக்கெட்லதான்னு இல்லை, டென் னிஸ், ஹாக்கி எல்லாத்துலயும்தான். முதல் ரெண்டு, மூணு விக்கெட் விழுந்திட்டாப் போதும். வரிசையா விக்கெட்கள் மடமடன்னு சரிந்து, பெவிலியனுக்கும், பிச்சுக்கும் மார்ச் பாஸ்ட்தான் நடக்குது. நம்மளோட மிடில் ஆர் டர் சரியில்லை. ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா அணிகள்ல, மிடில் ஆர்டருக்கு என்றே ஸ்பெஷலைஸ் பண்ணின பாட்ஸ்மென்கள் இருக்காங்க. ஆரம்பத்துல விக்கெட்கள் விழுந் தாலும், இவர்கள் போனவுடன் சரிவைத் தடுத்து நிறுத்தி, ரன்களை எங்கேயோ கொண்டு போய் விடுகிறார்கள்.

பரத்குமார்: நம்ம செலக்‌ஷன் பிராஸஸே ரொம்பத் தப்பு என்பேன் நான். பரீட்சை எழு திட்டு, ரிசல்ட்டு என்ன ஆகுமோன்னு



''வாடகை கேட்கப் போகிற போதெல்லாம் அந்தாளு எப்படியோ மாயமா மறைஞ்சிடறார்!''

''இதுக்குத்தான் சொன்னேன் மேஜிக் புரொபஸருக்கு வீட்டை வாடகைக்கு விடாதீங்கன்னு!''

— உ. ராஜாஜி

சஸ்பென்ஸுடன் காத்திருக்கிற மாணவர்கள் மாதிரி, சீரிஸ் ஃபைனலைஸ் ஆனவுடன் நாம டீமில இடம் பெறுவோமா மாட்டமான்னு ஒவ்வொரு பிளேயருக்கும் சஸ்பென்ஸ். அது மட்டுமா? லிஸ்ட்ல பெயர் இருந்தாலும், ஓரிரு மாட்சுக்கு அப்புறம் திடீர்னு டிராப் பண்ணிடுவாங்க. இந்த மாதிரி ஒரு தேர்வு முறை இருந்தா, பிளேயர்ஸுக்கு எப்படி ஒரு கான்ஃபிடன்ஸ் வரும்?

மூர்த்தி: பாகிஸ்தான் கிரிக்கெட்டர் சையத் அன்வரை இந்திய கிரிக்கெட் அணியோட பலவீனம் என்னன்னு கேட்டபோது, 'ஒரு காலத்துல இந்திய அணியோட ஸ்பின் பௌலர்களைக் கண்டா உலகமே நடுங்கும். பேடி, பிரசன்னா, சந்திரசேகர், வெங்கட் என்று உலகப் புகழ் பெற்ற ஸ்பின்னர்ஸ் இருந்த டீம்ல, இன்னைக்கு ஒரு ஸ்பின் பௌலர்கூட இல்லை; இந்தியா அதுல கவனம் செலுத்தணும்'னு சொல்லியிருக்காரு. ஒரு பாக்.கிரிக்கெட்டருக்குத் தெரியற நம்ம பலவீனம் நம்ம கிரிக்கெட் போர்டு செலக்ஷன் கமிட்டிக்குத் தெரியலையா? இல்லை தெரிஞ்சும் சும்மா இருக்காங்களா? அப்புறம் வீணா எதற்காக பிளேயர்களைக் குறை சொல்றது.

பரத்குமார்: டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கிறதுக்கு முன்னால கோச்சிங் கேம்ப் வைத்தா, எத்தனை பேர் ஒழுங்கா வராங்க? வருகிறவர்களில் எத்தனைபேர் சீரியஸா கோச்சிங்கை எடுத்துக்கறாங்க? மாட்ச்களின்போது இவங்களோட ஃபீல்டிங்கைப் பார்த்தா சிரிப்புத்தான் வருது! எத்தனை மோசமான கேம்? ஒரு ரன் கொடுக்க வேண்டிய இடத்துல ரெண்டு ரன் குடுக்கறாங்க நம்ம ஆளுங்க. எதிரணி அடிச்சு எடுக்கறது முக்கால்வாசி ரன் என்றால், கால்வாசி, நம்மளோட மோசமான ஃபீல்டிங்கால அவங்களுக்குக் கிடைக்கிறது என்றே சொல்லலாம்!

மூர்த்தி: நம்ம ஆளுங்களுக்கு கிடைக்கிற வாய்ப்பை புத்திசாலித்தனமா பயன்படுத்தி, திறமையை வெளிப்படுத்தத் தெரியலை. கிரிக்கெட் என்பது இன்று ஒரு பணம் பண்ணும் வழி. இன்டிஸிப்ளின் என்பதும் நம்ம கிரிக்கெட்டர்களுடைய ரத்தத்தில் ஊறிப் போய் விட்டது. பிளேயர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறது இப்போது சகஜமாகி விட்டதே!

பரத்குமார்: ரிடையர் ஆன நல்ல கிரிக்கெட்டர்களை செலக்ஷன் கமிட்டியில போடணும். அவங்களாலதான் திறமைகளை நன்றாக ஜட்ஜ் பண்ண முடியும்.

மூர்த்தி: விஸ்வனாத் சீனியர் கிரிக்கெட்டர்தான். அவர் புண்ணியத்துலதான், கோட்டா சிஸ்டம்ல செலக்ஷன் என்கிற விமர்சனமே ஆரம்பித்தது.

பரத்குமார்: செலக்ஷன் கமிட்டியில இருக்கிறவங்க, டீம் செலக்ட் பண்ணுகிறபோது, கேப்டனை கன்ஸல்ட் பண்ண வேண்டாமா? நம்ம செலக்ஷன் கமிட்டி ஒண்ணு கேப்டனை கன்ஸல்ட் பண்ணாது. தப்பித் தவறி கன்ஸல்ட் பண்ணாலும், அவர் சொல்கிற கருத்துக்களை, எடுத்துக் கொள்ளாது. சச்சின் டெண்டுல்கர் இதுபற்றி எப்படிப் புலம்பினார் என்பதை உலகமே அறியும். டீம் தோற்றால், மொத்தப் பழியும் கேப்டன் மீதுதானே வந்து விழுகிறது!

மூர்த்தி: புதுசு புதுசா நிறைய பேரை நம்ம டீம்லயும் டிரை பண்ணிக்கிட்டுத்தானே இருக்கோம். ஆனாலும் நம்பிக்கை நட்சத்திரமா எத்தனை பேர் இருக்காங்க? கிரிக்கெட்டர்களிடம் கன்ஸிஸ்டன்ஸி இல்லையே! செலக்டர்கள், நல்லா ஆடுவாங்கன்னு நம்பித்தானே தேர்ந்தெடுக்கறாங்க. இந்திய அணி, எக்கேடும் கெட்டுப் போகட்டும்னு யாராவது ஆட்களைத் தேர்ந்தெடுப்பார்களா?

பரத்குமார்: போர்டு, செலக்ஷன் கமிட்டி எல்லாமே பிச் பராமரிப்புன்னு ஒண்ணு இருக்கிறதையே மறந்துடறாங்க. நம்ம ஊர் பிட்ச் எல்லாம் படுமோசம். ஒழுங்கா பராமரிக்கிறது கிடையாது. பிட்ச் நல்லா இல்லாதபோது, ஆட்டக்காரர்களைக் குறை சொல்லி என்ன பயன்?

மூர்த்தி: நம்ம பௌலர்கள் பலருக்கு தோள் பட்டை ப்ராப்ளம். நாலு ஓவர் போட்டா, நாலு மாட்ச் ஆடினா அவ்வளோதான். இதே நிலைமை நீடிச்சா கூடிய சீக்கிரமே, ஹாக்கி மட்டையில ஒட்டடை படிஞ்சி மூலையில் கிடக்கிற மாதிரி, கிரிக்கெட் மட்டையிலும் ஒட்டடை படிஞ்சிடும்.

தொகுப்பு: **கௌதம்,**
படங்கள்: **ஸ்ரீஹரி**





மும்பை மசாலா:

பயத்தில் சில நட்சத்திரங்கள்...

கல்லுக்குள் ஈரம்

கடந்த வாரம் அடித்த பேய் மழையில் ஸ்தம்பித்தது மும்பை வாழ்க்கை மட்டுமல்ல, கணபதி விழாவுக்கென்று தயாராகும் பிரம்மாண்டப் பிள்ளையார்களும்கூடத்தான்! கலைஞர்களெல்லாம், திறந்த வெளியில், கணபதிகளுக்கு 'ஃபினிஷிங் டச்சஸ்' கொடுத்துக் கொண்டிருக்கையில், வந்தது வரலாறு காணாத வெள்ளம்; பிள்ளையார்களை அடித்துச் சென்றது. மும்பை, அதன் சுற்றுப்புறங்களில் மட்டும் நஷ்டம் ஆறு லட்சம்! வெள்ளம் வடிந்தபின், ஃப்ராக்சரான கைகால், தும்பிக்கைகளை ஒட்டுவதில் கலைஞர்கள் தவிப்புடன் ஈடுபட்டார்கள். இந்த ஆபரேஷன் "ஸக்ஸஸ்" ஆன பிறகு, பிள்ளையார்கள் எல்லாம் "ஸன்பாத்" எடுத்துக் கொண்டார்கள். ஈரமில்லாமலிருந்தால்தானே, வண்ணம் ஏற்றி, விழாவுக்குத் தயார் செய்ய முடியும்!

கலை உலகா? கொலை உலகா?

ஏற்கெனவே, ஷாருக்கான், ஸன்னி டியோல், ஜாக்கி ஷ்ராஃப், சத்ருகன் சின்ஹா போன்றோர் அண்டர்வேர்ல்டின் ஹிட்

லிஸ்டில் இருப்பதற்கான செய்திகள். (ஷாருக் கானின் மனைவி வேறு, இரண்டு நிமிடத்துக்கொரு முறை ஃபோன் செய்து, கணவர் பாது காப்பாயிருக்கிறாரா என விசாரித்து, கதி கலங்கிக் கிடக்கிறார்) இந்நிலையில் கமிஷனர் மென்டோன்கா, குல்ஷன் குமார் கொலைக்கு, இசையமைப்பாளர்கள் நதீம்-சரவன் ஜோடியின், நதீம்தான் காரணம் என்றொரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். அவர்தான், தங்கள் வளர்ச்சிக்கு குல்ஷன்குமார் தடையாக இருப்பதால், தாவூத்துக்கு பணம் கொடுத்து, அபுஸலீம் மூலம் இந்தக் கொலையைச் செய்வித்திருக்கிறாராம்! கலை உலகப் போட்டி, கலையை வளர்க்கப் பயன்படாமல் இப்படி கொலையை வளர்த்துக் கொண்டிருந்தால் அது எத்தனை மகா கேவலமாயிருக்கும்!

சின்னஞ்சிறு புலியே!

தண்ணீர் குடிக்க கிச்சனுக்குச் சென்றால், அங்கே நமக்கு முன்னே, ஏக தாகத்தோடு ஒரு சிறுத்தைப் புலி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் எப்படி இருக்கும்? பயத்தில் நாமே தண்ணீராகிப் போய் விட மாட்டோமா? போரிவிலியிலுள்ள, விமல்ஸ்ரீ பில்டிங்கிலுள்ள ஒரு ஃப்ளாட்டில், அப்படித்தான் நடந்தது! பக்கத்திலுள்ள சஞ்சய்காந்தி நேஷனல் பார்க்கிலிருந்து வந்துவிட்டது சிறுத்தை. காட்டிலாகா அதிகாரிகளும், பில்டிங் காரர்களும் படாதபாடு பட்டு விட்டனர். மயக்க மருந்து தோய்ந்த அம்பினால், அதைத் தூங்க வைத்து, தாலாட்டி, தாஜா செய்து, திருப்பி அழைத்துச் செல்வதற்குள் போதும் போதுமென்றாக, வேடிக்கை பார்க்க வந்த கூட்டத்துள், ஓர் ஏழு வயது இளசுக்கு சிறு காயம்; 77 வயசு பெரிசுக்கு பத்துத் தையல்கள்!


நடமாடும் விளம்பரங்கள்

மும்பையின் 'டப்பாவாலா'க்களுக்கு இப்போது புதிய ஃபேஸ் லிஃப்ட் - அவர்களும் விளம்பர மாடல்களாகி விட்டனர். ஜான்சன் & ஜான்சன் கம்பெனி, தனது மைலண்டா antacid / antigas விளம்பர ஸ்டிக்கர்களை இந்த டப்பாவாலாக்கள் கொண்டு செல்லும் "டப்பா" (மதிய உணவு)க்களின் மீது ஒட்ட, தினமும் சமையல் செய்யும் லட்சக்கணக்கான இல்லத்தரசிகளுக்கும், அதைச் சாப்பிடும் அலுவலர்களுக்கும் இந்த விளம்பர வாசகம், சரியான சமயத்தில் சென்று சேரும்! இந்த விளம்பர உத்தி புதிதாயில்லை?

'பெயர்' வாங்க வேண்டுமா?

நீங்கள் குடியிருக்கும் தெருவின் பெயரை, உங்கள் தாத்தா, பாட்டி ஒன்றுவிட்ட சித்தப்பா... இப்படியானவர்களின் பெயர்களில் மாற்றி அமைக்க வேண்டுமா? (அவர்கள் சமூக நலனில் அக்கறை உடையவர்களாகவே இருக்க வேண்டாம்!) பிடியுங்கள் உங்கள் தொகுதி கார்ப்பொரேட்டரை (கவுன்சிலர்)! அழுத்துங்கள் சில பல நோட்டுக்களை! அடுத்த நிமிடமே பெயர் மாற்றம் நிகழ்ந்து விடும்... மும்பையில்! கடந்த வருடத்தில் இப்படி இங்கே நூற்றுக்கணக்கான பெயர் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன! ஒரு சிலர் பெயர் திருத்தத்திலும் தீவிரம் காட்டுகின்றனர். ராஜா சம்பாஜி விளையாட்டரங்கம் என்ற பெயரை, சத்ரபதி சம்பாஜி என மாற்றி அமைக்கச் சொன்னார் ஒரு 'வரலாற்று மேதை'யான சிவசேனைக்காரர்! எப்படியோ... அரசியலில் பணம் பண்ண இப்படி ஒரு புது வழி!

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீ ராஜ்**



GURUDEV

சுராணா

ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்

(முந்தைய பெயர் S.U.S. ஃபைனான்ஷியர்ஸ் (இந்தியா) லிமிடெட்)

Group of Surana

1971 முதல்

இரும்பு போன்ற உறுதி, தங்கம் போன்ற நாணயம் கொண்ட குழுமத்தின் ஒரு அங்கம்.

சுராணா அளிக்கும் முதலீடு திட்டங்கள்

ஆண்டுக்கு வட்டி விகிதம் 15%

CARE
மதிப்பீட்டாளர்களால்
"போதுமான பாதுகாப்பு"
சான்றிதழ் பெற்றது.
(B B B +)

சுராணா நிறுவனங்கள் 1971 முதல் இயங்கி வருபவை. 25 ஆண்டு அனுபவம் பெற்றவை.

சுராணா நிறுவனங்கள் இரும்பு உற்பத்தி, இரும்பு வியாபாரம் முதலிய தொழில்களில் ஈடுபட்டுள்ளன. இக்குழுமம் தென்னகத்தில் இரும்பு வியாபாரத்தில் முதலிடம் வகிக்கிறது.

குழுமத்தின் மொத்த விற்பனை அளவு 1996-97-ல் ரூ.175 கோடி.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட் (SFCIL), ஹயர் பர்ச்சேஸ், லீசிங், பில் டிஸ்கௌண்டிங், ஃபாரின் எக்ஸ்சேஞ், பப்ளிக் டிபாசிட் போன்ற பல வகைப்பட்ட நிதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளது.

SCHEME 1 - FIXED DEPOSITS

Period (Months)	Rate of Interest per annum
12 24 36 48 60	15.00% (Monthly) 15.19% (Quarterly)* 15.48% (Half-yearly)*

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Minimum Amount of Deposit for Monthly Interest is Rs.10,000/-

* Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 2 - GURUDEV CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Minimum Amount (Rs.)	Maturity Value (Rs.)	Maturity Value for Rs. 1,000/-	Annual Yield% (Simple Interest)
12	3,000	3,482	1,161	16.06
24	3,000	4,042	1,347	17.36
36	3,000	4,692	1,564	18.80
48	3,000	5,446	1,815	20.38
60	3,000	6,321	2,107	22.14

1. Minimum Amount of Deposit is Rs.3,000/-
2. Addition in Multiples of Rs.1,000/-
3. Interest at 15% Compounded at Monthly rests.

SCHEME 3 - SURYODAY CERTIFICATE
(Cumulative Deposit)

Period (Months)	Principal (Rs.)	Maturity Value (Rs.)	Annual Yield% (Simple Interest)
12	862	1,000	16.01
24	742	1,000	17.38
36	639	1,000	18.83
48	551	1,000	20.37
60	474	1,000	22.19

Interest at 15% Compounded at Monthly rests.

சுராணா ஃபைனான்ஷியல் கார்ப்பரேஷன் (இந்தியா) லிமிடெட்


குரூப் ஆப் சுராணா

நெ. 16, ஒயிட்ஸ் சாலை, இரண்டாவது மாடி,
சென்னை - 600 014.
போன் : 8522595 / 8526581 / 8522753 / 8522684 / 8525396 / 8525694 / 8525596
ஃபாக்ஸ் : (044) - 8520587.

ADWAVE/SFC/5420

கிளைகள் : திருச்சி: 'TAB காம்ப்ளெக்ஸ்', முதல் தளம், 32-B, வில்லியம்ஸ் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சி-620 001, போன்: 46182?; **கொள்ளிடம்:** 7/157, மெயின் ரோடு, கொள்ளிடம்-609 102. போன்: 77454; **சங்கரன்பந்தல்:** 3/10-A, மெயின் ரோடு, சங்கரன்பந்தல்-609 308. போன்: 85423, 85536; **பெங்களூர்:** 302, 3-வது தளம், ஸ்மிவ்ஸ் காம்ப்ளெக்ஸ், 33, ரெஸ்கோர்ஸ் ரோடு, பெங்களூர்-560 001. போன்: 228143; **எர்ணாகுளம்:** 2-வது தளம், பெப்பர்மின்ட் சதன், நெ-39/4232 எம்.ஜி. ரோடு, ரவிபுரம், எர்ணாகுளம், கொச்சின்-682 016. போன்: 374617; **கோயம்புத்தூர்:** முதல் தளம், ஜெட்ரோஸ் டவர்ஸ், 424-A, டி.பி. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர், போன்: 471990 ஆகிய இடங்களில் உள்ளன.

29.9.96 தேதியிட்ட மக்கள் குரல், Trinity Mirror நாளிதழ்களில் வெளியான சட்டப்பூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி



இன்று இரவு ஆண்டியுடன் தங்க முடிந்ததே என்பதிலும், கணவனும் இன்று இருக்கிறானே என்பதிலும் கடுகத்தனை நிம்மதி ஏற்பட்டிருந்தது பேஜுக்கு.

அந்த நிம்மதி, நாய்க்குட்டியைக் கட்டி அணைத்தபடி ஆண்டி அழுதுகொண்டிருப்பதைப் பார்த்ததுமே பறந்து விட்டது.

"நீ முன்னெல்லாம் இப்படி அப்பாவோடு சண்டை போட மாட்டியே? இப்ப ஏம்மா இப்படி இருக்கிறே?" என்று அவன் மறுபடி கேட்டபோது என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு வினாடி திகைத்துப் போனாள். பிறகு கஷ்டப்பட்டுப் புன்னகை செய்து சமாளித்துக் கொண்டு, ''அது ஒன்றுமில்லை, கண்ணா. நீ குழந்தை. அதனால் தெரியவில்லை. பெரியவர்கள் எப்பவும் இப்படித்தான். ஏதாவது வருத்தம் ஏற்பட்டாலும் சரி, பயம் ஏற்பட்டாலும் சரி, அறிவில்லாமல் ஒருத்தரோடு ஒருத்தர் சண்டை போடுவார்கள். காட்டுக் கத்தலாய்க் கூச்சலிடுவார்கள். பாவம், நீ இத்தனை வருத்தப்படுவாய் என்று தெரியாது. ஸாரி,'' என்றாள்.

"இருந்தாலும் நீ அப்பாகிட்டே பேசறப்ப ரொம்பத்தான் கோபமாய்ப் பேசறே," என்றான் ஆண்டி.

'உன் அப்பா எனக்குத் துரோகம் செய்கிறார். நம் குடும்பமே சின்னா பின்னமாகி விட்டது' என்று அந்தச் சிறுவனிடம் எப்படிச் சொல்ல முடியும்?

"ஆஸ்பத்திரியில் ஆலியுடன் கூடவே இருக்கிறேன், இல்லையா? அதிலே எனக்கு ரொம்பக் கவலையாகி விட்டது. அதனால்தான் கோபம் வருகிறது," என்றாள்.

''ஏன் கவலைப்படணும்? ஆலிதான் நல்லா தூங்கிக் கொண்டு இருக்கிறாள் என்று சொன்னாயே?'' என்றான் ஆண்டி மறுபடியும். பெரியவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை அந்தக் குழந்தையால் புரிந்து கொள்ள முடியவில்லை. தான் மிகவும் நேசிக்கும் அப்பாவும் அம்மாவும் ஏன் இப்படி சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்பது அவனுடைய சின்ன மூளைக்கு எட்டவில்லை.

''என்னவோ, எப்பவும் எனக்கு உங்களைப் பற்றியெல்லாம் கவலைதான்,'' என்றாள் பேஜ். ''உன்னைப் பற்றிக் கவலை. ஆலியைப் பற்றிக் கவலை...''

''அப்பாவைப் பத்தி? அப்பாவைப் பத்திக் கவலைப்பட மாட்டியா?''

''நிச்சயமாய் அவரைப் பற்றியும்தான்,'' என்று சொல்லிவிட்டு, ஒரு கதைப் புத்தகத்தை எடுத்து அவனுக்குப் படிக்கலானாள் அவள்.

சில நிமிடங்களில் ஆண்டிக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றுவது தெரிந்தது. ''போய் அப்பாவுக்குக் குட் நைட் சொல்லிவிட்டு வா,'' என்று அவனை அனுப்பினாள்.

ஆண்டி போன போது பிராட் யாருடனோ டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தான். 'குட் நைட் அப்பா' என்று ஆண்டி சொன்னதும் 'உஹும்' உஹும்' என்று கையை மட்டுமே அசைத்துப் பதிலளித்து அனுப்பி விட்டான். கடுமையான மன உளைச்சலில் இருந்தான் அவன். பேஜின் மீது மட்டுமல்ல, ஆண்டியின் மீது கூடக் கோபம் கோபமாய் வந்தது. இன்று இரவு இங்கே வருவதற்கும் தங்குவதற்கும் ஸ்டிபானியிடம் பெரும் வாக்குவாதம் பண்ணி அனுமதி பெற்று வந்திருக்கிறான். ஆனால் இங்கே நிம்மதி கிடைக்கவில்லை. ஸ்டிபானியும் முன்போல இல்லை. தங்கள் காதல் விவகாரம் பேஜுக்குத் தெரிந்து விட்டதால் தைரியமாகச் சண்டை போடத் துவங்கியிருந்தாள்.

மூலம் : டேனியல் ஸ்டீல்

தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

ஆண்டி திரும்பி வந்ததும், 'அப்பா யாரிட்டயோ ஃபோனில் பேசிட்டிருக்கார்' என்று சொல்லிவிட்டுப் படுத்த சற்று நேரத்தில் தூங்கி விட்டான்.

ஸ்டிபானியுடன்தான் பேசிக் கொண்டிருந்திருப்பான் என்று பேஜ் ஊகித்துக் கொண்டாள். கோபத்தை அடக்கிக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள். முன்னறையில் பிராட் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. ஆனால் அவனிடம் எதுவும் பேசவில்லை. இனிமேல் பேசுவதற்கு எதுவுமேயில்லை.

பண்ணியிருந்த சமையலைப் பிராடுக்கும் ஆண்டிக்கும் போட்டு விட்டதால் எதுவும் மிச்சமிருக்கவில்லை. காப்பி மட்டும் தயாரித்துக் குடித்துக் கொண்டிருந்தாள்.

நிழலாடியது.

திரும்பிப் பார்த்தாள். வந்தது பிராட்தான். சோர்வும் வருத்தமும் அவன் முகத்தில் படிந்திருந்தன.

"என்னவோ ஒன்றும் சரியில்லை..." என்று பெருமூச்சு விட்ட அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஜீன்ஸூம் டி ஷர்ட்டும் அணிந்து பளிச்சென்று காட்சியளித்த அவனைக் கண்டதும், இவ்வளவு காலமாக அவனைப் பார்க்கும் போதெல்லாம் என்ன பரவசம் ஏற்பட்டதோ அதே பரவசம் ஒரு வினாடி ஏற்பட்டது. மறு வினாடி மறைந்தது. இல்லை, இல்லை. இவர் யாரோ அன்னியன்... பதினாறு வருடம் கணவன் மனைவியாக வாழ்ந்தபோதிலும், இரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொண்டபோதிலும், முன்பின் பழகியிராத ஒரு புதியவனைப் போல அவன் அவளுக்குத் தோன்றினான்.

சற்று முன் ஆண்டி அழுது கொண்டிருந்த



காட்சி ஞாபகம் வரவே, "ஆண்டிக்குக் கூடக் கொஞ்சம் புரிந்து விட்டது," என்றாள்.

"ஆமாம், ஒரு விபத்து என்றால்..."

"ஒரு விபத்து அல்ல. இரண்டு விபத்து."

அவன் சரேலென்று அவளைத் திகைப்புடன் நோக்கி, "இரண்டு விபத்தா?" என்றான்.

"ஆமாம். ஆலிக்கு ஏற்பட்டது ஒன்று. நமக்கு ஏற்பட்டிருப்பது இரண்டு."

"ஆலிஸன் குணமாகி விட்டால் எல்லாம் சரி செய்து கொள்ளலாம்," என்றான் பிராட்.

அவன் பேசிய விதம் அவளுக்கு ஆச்சரியம் ஏற்படுத்தியது. ஸ்டிபானியை விட்டு வர முடியாது என்று அடம் பிடித்தவர், எல்லாம் சரிசெய்து கொள்ளலாம் என்கிறாரே? மனம் மாறி விட்டாரா? இந்த இல்லறம் உயிர் பிழைப்பதற்கு இன்னமும் சாத்தியம் இருக்கிறதா? நம்பிக்கை இருக்கிறதா?

அவளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"அதாவது... நமக்குள் ஏதாவது ஓர் ஏற்பாட்டுக்கு வரலாமென்று நினைக்கிறேன்," என்றான் அவன்.

"நமக்குள் என்றால்?" சீறினாள் பேஜ். "நாமும் அந்த ஸ்டிபானியும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்கிறீர்களா? சகிக்கவில்லை. கொஞ்ச நேரம் அவள் பேச்சை எடுக்காதீர்கள். எனக்குக் குமட்டுகிறது."

பிராட் மௌனமாகத் தலைகுனிந்து கொண்டான். ஸ்டிபானியை நினைக்கையில் ஒரு பக்கம் அவனுக்கும் எரிச்சலாகத்தான் இருந்தது. ஆலிஸனுக்கு விபத்து ஏற்பட்டது முதல், அவள் தன்னை அதிகமாய் நிர்ப்பந்திப்பதாக அவனுக்குத் தோன்றியது. அதிக நேரம் தன்னுடன் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறாள். இரவு வேளைகளில் அவன் வீடு திரும்ப வேண்டும் என்று தெரிந்திருந்தும் தன்னுடன் தங்கும்படி பிடிவாதம் பிடிக்கிறாள். பேஜைக் காட்டிலும் தனக்குத்தான் அவன் அதிக சொந்தம் என்று நிருபிக்க விரும்புகிற மாதிரி இருக்கிறது...

பிராட் மேலே ஏதோ சொல்ல வாயெடுக்கு முன் பயங்கரமான கூச்சலொன்று கேட்டது – ஆண்டியின் அறையிலிருந்து.

ஒரே பாய்ச்சலில் இருவரும் ஓடினார்கள்.


படுக்கையில் எழுந்து உட்கார்ந்து அலறிக் கொண்டிருந்தான் ஆண்டி. ஏதோ கெட்ட சொப்பனம் கண்டு பயந்து போய், தூக்கம் கலையாமலே கத்திக் கொண்டிருந்தான்.

முதலில் பிராட்தான் உள்ளே சென்று அவனை அணைத்துக் கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தான். "ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. பயப்படாதே. சொப்பனம் கண்டாயா? நீ பெரிய பையனாச்சே! இப்படியெல்லாம் பயப்படலாமா? சீச்சீ!" என்றான்.

ஆனால் ஆண்டி கூச்சலை நிறுத்த நெடு நேரம் பிடித்தது. விம்மி விம்மி அழுது கொண்டே, "நாம்ப எல்லாரும் காரிலே போற மாதிரியும் கார் எதிலேயோ மோதிட்ட மாதிரியும் இருந்ததும்மா. என்னையும் லிஸ்ஸியையும் தவிர எல்லாரும் செத்துட்டாங்க. எங்கே பார்த்தாலும் ஒரே ரத்தம். கண்ணாடியெல்லாம் உடைஞ்சு கிடக்கு. நீயும் அப்பாவும் சண்டை போட்டுக்கிட்டிருந்தீங்க. அதனாலே தான கார் மோதிட்டுது..." என்றான்.

பிராடும் பேஜும் குற்றஉணர்வோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆண்டி படுத்துக் கொண்டான். படுக்கை சற்றைக்கெல்லாம் ஈரமாகியிருப்பதைக் கண்டாள் பேஜ். அவன் படுக்கையை நனைப்பது நின்று போய்ப் பல வருடங்களாகிறது. இன்று ரொம்ப ரொம்பப் பயந்திருப்பதால்தான் இப்படி.

அவனைத் தூங்கச் செய்துவிட்டுத் திரும்புகையில், "ஆலியைப் பற்றி ஆண்டி ரொம்பப் பயந்து போயிருக்கிறான்," என்றாள் பேஜ்.



"அவன் பயத்துக்கு அது மட்டும் காரண மில்லை. அது உனக்கும் தெரியும்," என்றான் அவன்.

"தெரியும்," என்று பேஜ் ஒப்புக் கொண்டாள்.

"நான் கொஞ்ச நாளைக்கு வீட்டை விட்டு வெளியே போய்த் தங்கலாம் என்று நினைக்கிறேன்."

"ஒருவழியாய் அவனுடன் போய் இருந்து விடலாமென்று பார்க்கிறீர்கள்? அப்படித் தானே?" என்றாள் பேஜ் வெடுக்கென்று.

"ஏன், நான் ஓட்டலில் அறை எடுத்துக் கொள்கிறேன். அல்லது தனியாக ஒரு வீடு பார்த்துக் கொள்கிறேன்," என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தபோது, டெலிபோன் மணி அடித்தது.

சட்டென எடுத்தாள் பேஜ். அவள் நினைத்ததுபோலவே ஆஸ்பத்திரியிலிருந்து தான் கூப்பிட்டார்கள்.

"நான் டாக்டர் ஹேமர்மேன் பேசுகிறேன்," என்றார் நியூரோ சர்ஜன்.

"என்ன டாக்டர்? சொல்லுங்கள் டாக்டர்."

"ஆலிஸனின் மூளையில் வீக்கம் பெரிதாகிக் கொண்டு வருகிறது. அழுத்தமும் அதிகமாகியிருக்கிறது...."

"அதனால்?" அவளுக்கு மார்பை அடைத்தது.

"இப்போதைக்கு உடனடியாய் அபாயம் இல்லை. ராத்திரியைத் தாண்டி விடுவாள். ஆனால் நாளைக் காலை மூளையில் ஆபரேஷன் செய்யலாமென்றிருக்கிறோம்."

"இன்னொன்றா? நாலு நாளைக்குள் இரண்டாவது ஆபரேஷனா?"

"ஆமாம்மா. வேறு வழியில்லை. ஆபரேஷன் பண்ணாவிட்டால்..."

பண்ணாவிட்டால் என்ன ஆகும் என்பதைச் சொல்லாமல் நிறுத்திக் கொள்வார் டாக்டர் ஹேமர்மேன்.

"நீங்களாவது உங்கள் கணவராவது வந்து ஆபரேஷனுக்குச் சம்மதித்துக் கையெழுத்துப் போட வேண்டும். நாளைக் காலை எட்டேகாலுக்கு வந்து விடுங்கள். பத்து மணிக்கு ஆபரேஷன்," என்று கூறிப் போனை வைத்து விட்டார் டாக்டர்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த பிராட், "மறுபடியுமா ஆபரேஷன் பண்ணப் போகிறார்கள்? கடவுளே, எவ்வளவு தடவை, எவ்வளவு தடவைதான் ஆபரேஷன் செய்வார்கள்?" என்றான்.

"ஆமாம்," என்றாள் பேஜ். "மறுபடியும் மறுபடியும் ஆபரேஷன் செய்வார்கள். அவள் மூளை நார்மலுக்கு வருகிற வரையில்.."

"வராவிட்டால்?" என்றான் பிராட். பழைய அச்சங்கள் அவனைத் திரும்ப ஒட்டிக் கொண்



''நம்ம கிரிக்கெட் வீரர்கள் சக்கைப்போடு போடறதா சொன்னீங்க... ஸ்கோர் ரொம்ப குறைச்சலா இருக்கே...''

''நான் குறிப்பிட்டது சூயிங்கம் சக்கைகளை!''

– மும்பை ஆர்.ஆர்.

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

டன.

"நார்மலுக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஆலிஸன் நம்முடைய பெண். அவளைக் கடைசி வரை காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமை."

"சரி, உன் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்," என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான் அவன். விபத்துக்கு முன்னால் இருந்த ஆலிஸனின் உருவம் அவன் கண் முன்னே நின்றது. எவ்வளவு அழகான, அற்புதமான பெண்! இப்போது குற்றுயிரும் குலையுயிருமாய், சிதைந்து, உருவமே தெரியாமல், உடம்பெங்கும் ட்யூப்களும் கட்டுகளுமாய்க் கிடக்கிற அலங்கோலம்....

பேஜ் தன் நைட் கவுனை எடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"ஆஸ்பத்திரிக்குப் போகப் போகிறாயா என்ன?" என்றான்.

"இல்லை. ஆண்டியுடன் படுத்துக் கொள்ளப் போகிறேன்."

"நீ இங்கேயே படுத்துக் கொள்ளலாம். நான் எந்தத் தொந்தரவும் கொடுக்க மாட்டேன்."

"வேண்டாம்," என்று சொல்லிவிட்டு அவள் வெளியே நடந்தாள்.

ஆண்டியின் சின்னக் கட்டிலில் அவனை அணைத்துக் கொண்டு ஒண்டிப் படுத்த போது ஓயாமல் கண்ணீர் வழிந்தது. இரவு பூரா வழிந்து கொண்டேயிருந்தது. கன்னமும் பிடரியும் நனைந்து, தலையணை சொத சொதவென்று ஈரமாகி விட்ட பின்னரும் அவளுடைய அழுகை நிற்கவில்லை.

எதெல்லாம் சாசுவதம் என்று நினைத்திருந்தாளோ அதெல்லாம் போனபின், அழுகை ஒன்றுதான் அவளுக்கு மிஞ்சியிருந்தது.

(தொடரும்)

மழை பொழியும் கணங்களில்...

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — ரூ. 1000 ஆறுதல் பரிசு பெறும் கதை - 1

ஜன்னல் கதவுகள் படீரென்று அடித்துக் கொள்கின்றன. காலண்டர் வேகமாய் சுவரில் ஊசலாடுகிறது. வீதியில் விளையாடும் சிறுவர்கள் ஆரவாரத்துடன் வீடுகளுக்குள் ஓடும் சப்தம் கேட்கிறது. வானத்தின் கருமை 'குப்பென்று' வீட்டிற்குள்ளும் படர்கிறது. புழுதியை வீசியடித்த காற்றில் மழை மணம் வீசுகிறது. மருந்தின் மயக்கத்தில் கண்ணுறங்கும் சாரதாவின் காதுகளுக்குள் புகுந்த ஈரக் காற்று சாரதாவை எழுப்புகிறது. "மழை பெய்யறதா என்ன?" புத்துயிர் பெற்றவள் போல எழமுயல்கிறாள்.

அவளுக்குப் பதிலளிப்பதைப் போல காற்று சுழன்று, வீட்டிற்குள்ளும் மழைத்துளிகள் தெறிக்கின்றன. பரபரப்பாய் கதவுகளை மூட ஓடி வருகிறாள் பணிப்பெண் குமாரி.

"டீ அத மூடாதே... கதவை நன்னாத் தொறந்து வை. சித்த என்னை வீல்சேர்ல உக்காத்தி வை... பால்கனிக்குப் போகணும்...."

"மழை சோன்னு பெய்யுது பாட்டி..."

"எத்தனை நாளா இதுக்குத் தவமிருக்கேன். சீக்கிரம் வா..." கிழவியின் பரபரப்பும் கண்களில் சுடர் விடும் ஆர்வமும் அவளுக்குப் புதிது. கடந்த பதினைந்து நாட்களாக ஜீவனற்றுக் கிடந்த முகத்தில் தோன்றும் பிரகாசம் அவளுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. மருந்தின் மயக்கமோ யோசனையோ, பாட்டி எப்போதும் கண்களை மூடிக் கொண்டு படுத்திருப்பாள். அவள் கண் விழிக்கும் போது யாரேனும் எதிரில் நின்றால் "வெயில் அதிகமா? வானம் மூடியிருக்கா?" என்று கேள்விகள் கேட்டு நச்சரிப்பாள். சில சமயம் எரிச்சலாய்க் கூட இருக்கும். ஆனால், இன்று பாட்டியின் பரபரப்பைப் பார்க்கும் போது அவள் தொடுத்த கேள்விகளுக்கு ஏதோ ஒரு காரணம் இருப்பதாய்க் குமாரிக்குத் தோன்றுகிறது.

மழை சற்று குறைந்திருக்கிறது.

சாரதா ஒரு சிறுமியின் குதூகலத்துடன் கைகளை நீட்டுகிறாள். பொட்டென்று பெரிதாய் இரு மழைத்துளிகள். அவள் உடலெங்கும் சிலிர்க்கிறது. வெகு நாள் பிரிந்த உற்றதோர் நட்பைத் தழுவும் பரவசம் அவளை ஆட்கொள்கிறது. கையைக் குவித்து மழைநீரை அருந்துகிறாள். ஜில்லென்று தொண்டையில் இறங்கும் நீர் அவளுக்குள் அலை அலையாய்ப் பல மென்னுணர்வுகளைக் கிளப்புகிறது.

மழையின் வேகம் சற்று அதிகமாகிறது. "ஊய்ய்...' என்று மரங்களைச் சீண்டும் காற்றின் சப்தம். சிதறி விழும் மழைத்துளிகள். சாரதாவின் உடல் இனிமையில் சிலிர்க்கிறது.

"வாங்க பாட்டி.. உடம்புக்கு ஏதாச்சும் வந்துடும்" குமாரி பயத்துடன் தன் பொறுப்பை நிறைவேற்றப் பார்க்கிறாள்.

"எனக்கு எதுவும் ஆகாது. தினமும் இப்படி மழை பெய்ஞ்சா நான் எழுந்து டான்ஸ் கூட ஆடுவேன்."

பொக்கை வாய் ஆனந்தத்தில் சிரிப்பதைப் பார்த்து அவளுக்குப் புத்தி பேதலித்து விட்டதோ என்ற அச்சத்தில் அவளைப் பார்க்கிறாள் குமாரி. ஆனால் பழுத்துச் சுருங்கிய அந்த முகத்தில் ஒளிரும் சந்தோஷம் அவளுக்குள்ளும்



பரவுகிறது.

"மழை சரம் சரமா எவ்வளவு ஆக்ரோஷத்தோட ஓடி வரது பார்... குழந்தையைத் தழுவிக்கத் துடிக்கற தாயார் மாதிரி..." குரலில் பரவசம் வழிந்தோடுகிறது.

"ஏம் பாட்டி... மழைன்னா ஒங்களுக்கு ரொம்பப் புடிக்குமா?"

"பிடிக்குமாவா?" மழைக்கும் அவளுக்கும் உள்ள காதலை, பிணைப்பைச் சொன்னால் இவளுக்குப் புரியுமா? மழை பெய்யும் தருணங்களில் கடலில் கலக்கும் நதியாய் இயற்கையுடன் அவள் ஆனந்தமாய் ஒன்றி விடுவதை எப்படி புரிய வைப்பது?

மழையின் வேகம் குறைந்து இளந்தூறலாய்ப் பொழிகிறது. சில்லென்ற காற்றும் ஈரமும் அவள் மேனியைத் தழுவி நினைவு வீணையை மீட்டுகின்றன.

தன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ஏதோ ஓர் இனிமையில் லயித்துப் போன அந்த முகம் சிந்தும் பரவசத்தை உணர இயலாதவளாய் குமாரி உள்ளே போகிறாள்.

"நினைவு தெரிஞ்சு மழையை ரசிக்கறப்ப எனக்கு வயசு மூணு இருக்குமா. இல்லை நாலு வயசு" ...தனக்குள் சொல்லிக் கொள்கிறாள் சாரதா...

ஜெயா சேகர்

"அப்பாடி! எழுபத்தி நாலு வயசு பந்தம்.. மூணு தலைமுறையைப் பார்த்த வயசுன்னா இது.."

பிரமிப்புடன் நாற்காலியில் சாய்ந்து சரம்சரமாய் மழை இறங்குவதைப் பார்க்கிறாள். மனம் துள்ளுகிறது.

கிராமத்து ஓட்டு வீடு. நான்கு முனைகளும் கூடும் கூடுவாய் முனையினடியில் நின்று கொண்டு மழையில் நனைவது சுகமாயிருக்கும். வாயைப் பிளந்து கொண்டு பொட்டுப் பொட்டாய் விழும் மழைத்துளிகளின் சில்லிப்பை ரசிப்பாள். அப்பா அவளுக்கு விதம் விதமாய் காகிதத்தில் கப்பல்கள் செய்து தருவார்.

"தண்ணியைப் பாத்தா கண்ணு ரெண்டும் மின்றதைப் பாரு.. ஜலப் பிசாசு.." அம்மாவின் கண்டிப்பில் பெருமிதம் கலந்த ரசனை தூக்கலாயிருக்கும். வழக்கமாய் ஏதேனும் புலம்பியபடி இருக்கும் பாட்டி கூட கூடத்தில் அமர்ந்து கொண்டு மழையைப் பார்த்தபடி மௌனமாய் அமர்ந்திருப்பாள்.

"இப்ப புரியறது... மனசை உள்முகமா இருப்பற சக்தி மழைக்காலத்துக்கு இருக்கு.. சண்டையும் பூசலுமா இருக்கற இந்தத் தெரு கூட இப்ப அமைதியான்னா இருக்கு! மழை மனசை மாத்தற ரசவாதின்னு எத்தனை பேருக்குத் தெரியும்?"

பளீரென்று மின்னல் வெட்டுகிறது. மழையின் வேகம் அதிகரிக்கிறது. மழை பெய்வதையே உற்சாகத்துடன் பார்க்கிறாள் சாரதா..

மழை நின்றவுடன் காலையில் அப்பா அவளைத் தூக்கிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்று விடுவார். மழையில் புதிதாய்த் துளிர் விட்டிருக்கும் செடிகளும், மரங்களும் பலா மரத்தினடியில் முளைத்திருக்கும் நாய்க் குடைகளும், தரையில் ஊர்ந்து செல்லும் நத்தைகளும், தேங்கிய நீர்க் குட்டையில் குளிக்கும் பறவைகளும் அவளுக்குள் இனம் புரியாத சந்தோஷத்தைப் பரப்பும். மண்ணுடன் கலந்து மக்கத் தொடங்கியிருக்கும் இலை தழைகளின் வாசம் இதமாயிருக்கும். எலுமிச்சை இலைகளின் மீது படிந்திருக்கும் மழைத்துளிகளை உலுக்கி அவளும் அப்பாவும் நனைவார்கள்.



"அந்த கிராமத்துக்குத்தான் ஏற்கெனவே பஸ் விட்டாச்சே... பிறகு ஏன் ஊர் மக்கள் இன்னும் பஸ் வசதி கேட்டு போராட்டம் நடத்தறாங்க?"

"பஸ் எரிப்புப் போராட்டத்துக்கு இப்ப ஓடற ரெண்டு பஸ் போதாதாம்!"

— புளியரை கணேசன்

எத்தனை சுகமான நாட்கள். இப்பல்லாம் தோட்டமா துரவா? எங்க பார்த்தாலும் கட்டடம். மரத்தையும் மழையையும் ரசிக்க யாருக்கு நேரம்? பொறக்கறப்பவே கையில ரிமோட்டும் புஸ்தகமுமான்னா பொறக்கறது. சீக்கிரம் வாழ்க்கை அலுப்புத் தட்டறது. அலுப்பை மறக்க, வேண்டாத பழக்கங்கள். காலம் ரொம்பவே மாறிடுத்து. இந்த வயசுல கூட இந்த ஆகாசமும் மழையும் எனக்குப் போதையூட்டறதே!

சன்னமான புன்னகை அவள் முகத்தில் படர்கிறது.

அவள் வளர வளர மழை மீது அவள் கொண்ட காதலும் வளர்ந்தது. வானம் கறுத்து மழை 'வரப் போகிறேன்' என்று இடி முழக்கங்களுடன் கர்ஜிக்கும் போது, மற்ற பிள்ளைகள் அலறிக் கொண்டு ஓடுவார்கள். இவள் மட்டும் நிறம் மாறும் வானத்தையும், காற்றுடன் தட்டாமாலை ஆடும் மரங்களையும் ரசித்துக் கொண்டு மழையில் நனைந்தபடி வருவாள். அம்மா பதைபதைப்புடன் இவள் வருகையை எதிர்பார்த்தபடி காய்ந்த துணிகளையும் சாமான்களையும் பத்திரப்படுத்துவாள். உடையைக் கூட மாற்றப் பிடிக்காமல் வாசல் திண்ணையில் அமர்ந்து கொள்வாள். விளக்குகளின் வெளிச்சத்தில் ஒளிக் கம்பிகளாய் மழை இறங்குவதும், செம்மண்ணில் கலந்து பழுப்பும் சிவப்புமாய் அது ஆறாய் ஓடுவதும், மரங்களின் ஆட்டமும், தெருவின் அமைதியும் அவளை வசீகரிக்கும். திடீரென்று வீட்டில் தவளைகளின் நடமாட்டம் அதிகரிக்கும். கைகளை மாற்றி மாற்றி மழை நீரைப் பிடித்துக் கொண்டு அவள் நிற்பதை அப்பா கண்கள் கனியப் பார்ப்பார்.

அந்த அற்புதமான நாட்களை நினைக்கிற போது இப்போது கூட நெஞ்சு நெகிழ்கிறது.

எவ்வளவு கவாதீனம். சுதந்தரம்.

அவளது இந்த சுதந்தரச் சிறகு வெட்டப் பட்டதும் ஒரு மழை நாளில் தான்....

"நம்ம சாரு இன்னும் சின்னப் பொண்ணு இல்லை.. மழையில நனைஞ்சுண்டு உடம்புல துணி ஒட்டிண்டு அபிஷேகம் பண்ணின அம்மன் சிலையாட்டமா அவ நிக்கறதைப் பார்த்தா எனக்கு திக்குங்கறது. நீங்க... அவளுக்கு புத்தி சொல்றதை விட்டுட்டு அவளோட

கூத்தடிக்கிறேன்..."

அவளுடைய பதின்மூன்றாவது வயதில் ஒரு மழை நாளில் அம்மா இப்படிச் சொன்னாள்.

அவளைப் பார்த்த அப்பாவின் கண்களில் அன்பையும் பாசத்தையும் தவிர மெலிதாய்ப் பயம் பரவியிருப்பதை முதன் முதலாய் அவள் உணர்ந்தாள். சிறுமியிலிருந்து இளமை பூரிக்கும் குமரியாய் அவள் உருவாகிக் கொண்டிருந்த காலம் அது. அன்று முதல் மழையில் நனைவதற்கு அவளுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டி மழையை ஸ்பரிசிக்கும் போது, பூரணமாய் அதில் நனைய முடியவில்லையே என்ற ஏக்கத்தில் கண்கள் கலங்கும்.

"பாட்டி, கொஞ்சம் டீ குடிங்க..."

குமாரி டீக் குவளையை நீட்டுகிறாள். சாரதாவின் முகம் மலர்கிறது.

"சின்ன வயசுல இந்த மாதிரி மழை பெய்யறப்ப எங்கம்மாவும் இப்படித்தான் சூடா டீ போட்டுக் குடுப்பா. சூடா டீயும் கையில ஒரு அற்புதமான புஸ்தகமும் பெய்யற மழையும் இருந்தா... அதுதான் சொர்க்கம்."

குமாரி ஒன்றும் புரியாதவளாய் விழித்தபடி உள்ளே செல்கிறாள்.

இப்படித்தான் ஒரு மழைநாளில் தேநீர் குடித்துக் கொண்டு, ஒரு அற்புதமான காதல் கதையில் மூழ்கியிருந்தபோது கண்ணனின் நட்பு கிட்டியது.

அப்பாவின் நண்பரின் மகன். ஏதோ வேலையாய் அடிக்கடி அப்பாவைச் சந்திக்க வருவான். வரும் போதெல்லாம் அவன் கண்கள் இவளைத் தேடி அலையும். பார்வைகள் சந்திக்கும்போது அவன் கண்கள் ஏதோ சொல்லத் துடிக்கும். அன்றும் இப்படித்தான் நல்ல மழை... வீட்டில் யாரும் இல்லை. ஏதோ தவத்தில் மூழ்கியிருப்பவளைப் போல் புத்தகத்தில் அவள் ஆழ்ந்திருந்த காட்சி அவனை வசீகரிக்க, அவள் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தான்.

"இந்த இனிமையான மழைக்கு மேலும் இனிமையூட்டற புத்தகம்... எனக்கும் இதுதான் பிடிக்கும். மழையே 'ரொமான்டிக்' இல்லையா?" கண்களை சிமிட்டிக் கொண்டு அவன் ரசித்துச் சொன்னபோது அவள் கிறங்கிப் போனாள்.

"எவ்வளவு உண்மை! ரொமான்டிக்கா இருக்கற மனிதர்களால்தான் சகலத்தையும் நேசிக்க முடியறது. பூரணமான வாழ்க்கையின் அடிநாதமே காதல்தான். அவள் உடம்பெங்கும் ஒரு பரவசம் வழிந்தோடுகிறது.

ஒத்த உணர்வுகள் காந்தமாய் ஈர்க்க, அவர்கள் சந்திப்பு தொடர்ந்தது. இளமைக்கே உரித்தான புத்துணர்வும் பருவக் கிளர்ச்சியும் அவர்களை விட்டு வைக்கவில்லை. கறுத்து அடர்ந்த ஒரு மழைநாளில் தாபம் பொங்க கண்ணன் அவளை இறுக்கியணைத்து முத்தமிட்டான். அவளது உடலெங்கும் பரவின சிலிர்ப்பும் கதகதப்பும். அந்த மழைநாளுக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தந்தன. அன்றிரவு நீண்ட நேரம் அவள் தூங்கவில்லை. தவளைகளின் ஓயாத அழைப்பு இனம் புரியாத துக்கத்தைத் தந்தது. அதைத் தொடர்ந்து ஒரு வாரம் விடாமல் மழை பெய்தது. வழக்கமாய் இனிமையூட்டும் மழை. அவளுக்குள் சோகத்தை விசிறி விட்டது. மனம் எதற்கோ ஏங்கித் தவித்தது.

கைகளில் புத்தகமும் கண்களில் கவியும் ஏக்கமுமாய் அவள் மணிக்கணக்காய் சிலையாய் அமர்ந்திருப்பதை அம்மா கவலையுடன் கவனிக்க ஆரம்பித்தாள். அந்த மழையிலும் நனைந்த உடையுடன் சைக்கிள் மணி சப்திக்க அவள் வீட்டைக் கடந்து செல்வான், கண்ணன். அவர்கள் கண்கள் சந்திக்கும் போது ஏக்கம் கலந்த பார்வை ஒன்றை வீசுவான். அவளுக்குள் துக்கம் பந்தாய்ச் சுருண்டு நெஞ்சையடைக்கும்.

காதல் அவளுக்குள் ஏற்படுத்திய மாற்றங்களை அம்மா புரிந்து கொண்டாள். தனியே எங்கும் போவதற்கு அவளுக்குத் தடை விதிக்கப்பட்டது. அடுத்த பத்தாவது நாளில் கண்ணன் வீட்டு வாசலில் ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. அவன் அப்பாவுக்கு வேறு ஊருக்கு மாற்றலாகியிருந்தது. அம்மாவின் உந்துதலில் அப்பா தன் செல்வாக்கை உபயோகப் படுத்தியிருக்க வேண்டும்.

யாரும் கவனிக்காத போது ஜன்னல் இடைவெளி வழியாய்க் கண்கள் கலங்க அவன் கைகளுக்குள் ஒரு புத்தகத்தைத் திணித்துவிட்டு



''என்னங்க... இன்னைக்கு என்ன கிழமை?''

''இன்னைக்கு எந்த பத்திரிகையிலேர்ந்து கதை திரும்பி வந்திச்சுன்னு சொல்லு, நான் என்ன கிழமைன்னு அதை வச்சு சொல்றேன்!''

— சீர்காழி வி. ரேவதி



''லல்லுவுக்கும் ஜெயலலிதாவுக்கும் அழைப்பு உண்டா?''

''எதுக்கு அழைப்பு உண்டா?''

''ஊழலுக்கு எதிரான தேசிய இயக்கம் ஆரம்பிக்கப்படும்னு பிரதமர் குஜ்ரால் சொன்னாரே. அதன் தொடக்க விழாவுக்குத்தான்!''

— உ. ராஜாஜி

விடை பெற்றான். அவன் கையெழுத்துக் கூட அவள் உகுத்த கண்ணீரில் சற்று கரைந்திருக்கும். அதன் பிறகு அவளை சந்திக்கவேயில்லை.

இன்னும் கூட அந்தப் புத்தகம் பத்திரமாயிருக்கிறது. அந்த நினைவில் மீண்டும் இளமையை அடைந்துவிட்ட பரவசம் அவளை ஆட்கொள்கிறது.

"ஏய் குமாரி! என்னோட சூட்கேஸ்ல புடைவைக்கு அடில ஒரு மஞ்ச கவர் இருக்கும். அதைக் கொண்டா."

குமாரி கவரை நீட்டுகிறாள்.

கவரைப் பிரித்து அந்த புத்தகத்தைத் தடவும் போது அவள் மேனி இலேசாய் நடுங்குகிறது. மொட்டவிழ்ந்த மலர்களாய் மணம் பரப்பும் நினைவுகள்... நல்ல நினைவுகளுக்கு முதுமை ஏது?

ஒத்த உணர்வுகளை, ரசனைகளைக் கொண்ட இரு மனங்களின் வசீகரிப்பு... அதற்கு வடிவம் கொடுக்கத் துடித்த இளமை... அது ஒரு கட்டம்...

மழை சற்று குறைந்திருக்கிறது. ஒதுங்கியிருந்த கூட்டம் பரபரப்பாய்க் கலைகிறது. வானம் வெறிக்க ஆரம்பிக்கிறது. தேங்கியிருக்கும் மழைநீரில் காகம் ஒன்று தலையை சிலுப்பிக் கொண்டு குளிக்கிறது. ஹாரன் ஒலிகளுடன் வாகனங்களின் நடமாட்டம் அதிகரிக்கிறது. சாரதா கலங்கிய கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

அந்த வருட மழைக்குப் பிறகு தொடர்ந்து மூன்று வருடங்கள் மழையே இல்லை. குடிநீரின்றி ஊரே அவதிப்பட்டது. சூடும் வெக்கையும் வியாதிகளைப் பரப்பின. மரங்களும் செடிகளும் மழைக்காகத் தவமிருந்து வாடின. மழைக்காக வருண ஜபமும் யாகங்களும் நடந்தன. அமிர்தவர்ஷிணி ராகம், விளக்கு பூஜை என்று ஒன்று பாக்கி இல்லை. அவளும் மற்ற கன்னிப் பெண்களுடன் சேர்ந்து மழை நோன்பு இருந்து கிணறுகளைச் சுற்றி கும்மியடித்தாள். அந்தச் சமயத்தில்தான் அப்பாவிற்கு உடம்புக்கு வந்தது. பிழைப்பது கஷ்டம் என்றவுடன் திருமணமே வேண்டாம் என்றிருந்த அவளுக்கு அவசர அவசரமாய்த் திருமணம் நிச்சயமாயிற்று.

நன்றாய் நினைவிருக்கிறது. அவள் திருமண நாளன்று, வராத மழை விடாமல் பொழிந்தது. அனைவரையும் மகிழ்ச்சியிலாழ்த்தியது. அவள் நேசிக்கும் வானமும் மழையும் இறங்கி வந்து அவளை ஆசீர்வதிப்பது போலிருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அவள் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடுவதாய் அம்மா சொன்னாள்.

உறவினர்களின் கேலிப் பேச்சோ, நடந்த சடங்குகளோ அவள் மனத்தில் பதியவில்லை. காலத்தைக் கடந்த, எல்லைகளற்ற ஒரு வெளியில் அவள் மிதப்பதைப் போல் இருந்தாள். வானத்திலிருந்து இறங்கிய தேவதையாய் அவள் இருந்ததாக சுவாமிநாதன் சொன்னான். தொடர்ந்து பெய்த மழையின் சுருதியுடன் அவளது தாம்பத்யம் தொடங்கியது.

அவள் மேனியை ரசித்த அளவுக்கு சுவாமிநாதனால் அவள் ரசிக்கும் வானத்தையும் பூக்களையும் மழையையும் ரசிக்க முடியவில்லை. தூறலிலும் மழையிலும் அவள் உள்ளுணர்வுகள் கரைபுரண்டு வழியும் போது, அந்த அதிர்வுகள் அவளுள் மெல்லிய தாபத்தைக் கிளப்பும். உருவின்றிக் கரைந்து போக வேண்டும் போல் மனம் துடிக்கும். சுவாமிநாதனின் அண்மையை நாடுவாள்.

"மழை பெய்ஞ்சா உனக்குள்ள ஒரு மாயாஜாலமே நடந்துடறது.. அப்பா... இதுக்காகவே தினமும் மழை பெய்யணும்" என்பான். அவன் களைத்து உறங்கின பிறகும் உறக்கம் வராமல் மழை விழும் ஒலியைக் கேட்டபடி கண்கள் கலங்கப் படுத்திருப்பாள்.

"அப்ப புரியலை... இப்ப புரியறது. உடம்பையும் உணர்வையும் தாண்டிப் பரந்து விரியத் துடித்த மனசோட தாபம் அது.. எந்த உணர்வுகளாலும் தணிக்க முடியாத தாகம்... இயற்கையோடு, தன்னைப் படைத்த சக்தியோடு மீண்டும் இணையத்துடிக்கும் தவிப்பு. ஜீவாத்மா - பரமாத்மா என்பார்களே அது தானோ?

பேரிரைச்சலுடன் மழை வலுக்க ஆரம்பித்து விட்டது. அவள் மேனியைத் தழுவும் மழைச் சிதறல்கள். பல இரகசிய உணர்வுகளை உள்ளடக்கிய அவளது மௌனத்தைக் கலைத்து



"மக்களுக்குப் பயன்படற மாதிரி அறிவிப்பு செய்தும் இன்னிக்கு வியாபாரமே ஆகலையா? என்ன அறிவிப்பு செய்தே?"

"எங்கள் ஓட்டலில் சாப்பிட்டு அஜீரணம் ஏற்பட்டால் வைத்தியச் செலவை நாங்களே ஏற்கிறோம்!"

— வெ. ராஜாராமன்

'என்னுடன் பகிர்ந்து கொள்' என்று தொடர்ந்து அழைக்கும் மழை... வெள்ளமாய்ப் பொங்கும் நினைவுகள்...

"பாட்டி! எந்திரிச்சு உள்ள வந்துடுங்க. ஐயா வர்ற நேரம்..." குமாரி பரபரக்கிறாள்.

"மனசு இதமாயிருக்கு.. சித்த நேரம் கழிச்சு உள்ள வரேன்." கெஞ்சலாய் வரும் அவள் குரலைத் தட்ட முடியாமல் உள்ளே போகிறாள் குமாரி.

மழையை எதிர்நோக்கி அவள் பரபரக்கும் போது 'போன ஜென்மத்துல நீ மயிலாய் இருந்திருக்கணும்' என்று காதோரங்களில் சுவாமிநாதன் கிசுகிசுப்பான்... இருந்திருக்கலாம். அதனால் தானோ என்னவோ, மழை தூற ஆரம்பிக்கும் போது, கைகளை விரித்துக் கொண்டு ஆட வேண்டும் போன்ற உணர்வு அவளுக்குத் தோன்றும். சூழ்நிலை கருதி கட்டுப்படுத்திக் கொள்வாள்.

பிறக்கும் போதே சுவாசப்பை கோளாறுடன் கணேசன் பிறந்தான். அவள் சுகித்த உணர்வுகளை அவனுக்கு அறிமுகப்படுத்த முடியாமல் போயிற்று. மழையின் சில்லிப்பை ரசிக்க முடியாமல் கம்பளி ஆடைகளுக்குள் அவனைப் பாதுகாக்க வேண்டியதாயிருந்தது. அவனுக்காக அவளும் மழையழகை இழக்க வேண்டியதாயிற்று.

கணேசனுக்குத் திருமணமான அடுத்த மாதமே சுவாமிநாதன் மாரடைப்பில் இறந்து போனான். அவன் காரியங்கள் முடிந்த பிறகு இப்படித்தான் ஒரு நாள் மழை அடைமழையாய்ப் பெய்தது. என்றும் போல் அவளும் அதை ரசித்தாள்.

தூறலில் நனைந்தபடி அவளுக்குப் பிடித்த ராகத்தை இசைத்துக் கொண்டு அவள் நின்றிருந்தாள்.

அதைக் கண்டு கலவரமடைந்த மருமகள், 'அப்பா போய் ஒரு மாசம் கூட ஆகலை. உங்கம்மா மாடில மழையில நனைஞ்சுண்டு பாடிண்டிருக்கா... துக்கத்தோட சாயலே இல்லாம மழையை ரசிச்சுண்டு ஒக்காந்திருக்கா... என்ன மனுஷி இவ..." என்று கணேசனிடம் சீறினாள்.

இந்த உறவுகளும் தொடர்புகளும், சந்திப்புகளும் தாற்காலிகமானவை. இயற்கையும், இயற்கையின் அங்கமாகிய ஜீவனும்தான் நிரந்தரம். அது இயற்கையுடன் ஒன்றிப் போவதில்தான் ஆனந்தம் என்பதை அவளால் உணர முடிந்தது. உண்மையில் யாரும் யாருக்கும் சொந்தமில்லை... ஒவ்வொரு ஜீவனும் தனி...

அதை உணர்ந்ததால்தான் கணேசன் அயல்நாடு சென்றிருந்த போது அவளைத் தனிமை வாட்டவில்லை. அவள் குடும்பம் பெருகி, பேரன் பேத்தி என்றான பிறகும் எந்தத் தடைகளும் அவளைக் கட்டுப்படுத்தவில்லை. அவளுக்குள் மலர்ந்து விரியத் தொடங்கிய மௌனத்தில் லயித்துக் கிடக்கும் அவளது அமைதியும் ஆனந்தமும் கணேசனுக்கு கவலையூட்டுகிறது. அவளுக்கு புத்தி பேதலித்து விட்டதோ என்று.

"தனக்குள் இருக்கிற இந்த வற்றாத ஆனந்த ஊற்றை ஒவ்வொரு ஜீவனும் தானே தேடிக் கண்டு பிடிக்கணும். அந்தத் தேடலை நோக்கி மனசை உந்தித் தள்ளுவதற்குத்தான் ஏமாற்றங்கள், தோல்விகள், தொடர்புகள், உறவுகள் எல்லாமே... எவ்வளவு சுவாரசியமான விளையாட்டு இது. வாழ்க்கை எவ்வளவு இனிமையானது. எவ்வளவு விஷயங்களைக் கற்றுக் கொடுக்கிறது... அம்மாடி! என்ன ஆனந்தம். நிறைவு...

முகத்தில் அலாதியான ஆனந்தம் ஆரோகணிக்க, கூண்டிலிருந்து விடுபட்ட பறவையாய் பறக்கத் தொடங்குகிறாள். வண்ண வண்ண ஒளி அடுக்குகளைத் தாண்டி ஜோதியில் பிரகாசமாய்த் தெரியும் பிரதேசத்தை நோக்கிப் போகத் தொடங்குகிறாள்.

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கிறது. காற்றில் உடைபட்ட ஜன்னல் கண்ணாடி, 'சிலுங்' என்ற சப்தத்துடன் கீழே விழும் ஓசை கேட்கிறது.

"அம்மாவுக்கு எப்படியிருக்கு?" என்று கேட்டபடி கணேசன் உள்ளே நுழைகிறான்.

நாற்காலியில் தலைசாய்ந்து உட்கார்ந்திருக்கும் அம்மாவைப் பார்த்ததும் திக்கென்றிருக்கிறது. அருகே சென்று அவளைத் தொட்டுக் குலுக்குகிறான்.

துணி மூட்டையாய்த் துவண்டு சாய்கிறாள் சாரதா. அவள் முகத்தில் அவன் கண்டறியாத் பரவசம் பரவியிருக்கிறது.

வானம் கிழிந்து மழை கொட்டுகிறது.

மோக்ஷத்தைக் கிட்டத்தில் வந்து எட்டச் செய்கிறவனான அந்த பரமாத்மா எட்டெழுத்து உடையவனாகவும் இருக்கிறான். எட்டெழுத்து என்பது நாராயணா என்னும் நாமம். உயர்ந்த திருநாமம். விஷ்ணு காயத்ரி அதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

வேதத்தில் எங்கு சொன்னாலும் நாராயண சப்தத்தை மறைத்து விஷ்ணு சப்தத்தைத் தான் அதிகமாகச் சொல்லியிருக்கிறது.


விஷ்ணு சர்வதோமுக :

சர்வதோ முகம் என்றொரு யக்ஞம். அந்த யக்ஞத்திலே ஆராதிக்கப்படக்கூடியவன் விஷ்ணு - என்றாகிறது.

இன்னொரு இடத்தில் சொல்லும்போது, 'தேவதைகளெல்லாம் யாரை முகமாக உடையவர்கள் என்று கேட்டால், விஷ்ணுவை முகமாக உடையவர்கள்' என்கிறது வேதம். எங்கும் வியாபித்திருக்கக்கூடியவன் அல்லவா, அதனால் தேவதைகள் யாவும் அவனையே முகமாகக் கொண்டுள்ளன.

நாரங்களிலே எவன் குடிகொண்டிருக்கிறானோ, அவன் நாராயணன்.

23



குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

தீர்த்தங்களுக்கு 'நாரம்' என்று பெயர். நாரதருக்கு ஏன் அந்தப் பெயர் வந்ததென்றால், நாரத மஹரிஷி அவதரிப்பதற்கு முன்னால் தீர்த்தமே ரொம்ப கொஞ்சமாக இருந்ததாம் உலகத்திலே. அவர் பிறந்த பிறகுதான் எங்கும் ஜலம் உண்டாயிற்றாம்! அதனால்தான் அவருக்கு நாரதர் என்று பெயர்!

பித்ரு தேவதைகளையெல்லாம் தீர்த்தத்தைக் கொண்டு ஆராதித்தவர் நாரதர் என்பதாலும் அவருக்கு அந்தப் பெயர்.

நாரம் என்றால் பிரும்ம ஞானம் என்றும் ஓர் அர்த்தம். அந்த பிரும்ம ஞானத்தை அனவரதம் எல்லோருக்கும் உபதேசித்தவரானதாலே அவருக்கு நாரதர் என்று பெயர்.

நாரதர் பிரும்ம ஞானத்தை உபதேசம் பண்ணிய கதையை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தக்ஷ பிரஜாபதி ஆயிரம் பேரை (ஹரியச்வரர்கள்) சிருஷ்டித்தான். அவர்கள் சிந்து நதிக்கரையிலிருந்தபடி உலக சித்தியை எப்படி நடத்தலாம் என்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். நாரதர் அங்கு போய் 'பரப்ரும்மத்தை தியானம் பண்ணுங்கள்' என்று மோக்ஷத்துக்கு வழிகாட்டிவிட சிருஷ்டி நின்று போய் விட்டது!

தக்ஷ பிரஜாபதி மீண்டும் பத்தாயிரம் பேரை சிருஷ்டிக்க, அவர்களையும் அப்படியே உபதேசித்து மோக்ஷத்துக்கு அனுப்பிவிட்டார் நாரதர்!

உடனே தக்ஷ பிரஜாபதி கோபம் கொண்டு, ஓரிடத்தில் நில்லாமல் சஞ்சரித்துக் கொண்டேயிருக்கும்படியான சாபத்தைக் கொடுத்து விட்டார் நாரதருக்கு! நாரதர் எங்கேயாவது ஐந்து நிமிஷம் நின்றாரானால் அங்கே இருக்கிறவர்களுக்கு மோக்ஷம் சித்தம்!

இப்படிப்பட்ட நாதரர் இடத்திலேதான் பிரஹலாதன் பத்தாயிரம் வருஷம் விஷயம் கேட்டான்! அந்த பிரஹலாதனுடைய ஞானம் எவ்வளவு பெரிதாய் இருக்கும்!

நாரம் என்றால் 'தீர்த்தம்' என்பதற்காக இந்தக் கதை சொன்னேன். தீர்த்தத்திலே படுக்கை உடையவன் நாராயணன்.

வேதத்திலே ஓரிடத்தில் சொல்லப்படுகிறது: சிருஷ்டியிலே முதன் முதலில் எது உண்டாயிற்று என்றால் தீர்த்தம்தான் உண்டாயிற்று!

இன்னொரு இடத்தில் வேதம் சொல்கிறது:



எல்லா தேவதைகளும் தீர்த்தத்திலேதான் இருக்கிறார்கள்!

ஒரு சின்ன சொம்பை வைத்துக் கொண்டு அதிலே ஒரு மாவிலைக் கொத்தையும் தேங்காயையும் வைத்து, வஸ்திரம், தூபம், தீபம் என்று ஒவ்வொன்றாக சமர்ப்பிப்பதாக அக்ஷதை போடுகிறோம்! கடைசியிலே தக்ஷிணார்த்தம் அக்ஷதாம் சமர்ப்பயாமி என்று தக்ஷிணையைக் கூட சமர்ப்பிக்கிறோம்!

அப்படியென்றால் என்ன அர்த்தம்? வேதத்திலேயே பிரத்யக்ஷ தேவதை - கண்ணுக்குத் தெரிகிற தேவதை பரோக்ஷ தேவதை - அவ்வாறு தெரியாத தேவதை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரோக்ஷ தேவதை நம்மிடம் எதையும் கேட்காது. ...அதனால் நாம் எதுவும் சமர்ப்பிக்காமல் இருந்து விடுவதா...?!

'எதிரே அவன் உட்கார்ந்திருக்கிறான் என்று பாவித்து, அந்த கும்பத்திலே முப்பத்து முக்கோடி தேவர்களையும் ஒரு சொம்பு ஜலத்திலே வைத்து, எல்லா தேவதைகளையும் வரிசையாக ஆவாஹனம் பண்ணுவது வழக்கம்.

இப்படிப் பண்ணிக் கொண்டேயிருந்த போது பார்த்துக் கொண்டிருந்த ஒருத்தர் கையைப் பிடித்துக் கொண்டு சொல்கிறார் : "என்ன அக்கிரமம்! பத்துப் பேர் வந்தாலே இங்கே உட்கார இடம் போதவில்லை. ஆவாஹனத்தை நிறுத்துங்கள்! இத்தனை தேவதைகளும் வந்தால் எங்கே உட்காருவார்களாம்!"

ஆவாஹனம் பண்ணுபவர் அவருக்கு பதில் சொல்கிறார் : "உமக்குத் தெரியாதா! இந்த தீர்த்தம் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! இந்த சொம்பைக் கூட வைக்க வேண்டாம். ஒரு உத்திரிணி ஜலம் போதுமே..." என்றார்! "சர்வ தேவதைகளும் தீர்த்தத்திலேயே அல்லவா இருக்கிறார்கள்!"

அதனால்தான் வேதமே தீர்த்தத்தைக் கொண்டாடுகிறது. அதனால்தான் பெரியவர்கள், மஹான்கள், ஆசார்யர்கள் நம் ஊருக்கு வரும் போது பூர்ண கும்பத்தை எடுத்துப் போய் ஊர் எல்லையிலேயே வரவேற்கிறோம். சிருஷ்டியிலே முதன் முதலில் உருவான வஸ்துவை அவர்களுக்குக் காட்டுகிறோம். அவ்வளவு பஹுமானத்தோடு, மரியாதையோடு அவர்களை அழைத்து வருகிறோம்.

எனவேதான் தீர்த்தத்தை அபஹாஸ்யம் - ஏளனம் - பண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறது.

மஹான்கள், காலை அலம்பிக் கொள்ளும் போது கூட தீர்த்தத்தை நேராகக் காலில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். நேராகக் காலில் ஜலம் படக்கூடாது! ஒரு கையிலே பாத்திரத்தை வைத்துக் கொண்டு, இன்னொரு கையினாலே அந்த தீர்த்தத்தை வாங்கி கால்களில் சேர்த்துக் கொள்வார்களேயொழிய நேராகக் காலில் ஜலம் விழும்படியாகப் பண்ணுவது கிடையாது.

சிரார்த்த காலங்களில் ஆசார்யர்களுக்கு நாம் பாத பூஜை பண்ணும் போது கூட இப்படித்தான் செய்வோம்.

பகவான் தீர்த்தத்திலே படுத்துக் கொண்டிருப்பதனாலேதான் இப்படி அதை மிகவும் ஜாக்கிரதையாகக் கையாள்கிறோம்.

ஜலத்திலே இருக்கிற பரமாத்மா பிரணவ ஸ்வரூபியானவன். ஓம்காரமாக இருக்கிறான்.

அப்படிப்பட்டவனுக்கே நான் உரியவன் என்று ('நம:') நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

' 'நம்' வென்னலாம் கடமை' - திருவேங்கடத்திலே இருக்கிறானே அவனெதிரில் போய் 'நம' என்று சொல் என்கிறார் ஆழ்வார்!

நம : என்று நாம் சொல்லும் போது 'நான் எனக்கே உரியவன்' என்கிற நிலையை அது அகற்றுகிறது.

நாமே நமக்கு ரக்ஷகர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமல்லவா...? நமக்கு நம்மை ரக்ஷித்துக் கொள்ளும் சக்தியுள்ளதாக நினைத்துக் கொள்கிறோமே - இந்த அறிவைப் போக்குகிறது நம :

யானையை முதலை பிடித்து தண்ணீருக்குள் இழுக்கிறது. யானையோ கரைப் பக்கம் இழுக்கிறது. இப்படி இரண்டும் சண்டை போடுகிற காட்சியை சுக பிரும்ம மஹரிஷி



"தலைவரை விடுதலை செய்யலேன்னா தீக்குளிப்பேன்னு சொன்னீங்களே...?"

"சேச்சே...! டீ குடிப்பேன்னு சொன்னதைத் தப்பாப் புரிஞ்சிக்கிட்டீங்க போலிருக்கு...!"

— வலங்கைமான் நூர்தீன்

பஸ் ஜாக்!

பெங்களூர் டவுன் பஸ் நிலையத்தில் பதினைந்தாவது பிளாட்பாரத்தில் பஸ்ஸை நிறுத்திவிட்டு டிரைவரும் கண்டக்டரும் சாப்பிடச் சென்றார்கள். திரும்பி வந்து பார்த்த போது பஸ்ஸைக் காணவில்லை! உடனே போலீசுக்கு தெரிவிக்கப்பட்டது.

மறுநாள் போலீஸுக்கு போனில் ஒரு மர்மக்குரல், ''நீங்கள் தேடும் டவுன் பஸ் அல்சூர் அஜந்தா தியேட்டர் வாசலில் நிற்கிறது'' என்று கூறியது. போலீஸும் விரைந்து சென்று பஸ்ஸை மீட்டு வந்தனர்! எவனோ பெங்களூரைச் சுற்றி ஒரு ரவுண்ட் அடித்துவிட்டு, பஸ்ஸை விட்டுச் சென்றிருக்கிறான்!



தகவல்: வி.எஸ்.
ராஜகோபால்
ஆதாரம்: டெக்கான் ஹெரால்டு

விவரிக்கிறார்.

பரீக்ஷித் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறான்! விஷ்ணு தர்மத்திலே வருகிற சுலோகம் அது....

விஷ்ணு தர்மம் என்று ஒரு கிரந்தம் – விஷ்ணு புராணம் மாதிரி....

பரீக்ஷித்துக்குச் சந்தேகம் ஏற்படுகிறது.

"சுவாமி...! இப்படியே எத்தனை நாள்தான் ஒன்றை ஒன்று இழுத்தது...?'' என்று கேட்கிறான்.

"ஒருநாளா? இரண்டு நாளா... கதையைச் சொல்லி முடிக்க! ஆயிரம் வருஷ காலம்'' என்கிறார் சுகபிரும்ம மஹரிஷி.

ஆயிரம் வருஷ காலம் இது உள்ளே இழுக்க, அது வெளியே இழுக்க, இப்படியே சண்டை போடுகின்றன....

முதல் ஐந்நூறு வருஷமும் ஒருவிதமான சண்டை.

அடுத்த ஐந்நூறு வருஷம் வேறுவிதமான சண்டை! முதல் ஐந்நூறு வருஷமும், 'நான் எனக்கு உரியன் என்கிற நிலையில் சண்டை நடந்தது. அதுதான் அகங்காரம் என்று பெயர்! 'எல்லாம் எனக்குத் தெரியும்; நான் சாதிப்பேன்...' என்கிற நினைவு.

'இந்த முதலை என்ன முதலை...? இதைப் பிடித்து இழுத்து, காலால் தேய்த்து இருக்கிற இடம் தெரியாமல் பண்ணிவிட மாட்டேனா!' என்கிற அகங்காரம்! அந்த சக்தி தனக்கு உண்டு என்கிற கர்வத்தில் 499 வருஷங்கள் வரை சண்டை போட்டது!

ஐந்நூறாவது வருடம் வந்தது... அப்போது யானையின் கால்கள் நாலும் மீன்கள் கொத்திக் கொத்தி அழுக ஆரம்பித்து விட்டன. நிற்க முடியாமல் அதன் எலும்பெல்லாம் வெளியிலே தெரிகிறது! ஜலத்திலேயே அது விழுந்து விடும் போலிருக்கு...

தன்னை ரக்ஷித்துக் கொள்ள தனக்கு சக்தி கிடையாது என்பதை ஐந்நூறாவது வருஷத்தில் தெரிந்து கொண்டது யானை!

கரையைச் சுற்றிலும் அந்த யானையின் பத்தினிமார்கள்; அம்மான்மார்கள்; மாமியார், மாமனார், மைத்துனன்மார்கள், பந்துக்கள் எல்லாம் நிற்கின்றன. இந்த ஐந்நூறு வருஷமாக இது படுகிற அவஸ்தையையெல்லாம் பார்த்துக் கொண்டு நிற்கின்றன.

அப்போது இந்த யானை, அதுகளையெல்லாம் பார்த்து, "நான் இப்படி அவஸ்தைப்படறேனே... நீங்களெல்லாம் எனக்கு உபகாரம் பண்ணக் கூடாதா?'' என்று கேட்கிறதாம்.

அந்த தீனமான பார்வையைப் பார்த்து, உபகாரம் பண்ணணும் என்கிற எண்ணமே அவற்றுக்கு ஐந்நூறு வருஷம் கழிந்துத்தான் வந்ததாம்! ஒவ்வொரு யானையாக துதிக்கையை நீட்டி முதலையிடம் சிக்கிய யானையை இழுக்க ஆரம்பித்ததாம்.

அப்போது என்ன ஆயிற்று...? சிக்கிக் கொண்ட யானை வெளியிலே வரவில்லை; இழுக்கப் போன யானைகளெல்லாம் தண்ணீரில் விழ ஆரம்பித்து விட்டன! ஒவ்வொரு யானையாக இப்படி ஜலத்திலே இறங்க இறங்க, பயந்து போய், காப்பாற்றும் முயற்சியைக் கைவிட்டு அவை கரைக்கு வந்து விட்டன.

"என்ன செய்வது! விதி வலியது. முதலை பிடித்து இழுக்க, இப்படி ஜலத்திலே நீ சாக வேண்டும் என்று தலையிலே எழுதி விட்டான் பகவான். நாம் என்ன பண்ண முடியும்...'' என்று கரையேறிய யானைகள் அழ ஆரம்பித்தன.

ஆனால், 'விதி'யை ஜெயித்து அந்த யானை வெளியே வரத்தான் செய்தது – எப்படி...? யானை ஆயிரமாண்டு காத்திருந்ததில்லையா? நீங்கள் ஒரு வாரம் காத்திருங்கள்; அடுத்த வாரம் சொல்கிறேன்.

(தொடரும்)

புரிதல்

சுசிலாவால் அந்தச் சூழ்நிலையில் உட்கார்ந்திருக்க முடியவில்லை. பரபரத்த கைகளை கட்டுப்படுத்த முயன்றாள்.

அழுக்கடைந்த ரயில்வே பிளாட்பாரத்தில் அமர்ந்திருப்பது போன்ற அவஸ்தையில் தவித்தாள்.

எல்லாம் இந்த கொள்ளுப் பாட்டியால் வந்த சங்கடம்(லொள்ளு!).

"பாட்டிக்கு இப்பவோ, அப்பவோன்னு இருக்குடி. நம்ம குடும்பத்துல பெரியவ. ஒரு நடை போய் பார்த்துட்டு வந்துடு."

அம்மாவின் பேச்சைத் தட்டமுடியாமல் கிராமத்துக்குச் சென்றாள்.

சொல்லி வைத்தது போல ரமணனும் அப்போதுதானா பாட்டியைப் பார்க்க வர வேண்டும்?

படுத்த படுக்கையாய் இருந்தாலும் பாட்டியின் பேச்சும், பார்வையும் குறையவேயில்லை.

"ஏன்டீம்மா, நீ இப்ப ரமணனோட சேர்ந்து வாழலியாமே?"

இருமலுக்கு நடுவில் கேட்டபடி சுசிலாவை ஊடுருவிப் பார்த்தாள்.

"ஆமாம். ஒத்துவரலே. தனியாய் வந்துட்டேன்."

பாட்டி அவள் கன்னத்தைத் தடவிப் பார்த்தாள். கை கீழே இறங்கி கழுத்தில் வந்து நின்றது.

"தாலி இருக்கா, இல்லை, கழட்டி ஆணியிலே மாட்டிட்டியா?"

சுசிலா அதிர்ந்துபோய் பார்த்தாள்.

இதே போல ரமணனிடம் பேசியிருக்கிறாள் பாட்டி என்று அத்தை சொன்னாள். ரமணன், இவளின் ஒன்றுவிட்ட மாமா பையன்தான்.

"ஆறு மாசமாய் பிரிஞ்சு வாழறேள். இந்த காலத்துல எல்லாமே புதிராயிருக்கு. மனுஷாளை, மனுஷாள் புரிஞ்சிக்கக் கூட நேரமில்லாத ஓட்டம். எதுக்குன்னே புரியாத ஓட்டம். பாவம்."

பாட்டி பெருமூச்சு விட்டாள். அவளின் தலைமாட்டில் ரமணன். கால்மாட்டில் சுசிலா.

"எனக்காக நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு செய்யணும். சாகக் கிடக்கற உசிரு. செய்வீங்களா?"

பயத்துடன் தலையாட்டினர் இருவரும்.

"ஒரே ஒரு நாள் மறுபடியும் நீங்க சேர்ந்து இருக்கணும். ரமணன் பக்கத்துத் தெருவில தான் இப்பவும் இருக்கான். அதே வீட்டுல காலையிலிருந்து, சாயந்திரம் வரை இருந்தாக் கூடப் போதும். சரியா?"

தயக்கமாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

தட்டமுடியாத நிலை. ஒரே ஒரு நாள் தானே! தலையாட்டியதன் பலன், இதோ இன்று ஒன்றாய், அதே வீட்டில்!

ஃபேன் காற்றில் பறக்கும் தூசியின் நடுவே அவளால் உட்கார்ந்திருக்க முடியவில்லை.

பரவாயில்லை! பெருக்கிவிடுவோம்! எழுந்து, விளக்குமாற்றை எடுத்தாள்.


சோபாவில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த ரமணன் நிமிர்ந்து பார்த்தான்.

"எதுக்கு நீ கஷ்டப்படறே?"

அவள் பதில் சொல்லவில்லை. கோபம் தான் வந்தது.

"ஆம்பளைன்னா பெருக்கி, வீட்டை சுத்தமாய் வைச்சுக்கக் கூடாதா? ப்ச், பொறுப்பே கிடையாது. வேலைக்காரியையாவது வைச்சுக்கலாம்."

கிருஷ்ணா



வேலைக்காரி என்றதும் முன்பு நடந்த சம்பவம் மனசுக்குள் ஓடியது.

'பொண்டாட்டிங்கறதுனாலே உன்னை சகிச்சுண்டு வாழறேன். வேலைக்காரி ரூபத்துல இன்னொரு பெண்ணா? வேண்டவே வேண்டாம். உன்னைப் பார்த்தப்புறம், எனக்குப் பெண்கள்னாலே வெறுப்பாய் இருக்கு.'

கிண்டலாய் வெடித்தான். பதிலுக்கு வார்த்தையால் இவள் கீறினாள். இருவர் நெஞ்சிலும் ரணம்.

"ஹோட்டலிலிருந்து சாப்பாடு வாங்கிட்டு வந்துடறேன்."

எழுந்தவனை யோசனையுடன் பார்த்தாள். கறுத்து, உடல் இளைத்துப் போய் நின்றவனைப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

இவளுக்கும் ஹோட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளாது.

"அரிசியெல்லாம் இருக்கு. காய்கறி மட்டும் வாங்கிட்டு வாங்க."

"வீண் சிரமம் உனக்கு."

முனகினான்.

"என்ன காய் வாங்கட்டும்?"

அவள் பதில் சொல்லாமல் உள்ளே நகர்ந்தாள்.

எப்போதும் இப்படித்தான். ஏதாவது கேட்பான். இவள் பதில் சொல்லுவாள். நேர் மாறாய்ச் செய்வான்.

ஒருமுறை கத்தரிக்காய் வாங்கிவரச் சொன்னாள். கத்தரிக்காய் ரசவாங்கி செய்ய எல்லாம் தயார் செய்து வைத்திருந்தாள்.

உருளைக் கிழங்குடன் வந்தான். கத்தரி கிலோ பன்னிரண்டு ரூபாயாம். வாங்க வில்லை என்றான்.


"நான் ஆசைப்பட்டு ஒண்ணு கேட்டுடப் படாதே. ஒரு பன்னிரண்டு ரூபாய் பெற மாட்டேனா நான்."

சண்டைக் கோழியாய் இவள். சேவலாய் அவன். வீடு இரண்டுபட்டது அன்று.

ரமணனும் அதே நேரம் இந்த சம்பவத்தை அசை போட்டபடிதான் நடந்து போய்க் கொண்டிருந்தான் வீதியில்.

சுசிலாவுக்கு கைக்கு கை. வாய்க்கு வாய். அவள் கூட்டி





'ஏண்டா மணி, ஹோம்–ஒர்க் கொஞ்சம் பாக்கி இருக்குன்னியே, முடிச்சுட்டியா...?''

''ஏம்பா! ஒருத்தனோடு பேசிக்கிட்டு இருக்கும்போது குறுக்கே பேசாதீங்கன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?''

– பெ. கலாசாமி

முடித்ததும் வீடே எப்படி மாறிவிட்டது. லஷ்மி களை என்பது இதுதானோ?

பாவம், ஊரிலிருந்து வந்த களைப்பைப் பொருட்படுத்தாமல் சமைத்துப் போட வேறு தயாராகிவிட்டாள்.

நல்ல கத்தரிக்காயாய் வாங்க வேண்டும். கேரட் சாலட் அவளுக்கு மிக இஷ்டம். தனக்குத்தான் பிடிக்காதுதான். பரவாயில்லை! இந்த இங்கிலீஷ் காய்கறிகள் மேல் ஏன் தனக்கு இப்படி ஒரு வெறுப்பு? கிராமத்தில் அப்படியே நாட்டுக் காய்களின் ஊடே வளர்ந்ததாலோ?

இன்றைக்கு சமையல் சுசீலா இஷ்டப்படி தான்.

அவளுக்கு, கொஞ்சம் வாய் மட்டும் நீளாதிருந்தால் நன்றாயிருக்கும். அதென்ன ஜூக்கோ? வார்த்தைகளால் கொட்டிவிடுகிறது, புரையோடிப் போகும் அளவுக்கு.

டீ.வி. ஓடிக் கொண்டிருந்தது. புத்தி அதில் பதியாமல் தவித்தாள் சுசீலா.

வயிற்றிலிருந்து 'மியாவ்' கேட்டது. இப்போது, முதலில் பூனைக் குரலில் தான் சத்தமிடும் பசி. நேரம் ஆக ஆக கர்ஜிக்க ஆரம்பித்து விடும் வயிறு. அல்சர் வேறு.

போய் சாப்பிட வேண்டியதுதான். இவரும் வரவேண்டியதுதானே. சமையல் எல்லாம் முடித்து விட்டது தெரியும்.

கேட்கக் கூச்சமோ? இவர்களுக்குள் ஏற்பட்டுள்ள இந்த அந்நியத்தன்மை இரைவரை தயங்க வைக்கிறதோ.

எதுக்கு ஃபார்மாலிடி? இவருக்குப் பசித்தால் இவரே போய் சாப்பிட்டுக் கொள்ளட்டும். எனக்குப் பசிக்கிறது இப்போது.

சாப்பிட எழுந்தாள். தட்டை எடுத்து வைக்கும் போது சிறு தவிப்பு. இரண்டு பேர் தட்டையும் எடுத்து வைத்தாள்.

டைனிங் டேபிள் சேரில் அமர்ந்தாள். ஏதோ ஒரு சங்கடம். அவருக்கும் பசிக்கத் தானே செய்யும். போனால் போகிறது! பாவம் கஷ்டப்பட்டு நடந்து போய் காய்கறி வாங்கி வந்திருக்கிறார். அதுவும் தனக்குப் பிடித்ததாய்!

''சாப்பிடலாமா?''

ஹாலுக்குப் போய், குரல் கொடுத்தாள்.

''ம்!''

எழுந்து வந்தான் ரமணன்.

உட்காரும்போது டேபிள் கால் தடுக்கி, விழப் போனவளை சட்டென தாங்கிப் பிடித்தான்.

''சாரி'' என்றான். அவசரமாய் கைகளை விலக்கிக் கொண்டான்.

''அப்பா, அதே முரட்டுப் பிடி.''

செல்லமாய் எழுந்த உள்மனசுக்குரலை பட்டென அடித்து, அடக்கினாள்.

நீண்ட மாதங்களுக்குப் பிறகு இருவரும் சேர்ந்து சாப்பிடுகிறார்கள்.

ரமணனுக்கு, இவளின் சாம்பார் மிகவும் இஷ்டம். மூன்று முறை சாம்பார் சாதமே சாப்பிட்டான்.

சமைப்பவருக்கு திருப்தி கிடைப்பதே, சாப்பிடுபவர் வயிறாரச் சாப்பிடும்போது தானே.

சுசீலாவின் மனசுக்குள் நெகிழ்ச்சி.

''இன்னும் கொஞ்சம் போட்டுக்குங்க.''

''நீயும் போட்டுக்க சுசீலா.''

ஒருவரையொருவர் உபசரித்துக் கொண்டனர்.

''சாப்பிட்டதும் நீ போய் ஹாலில் ரெஸ்ட் எடு. நிறைய வேலை செஞ்சுட்ட. நான் சுத்தப்படுத்தி வைக்கிறேன் டைனிங் டேபிளை.''

ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்தாள்.

''நீங்க இப்படிச் சொன்னதே சந்தோஷம். இன்னிக்கு ஒரு நாள்தான் உங்களுக்கு ஆபீஸ் லீவு. நான் பார்த்துக்கறேன்.''

''பரவாயில்லை சுசீலா.''

பிடிவாதமாய் வேலை செய்தான்.

''உனக்குப் பிடிக்குமேன்னு வாங்கிட்டு வந்தேன், காய்கறி வாங்கப் போனபோது.''

பீடாவை நீட்டினான்.

''சாப்பிட்டதும் ஒரு தம்ளர் மோர் குடிங்கனே.''

அவள், தயாராயிருந்த தம்ளரை நீட்டினாள்.

மறுபடியும் ஹாலில் வந்து அமர்ந்த போது அவர்களுக்குள் இறுக்கம் தளர்ந்திருப்பதை

இருவருமே உணர்ந்தார்கள்.

டீ.வி.யில் ஏதோ சினிமா. அதிலும் கணவன், மனைவி ஊடல்தான்.

"ரொம்பவும் அதிகப்படுத்திக் காண்பிக் கறாங்க சினிமாவிலே."

சினிமாவில் ஆழ்ந்திருந்தவனை ஓரக் கண்ணால் பார்த்தான்.

வெகுளியான முகம்தான். குழந்தைத்தன மான துடுக்குப் பேச்சு. எங்கு பிரச்னை? ஏன் இருவருக்குள் இந்தப் பிரிவினை?

இன்று இதுவரை கழிந்த பொழுதில் எந்தச் சச்சரவும் இல்லையே, எப்படி இது மட்டும் சாத்தியமாயிற்று?

இவளை தன் பிடிக்குள் வைக்க முயன்ற தன் விளைவுதான் இதுவோ?

தன் பிடி இறுக, இவள் அடங் காமல் திமிர... கரெக்ட்! ஆண் என்ற ஈகோதான் பிரச்னையே.

ஆபீஸிலும், வெளியிலும் எவனெவனிடமோ விட்டுக் கொடுத்துப் போகிறபோது, வீட்டில் மட்டும் எதற்கு இந்த ஈகோ முகமூடி?

ஏதோ உறுத்தலில், சசிலாவும் ஓரக் கண்ணால் பார்க்க, அவன் பார்வை அவசர மாய் விலகுவது தெரிந்தது.

நல்லவர்தான். முன்கோபம்தான் ஒரே கெட்டகுணம். உரிமை உள்ள இடத்தில் தானே கோபம் வெளிப்படமுடியும். இன்று போல் வாய்மூடி கொஞ்சம் தழைந்து போயிருக்கலாமோ?

தடுமாறி விழப் போன தன்னை, சாப்பிட உட்காரும்போது, பிடித்து, உடனே 'சாரி' என்றாரே. தன்னைத் தொட்டு விட்டதால் வந்ததோ இந்த 'சாரி?' எத்தனை உத்தமர்?

ஓரக்கண்களின் வழியே அவர்கள் புதி தாய்ப் பிறக்க முயன்றார்கள்.

இதைப் பக்கத்து வீட்டுச் சிறுவன் மூலம் அறிந்த பாட்டிக்கும் ஒரு புது தென்பு வந்தது போல் இருந்தது.



அருள்வாக்கு

குழந்தைகள் ஸ்வாமியை 'உம்மாச்சி' என்றே சொல்லும். குழந்தைகளின் பரம்பரையில் சில தனி வார்த்தைகள் உண்டு. இவை ஆயிரக்கணக்கான வருஷங்களாக வந்து கொண்டிருக்கின்றன. பெரியவர்களின் வார்த்தைகளும், அவற்றின் அர்த்தங்களும் மாறும். குழந்தைமொழி மாறுவதில்லை. 'உம்மாச்சி' என்ற குழந்தைமொழிக்கு 'ஸ்வாமி' என்று அர்த்தம். என்னிடம் குழந்தைகளை அழைத்து வருகிறவர்கள் கூட, "உம்மாச்சித் தாத்தாவுக்கு நமஸ்காரம் செய்" என்று அவற்றிடம் சொல்லக் கேட்டிருப்பீர்கள். 'இதென்ன உம்மாச்சி? இதன் சரியான மூலம் என்ன?' என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

திருச்சி மலைக் கோட்டைக்குப் போயிருந்தேன். அங்கே உள்ள கோயில் ஸ்ரீபாதந் தாங்கிகளில் திருநல்லத்திலிருந்து (கோனேரி ராஜபுரம்) வந்திருக்கிறவர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவரை இன்னொருவர் "உம்மாச்சு" என்று கூப்பிடுவதைக் கேட்டேன். திருநல்லத்தில் ஸ்வாமியின் பெயர் உமாமகேசுவரன் என்பது. எனக்கு உடனே விஷயம் பளிச்சென்று புரிந்தது. உம்மாச்சு, உம்மாச்சி எல்லாம் உமாமகேசனைக் குறிப்பனவே என்று தெரிந்து கொண்டேன். ஆக, குழந்தைகளின் பாஷையிலிருந்தே அவர்கள் மிகப் பழங்காலத்திலிருந்து உமாதேவியுடன் சேர்ந்த மகேசுவரனைத்தான் ஸ்வாமியாக நினைக்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

குழந்தைகளால் சொல்லப்படுகிற ஒரு விஷயத்துக்குப் பெருமை அதிகம். குழந்தைகளிடம் காமமும் குரோதமும் நிலைத்திருப்பதில்லை. இந்த விநாடி ஆசைப்பட்டு வாங்கிய பொருளை அடுத்த விநாடி கீழே போட்டு விட்டுப் போய்விடும். இந்த விநாடி கோபித்துக் கொண்ட ஒருவரிடம் அடுத்த விநாடியே ஆசையோடு ஓடி ஒட்டிக் கொள்ளும். குழந்தைக்கு மோச எண்ணம் இல்லை. கபடம் இல்லை. இதனால்தான் உபநிஷத்துக்களும் நம்மைக் 'குழந்தையாக இரு' என்று உபதேசிக்கின்றன. குழந்தையே தெய்வம் என்பார்கள். அந்தக் குழந்தை, தெய்வம் என்றால் உமாமகேசுவரன் என்று சொல்கிறதென்றால், அந்தக் கட்டளையை நாம் ஏற்க வேண்டும். வேதத்தின் பாஷையும் குழந்தையின் பாஷையும் ஒன்றாகச் சொல்வது போல் எல்லோரும் சாயங் காலத்தில் அம்பிகை சகிதனான ஈசுவரனை தியானிப்போமாக!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்.



பல்கிப் பெருகிய பதினொன்றாம் வகுப்பு!

"அடப்பாவி ராமானுஜம், நீயா? என்டா இப்படி ஆயிட்டே! படிக்கறபோது மண்டைக்குள்ள ஒண்ணுமில்லாம இருந்தே: இப்ப வெளியிலேயும் ஒண்ணுமில்லையே!"

கலர்கலரான குச்சி ஐஸ் க்ரீமை கடன் சொல்லித் தின்றது, தப்புத் தப்பாக தேசிய கீதம் பாடிய மாணவனை கேலி செய்தது, பெஞ்சு மீது ஏறி நின்று தண்டனை அனுபவித்தது, நடக்காத விபத்து, நடந்ததாகவும் அதனால் காலதாமதமாகி வந்ததாகவும் பொய் சொல்லி, அதை ஏற்றுக் கொண்ட ஆசிரியரும் விபத்தை விளக்கச் சொல்லி, கற்பனையாக விளக்கி, முழு பீரியடையும் ஸ்வாஹா செய்தது, காப்பியடிக்க பேப்பர் காட்டாத முன் பெஞ்சு நண்பனைக் காலால் எத்தியது, நட்புடன் கல்வி புகட்டிய ஆசிரியர் எஸ்.பி.கிருஷ்ணசாமி, தன் குடிசையில் விளக்குகூட இல்லாத ஏழைமையிலும் படிக்க வந்த தட்சிணாமூர்த்திக்கு பிற எல்லா மாணவர்களும் தந்த ஆதரவு...

நினைவுகளில் எதுதான் விட்டுப் போகும்? எல்லாமே பசுமரத்தாணி பதிவல்லவா?

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகான இந்த நண்பர்களின் சந்திப்பில் உடனிருந்தவர்கள் அவர்களுடைய மனைவியர், பிள்ளைகள். சந்தித்துக் கொண்டவர்கள்: சென்னை தியாகராய நகரிலுள்ள ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் 1970ம் வருடம் பதினொராம் வகுப்பு படித்த மாணவர்கள். 'பி'செக்ஷன்.

இப்போது இவர்கள் ஒரு சங்கமாகவே செயல்பட்டு வருகிறார்கள். சென்னையிலிருக்கக் கூடிய நண்பர்கள் மாதம் ஒருமுறை சந்தித்துக் கொள்கிறார்கள்; நண்பர்கள் அனைவரும் மனைவியர் பிள்ளைகளுடன் வருடத்திற்கு ஒருமுறை லேனாவின் பண்ணை வீட்டில் கூடுகிறார்கள். கூட்டமைப்புக்கு இயன்ற வரை பொருளுதவி செய்து, நட்பு மேலும் வலுப்பெற உதவுகிறார்கள். தங்களுக்குள் வியாபார நுணுக்கங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அலுவலக மன பாதிப்புகளையும் அவற்றிலிருந்து விடுபடும் முறைகளையும் பரிமாறிக் கொள்கிறார்கள்.

அந்த மாணவர்களில் ஒருவர் லேனா தமிழ்[illegible]. சுந்தரேசன், ஸ்வே என்ற நண்பர்களின் உள்ளத்தில் நட்புப் பெற்றி, லேனாவின் அயராத முயற்சி; பலன் - முப்பத்தெட்டு இளைஞர்களின் இனிய சந்திப்பு. "இன்னும் மூன்றே மூன்று பேர்தான் பாக்கி; கண்டு பிடித்து விடுவோம்" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்கள் சுந்தரேசனும் லேனாவும்.

"இந்த முப்பத்தெட்டு பேரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் இருந்த சிரமங்கள், நேர விரயம், அலைச்சல் எல்லாமே, ஒவ்வொருவராகக் கண்டு பிடிக்கப்பட்டபோது நட்புப் பகலவனைக் கண்ட பனியாய் விலகின."

சென்னை நகரிலேயே கண்ணாமூச்சி விளையாட வைத்த சந்தர்ப்பங்கள் பல. மும்பை, தில்லி, ஆந்திரா, கல்கத்தா, மலேசியா, துபாய் என்று எந்த மூலை முடுக்கையும் விடாமல் தேடித் தேடி நண்பர்களை சேகரித்திருக்கிறார்கள் இவர்கள்.

சந்திப்பின் துவக்கத்தில் மனைவியர் சற்று ஒதுங்கி நின்று பிரமித்துக் கொண்டிருந்தாலும், தம் கணவன்மாரின் குதூகலம் கண்டு தாமும் ஒருவருக்கொருவர் உரையாடி, கலகலத்து, மாலைப் பிரிவின் போது கண்களில் திரையிட்ட நீரால் நட்புக்கு நன்றி சொன்னார்கள்.

"ஒரு குடும்பத் தலைவராக, தந்தையாக இருக்கும் நிலையை முற்றிலும் மறந்து, அரை நிஜார் சிறுவன் நிலைக்கு வந்து, இவர்கள் துள்ளி விளையாடியது காணக் கிடைக்காத ஒன்று. நட்பின் வலிமை புரிகிறது. ஏற்றத்தாழ்வு பாராத சிறுவர்கள் பரிமாறிக் கொள்ளும் அன்பு அது. நாங்கள் உறைந்து போய்விட்டோம். அவர்கள் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து, பேசாமலேயே பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட காட்சி எங்களை நெகிழ வைத்தது; கண்களில் நீரை வர வழைத்தது"– திருமதி பாரதி விஜயகுமார்.

"எங்கள் தந்தையர் எங்களுக்குச் சமமான சிறு பிள்ளைகளாக மாறிவிட்டதைக் காண வேடிக்கையாக இருந்தது! என் பள்ளித் தோழிகளிடம் இதைப் பற்றிக் கூறினேன். அவர்கள் தமது தந்தையிடம் பேச, அந்த அப்பாக்கள் தம் பள்ளி நாளைய நண்பர்களைத் தேட முற்பட்டிருக்கிறார்கள்!" என்றார் ப்ரீதி, பள்ளி மாணவி.


— பிரபு சங்கர்

மேஷம் :



உற்சாகத்துக்கும் துணிச்சலுக்கும் குறைவில்லீங்க. காரணம் பாக்கெட் நிரம்பியிருக்கும். இதுல விசேஷம் என்னென்னா அப்பப்ப மொய் எழுதி கையிருப்பு கரைஞ்சுட்டே இருந்தாலும் கவலையேபட மாட்டீர்கள். காரணம், பழைய பாக்கியெல்லாம் வந்து சேர்ந்தபடி இருக்கும். பிறகு, சம்சாரத்தோட ஊடல் கூடல் இல்லாம குடும்ப வாழ்க்கை வெண்ணையாட்டமா இருக்கும். 15, 16ம் தேதிங்கல்ல எதிர்பாராதவிதமா எதாச்சும் நல்லது நடக்கும். ஆனா லாட்டரி, ஷேர் எதனா வாங்கினீங்களோ, போச்சு! கொஞ்சம் உஷாரா இருந்துக்கங்க.

ரிஷபம் :



போன வாரத்து அலைச்சலெல்லாம் இப்ப ஒரு முடிவுக்கு வந்திருக்குமே? இனி கொஞ்ச நாள் உல்லாசமா இருப்பீங்க. வீடு, நிலம் வாங்கற பிளான் இருந்திச்சின்னா, உடனே இறங்குங்க. பிறகு இப்படியொரு நல்ல டயம் வர லேட் ஆவலாம்! வாரம் ஃபுல்லா ஜாலியா பொழுது போவும். அனுபவிங்க.


மிதுனம் :



அட, கற்பனை உலகத்துலேருந்து கொஞ்சம் எழுந்து வாங்க சாரே! நேத்து வரைக்கும் தள்ளிட்டே போன நல்ல காரியங்கள் இப்ப நடக்கப் போவுது. காந்தி கணக்குன்னு கைகழுவி விட்ட கடன் பாக்கி வந்து சேரப் போவுது. வீட்டுல சந்தோசமான சூழ்நிலை கூடி வருது. எந்திரிச்சி ஆக வேண்டியதைப் பார்ப்பீங்களா...!

கடகம் :

ஜென்ம நட்சத்திரம் ஸ்ட்ராங்கா இருக்குதுங்க. அதனால வார ஆரம்பம் நல்லா இருக்குது. வீட்டுல டும் டும் எதனா தள்ளிப் போயிட்டு இருந்திச்சின்னா, இப்ப ஓர்க் அவுட் ஆயிடும். புதுசா எதனா தொழில் தொடங்கற ஐடியா இருந்தாலும் இப்பவே ஆரம்பிச்சிடுங்க. நல்லா நடக்கும். மகான்கள், சாமியாருங்க (நல்ல சாமிங்க!) யாரையாச்சும் இந்த வாரம் சந்திப்பீங்க. அதனால மன அமைதி கிடைக்கும். அது போதாதா?



சிம்மம் :



வாரத் தொடக்கம் கொஞ்சம் சரியில்லை சார். செலவு கைக்குள்ள நிக்காது. போறாதகுறைக்கு நாக்கு எட்டடி பாஞ்சி பிரச்னை உண்டாக்கும். பேச்சைக் குறைத்து, கொஞ்சம் சோலில கவனம் செலுத்துங்க. கம்ப்யூட்டர் துறைல இருக்கறவங்களுக்கு மட்டும் இந்த வாரம் ஸ்மூத்தா ஓடிடும்!

கன்னி :




சரணடையலாமா வேணாமான்னு வீரப்பன் குழப்பற மாதிரி நீங்க குழம்பிட்டு இருப்பீங்க – எல்லா விஷயத்திலேயும். குழப்பத்துக்கெல்லாம் காரணம் எக்கச்சக்கமா வந்து மோதற செலவுதான்! கடுமையா உழைச்சி, உடம்பு கெட்டுப் போயி, இப்படி செலவும் கை மீறுதேன்னு கவலைப்படுவீங்க. ஆனா பன்னண்டாம் தேதிக்கு அப்புறம் கொஞ்சம் ரிலீஃப் தெரியுது. மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க. எல்லாம் சீக்கிரம் சரியாப் பூடும்.

துலாம் :


போன வார சோர்வுக்கு டாட்டா!

நடக்குமென்பார்




கல்யாணமாகாத பெண்கள் சில பேருக்கு இந்த வாரம் யாராச்சும் பசங்க லவ் லெட்டர் குடுப்பாங்க. ஆளைப் பார்த்து செலக்ட் பண்ணுங்க. இயல்பாவே, உங்க திறமைகள் வெளில வரப்போற வாரம் இது. லவ் மேட்டர்ல கொஞ்சம் ஜாக்கிரதையா திறமை காட்டுங்க. புது நண்பர்கள் சிலருக்கு உண்டாகலாம். உடம்பும் சிக்கலில்லாம நல்லாவே இருக்கும். கண்ணு மட்டும் கொஞ்சம் படுத்தலாம். பார்த்துக்கங்க.

விருச்சிகம் :



ரொம்ப விசேஷமா சொல்றாப்பல ஒண்ணும் இல்லேன்னாலும் பிரச்னை இல்லாத வாரம் இது. ஆபீஸ் போறவங்களுக்கு மேலதிகாரிகளோட பாராட்டு கொஞ்சம் பூஸ்ட் குடுக்கும். வெளியூர் போக வேண்டி வரலாம். அதனால கொஞ்சம் கூடுதல் செலவு. பிறகு, அப்பா, அம்மா உடல்நலம் கவனம். வாரக் கடைசில வீட்டுல சின்னதா எதாச்சும் சண்டை வரலாம். வழக்கம் போல உங்க சம்சாரம்தான் ஜெயிப்பாங்க.

தனுசு:



உங்களோட ஸ்பெஷாலிட்டி என்னன்னா, சுலபமா எல்லாரையும் கணக்கு பண்ணி உங்க சைடுல இழுத்துக்கறீங்க. இந்த சாமர்த்தியத்தால இந்த வாரம் வக்கீலுங்க, அரசியல் வாதிங்களுக்கு ரொம்ப சூப்பரா இருக்கப்போவுது. அட, கட்சிக்காரங்களால ஆதாயம்னு சொல்ல வரேன். இந்த ராசிக்காரப் பொண்ணுங்களுக்கு நகை ராசி எட்டிப் பாக்குது. ஊட்டுக்காரங்க பாக்கெட் பத்திரம்! சிலருக்கு டிரான்ஸ்பர் வரலாம். அது கொஞ்சம் மனக்கசப்பு தரலாம்.

மகரம்:



ஒரே விருந்தாளிங்க தொந்தரவா இருக்கும். குறிப்பா வம்பு பேசறதுக்குன்னு வருவாங்க. மாட்டிக்கிட்டு வாயைக் குடுக்காதீங்க. அப்புறம் சம்சாரத்துக்கிட்ட திட்டுவாங்குவீங்க. வீட்டுல சண்டை வரும். பேசாம வாய்க்கு பிளாஸ்திரி போடுங்க. அப்புறம் ஒரு விஷயம். வீட்டுல செல்லமா நாய் பூனை வளர்க்கறவங்களா இருந்தீங்கன்னா, இந்த வாரம் அதுகளைக் கட்டி வைங்க. ஒரு சேஞ்சுக்கு உங்களை டேஸ்ட் பார்க்க ஆசைப் படலாம்.

கும்பம் :



உழைப்பு, உறுதி இது ரெண்டுதாங்க உங்க பக்கபலம். குறிப்பா இந்த ராசிக்கார அரசியல் வாதிங்களுக்கு இது திருப்புமுனை வாரம். அம்மணிங்களுக்குப் புடைவை நகை எதாச்சும் புதுசா கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்ல மட்டும் கவனமா இருக்கணும். சறுக்கி விழ சான்ஸ் இருக்குது.

மீனம் :



இந்த வாரத்திலேருந்து தொடர்ந்து கொஞ்ச நாள் உங்களுக்கு பிரச்னை அதிகம் இல்லாத, நல்ல நாட்களாகவே அமையப் போவுது. குறிப்பா, வாத்தியார் உத்யோகத்துல இருக்கறவர்களுக்கு, கலைஞர்களுக்கெல்லாம், பிரகாசமான எதிர்காலம் கூடி வருது. எதிரிங்க எல்லாரும் நடுங்கிடுவாங்க. அதனால துணிச்சலா எந்தக் காரியத்தையும் தொடங்கலாம். வீட்டுலயும் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. சில நல்ல காரியங்கள் செய்ய ஆசைப்படுவீங்க. ஒத்திப் போடாதீங்க.

நடக்கும்!

11

நர்மதாவும் தொண்டர்களும் அடைக்கப்பட்டிருந்த போலீஸ் *வேன் கடை வீதி வழியாகத்தான் காவல் நிலையத்திற்குச் சென்றது.

வேனில் இருந்த தொண்டர்களுக்குப் பழகிய அந்தச் சாலையில் உற்சாகம் கட்டு மீறியது. சந்த லயம் தவறாமல் கோஷமிட்டனர். காவலர்கள் அடக்க முயற்சி செய்தும் பயனில்லை.

அந்த வேன் போன சற்று நேரத்தில் நர்மதா குழுவினர் கைதான விவரம் ஊரெங்கும் பரவி விட்டது.

ஊரின் பொது நலன் காக்கும் பிரச்னைக்காக அவர்கள் கைதாகி இருந்தாலும் அந்தச் செய்தி எல்லோருக்குமே மகிழ்ச்சியாக இல்லை.

பலவகை விமர்சனங்கள் எழுந்தன.

"இந்தக் காலத்துப் பொம்பளைங்களுக்கெல்லாம் லீடர் ஆயிடணும்னு ஆசைப்பா."

''என்னமோ தொழிற்சாலை கட்னா கட்டிட்டுப் போவட்டுமே.. இதுக்கு இவங்களுக்கு என்னா! கடுப்பு வந்துட்டுது?"

''இதெல்லாம் பிரபலமாகறதுக்கு முயற்சிப்பா."

"இயாகி பேத்தியாச்சே! வம்சப் பெருமையைக் காப்பாத்த வேணாம்?"

''சும்மா சொல்லக் கூடாது! நேத்திக்கி அவளை பொண்ணு பார்க்க வந்தாங்க. அதை தூக்கிப் போட்டுட்டு ஜெயிலுக்குப் போவுதுன்னா செமை தில்லுதான்."

''அனந்தாச்சாரி பேத்திக்கி அடுத்த எலக்‌ஷன்ல எம்.எல்.ஏ. ஸீட் கிடைச்சுடும் இல்லே."

''ஆர்றாவன் அறிவுகெட்ட முண்டம்! சர்தார்ஜி ஆசைப்பட்டிருந்தா எம்.எல்.ஏ. இன்னா, எம்.பி.யாவோ மந்திரியாவோ ஆயிருப்பாரு. இப்படி பேத்தி ஸீட் கேட்பாங்கிறியே."

உடனே ஒன்றை நம்ப மறுப்பது. எதற்கும் உள்நோக்கம் கற்பிப்பது. இந்த மனப்பான்மை விஷக்களை போல் திருக்கூடலிலும் பரவியிருந்தது.

சுதந்தரத்திற்குப் பிறகு அங்கே கட்டடங்கள் வளர்ந்தன. தொழிலும் வியாபாரமும் வளர்ந்தன. கல்வியும் வளர்ந்தது.

ஆனால் எதையும் அவநம்பிக்கையோடு, போலி மரியாதையோடு, பாசாங்கோடு, பயத்தோடு பார்க்கிற சுயநலம் வளர்ந்திருந்தது.

ஏற்பட்ட வளர்ச்சிக்கெல்லாம் உந்து சக்தியாக இருந்தது அதே சுயநலம்தான்.

தனித்தனியே ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டாலும் ஒரு பொதுப் பிரச்னைக்கு சாதி மத இனச் சாயம் பூசாமல் ஒன்றுகூடி தீர்வு காணும் உணர்வு திருக்கூடலிலும் குன்றி வந்தது.

மேல் வேரில் ஓடிய இந்த



கன்னியாகி நிலவினில் ஆடி...

வையவன்

சுயநல உணர்வின் முதல் வெளிப்பாடாக அந்த விமர்சன அலை எழுந்து அடங்கியது.

திருக்கூடல் இன்னும் நினைத்துப் பெருமைப்படுகிற வரலாறுகள் உண்டு.

பரிவிராஜகராக பாதயாத்திரை செய்யும் போது விவேகானந்தரின் காலடிகள் மிதித்த மண் அது.

காந்திஜி தொடங்கி பல தேசியத் தலைவர்கள் அந்த ஊருக்கு வந்து பேசி, ஓய்வெடுத்து, காலாற நடந்து அனந்த சயன பெருமாளைத் தொழுது விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இன்னும் தேசிய உணர்வும் பொது நல நோக்கும் அடிவேரில், வேரடி மண்ணில் உயிர்த்திருக்கிற ஊர் அது.


விமர்சனத்தின் முதல் அலையில் காலம் கலக்கியிருக்கும் கசடுகளும் கழிவுகளும் அப்புறப்பட்டபின் திருக்கூடலின் அழிக்க முடியாத அந்த உணர்வு மேலோங்கியது.

போலீஸ் ஸ்டேஷனிற்கு எப்.ஐ.ஆர்.போட போலீஸ் வேன் தொண்டர்களை அழைத்துச் சென்ற ஒரு மணி நேரத்தில் அது நேர்ந்தது.

அடிபட்டுப் படுக்கையில் படுத்திருந்த மோகன்ராஜ் எழுந்து வந்து விட்டான். அவனோடு ஒரு கூட்டம் இளைஞர்கள் வந்தார்கள்.

மீனாட்சியோடு சில பள்ளித் தோழிகள் சேர்ந்து





"ஒரு கேஸிலாவது ஜெயிக்கிற வரை ஷேவ் செய்துக்க மாட்டேனு உங்களை யார் சபதம் எடுக்கச் சொன்னது!"

– உ. ராஜாஜி

கொண்டார்கள்.

திருக்கூடலின் பொது நல உணர்வு இந்த இருவரால் தான் விழிப்புற்றது என்று கூறிவிட முடியாது.

எப்.ஐ.ஆரை எழுதிக் கொண்டிருந்த போலீஸ் ரைட்டர் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார். காவல் நிலையத்தைச் சுற்றிச் சிறுகச் சிறுகக் கூட்டம் பெருத்தது.

"ஸார்! வெளியே 'மாப்' ஜாஸ்தியாயிட்டே போவுது" என்று இன்ஸ்பெக்டரிடம் எழுந்து போய்ச் சொன்னார்.

இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார். பார்த்தவுடனே புரிந்தது. நிலைமை சரியில்லை.

நெடுஞ்சாலையின் போக்குவரத்து ஸ்தம்பிப்பது போல் ஆயிரம் பேருக்கு மேல் காவல் நிலையத்தைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இது வேடிக்கை பார்க்கக் கூடும் கூட்டம் இல்லை. "என்னப்பா கூட்டம் போட்டு ரோடைப் பிளாக் பண்ணிட்டு நிக்கிறீங்க" என்று எச்சரிக்கக் கூட அவரால் முடியவில்லை.

கூட்டத்தின் மனோநிலை அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது என்று அவர் உள்ளுணர்வு சொல்லிற்று.

அவர் தலையைப் பார்த்ததும் ஓரமாக நின்றிருந்த மோகன்ராஜும் மீனாட்சியும் ஜனங்களை ஒதுக்கி வழி செய்து முன்னால் வந்தனர்.

"நர்மதாவை விடுதலை செய்" என்று மோகன் ராஜ் முஷ்டியை உயர்த்தி உரக்கக் குரல் கொடுத்தான்.

அடுத்து மீனாட்சி குரல் கொடுத்தாள்.

இந்த இருவர் குரலிலும் பொங்கியெழுந்த உணர்ச்சி வேகத்திற்கு ஒரு தீச்சுடரின் சக்தி இருந்தது. குழுமியிருந்த உதிரி உதிரியான எண்ணப் போக்குகளை ஒரு மின்னாற்றல் போல் அந்த சக்தி ஒருங்கிணைத்தது.

"நர்மதாவை விடுதலை செய்." மீனாட்சி குரல் கொடுத்தாள்.

பல நூறு குரல்கள் ஒருங்கிணைந்து தொடர்ந்தன.

"தொண்டர்களை விடுதலை செய்" என்று அடுத்து மோகன் ராஜ் எழுப்பிய குரலுக்கும் அதே எதிரொலி வலுத்தது.

ஒரு நிமிஷத்திற்கு நூறு வாகனங்கள் பறக்கும் தேசிய நெடுஞ்சாலை அது. இரவும் பகலும் ஓயாத வாகனப் பிரவாகம். அது தடைப்பட்டது.

'சாலைச் சந்திப்பில் கூட்டம் பெருகி வந்தது. நெடுஞ்சாலையின் இருபுறமும் வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து நிற்கத் தொடங்கின.

இன்ஸ்பெக்டர் கிழக்கும் மேற்கும் திரும்பிப் பார்த்தார். ஒரு கி.மீ. தூரத்திற்கு வாகனங்கள் நின்றிருந்தன. ஒவ்வொன்றிலிருந்தும் விதவிதமான ஹாரன் ஓசைகள். காது ஜவ்வு பிய்ந்து விடும் போலிருந்தது.

தடியடியா.. கண்ணீர்ப் புகையா? அவர் மூளை வேகமாகச் செயல்படத் தொடங்கிய்து.

எதைச் செய்தாலும் மேலிடத்தின் அனுமதிக்கு அப்புறம். அனுபவம் அவருக்கு கற்பித்திருந்த விவேகம் அது.

"ட்வெண்டி ஒன் செவன்டி, வயர்லஸ்ல டி.எஸ்.பி. அம்மாகிட்டே காண்டாக்ட் வாங்கு" என்று உத்தரவிட்டார்.

வெளியே நர்மதாவையும் தொண்டர்களையும் விடுதலை செய்யக் கோரும் கோஷங்கள் வலுவடைந்தன.

காவல் நிலையச் சுவர்கள் கடந்து, அந்த ஓசை உள்ளே ஒலித்தது.

எப்.ஐ.ஆருக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நர்மதாவின் காதில் அது விழுந்தது. தொண்டர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"யோவ் ஃபிப்டீன் எய்ட்டீன்! 'நீயும் லெவன் செவன்டீனும் ரெண்டு ரைபிளோட ஸ்டேஷன் கேட்ல வந்து நில்லுங்க. என்னாய்யா ட்வெண்டி ஒன் செவன்டி அம்மா கெடைச்சாங்களா."

கலவரங்களைச் சமாளித்துப் பக்குவப்பட்டிருந்த இன்ஸ்பெக்டர் கலங்காது உத்தரவுகளை அடுக்கினார்.

"ஸார்..." நர்மதாவின் குரல் அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

அவள் முகத்தில் பணிவு. வினயம்.

"என்ன?" என்றார்.

"மே ஐ ஹெல்ப் யூ"

"என்ன?" புரியாத எரிச்சலில் அவர் குரல் கடுகடுத்தது.

"கொஞ்சம் வெளியே நிக்கற கூட்டத் தோட நான் பேசலாமா?"

அவர் முகம் இறுகியது.

"என்னம்மா வெளயாடறியா? யூ ஆர் அன் அக்யூஸ்ட். இது போலீஸ் ஸ்டேஷன். பொதுக் கூட்ட மேடை இல்லே."

"ஐ ஆம் சாரி. நான் கலைஞ்சி போகச் சொல்லி கேட்டுக்கிட்டா அவங்க போயிடு வாங்க..." என்று இழுத்தான்.

"வி நோ... நீங்க கவலைப்படத்தேவை யில்லே. 'மாப்' கூடினா எப்படி டேக்கிள் பண் ணனும்னு தெரியாத மாங்கா மடயன் இல்லே நான்."

"ஸாரி சார்! சர்தார் அனந்தாச்சாரியை அழைச்சுண்டு வரச்சொல்லி யாராவது ஒரு ஆள் அனுப்புங்கோ... விபரீதமா எதானும் நடந்துடப்படாது..."

இன்ஸ்பெக்டர் அவளையே பார்த்தார்.

"நாங்க நடத்தறது சாத்வீகப் போராட்டம். எங்க நோக்கம் தூய்மையானது. ஆனா ஜனங்க திடீர்னு உணர்ச்சிவசப்பட்டு, வயலன்ஸ் எந்த நிமிஷத்திலும் ஏற்படலாம். ப்ளீஸ்..."

இன்ஸ்பெக்டருக்கு அவள் சொல்வதன் நியாயம் மனசில் பதிந்தாலும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து தனக்கு அறிவுரை கூறுவதை அவர் ஏற்கத் தயாராயில்லை.

"எல்லாம் எங்களுக்குத் தெரியும்" என்று கூறிவிட்டு வயர்லஸ் ரிசீவரை நெருங்கினார்.

போலீஸ் ஆற்று மேட்டில் நர்மதா வைக் கைது செய்த போது அனந்தாச்சாரி கரையில் தான் நின்றிருந்தார்.

அடுத்து என்ன நடக்கும்? என்ன செய்ய வேண்டும் என்ற விஷயம் அவருக்கு அத்து படி.

சைக்கிள் மிதித்து வீடு திரும்பினார். மஹாலக்ஷ்மியிடமும் கிருஷ்ணமாச்சாரி யிடமும் சுருக்கமாக விஷயத்தைச் சொன் னார்.

பஞ்ச கச்சம் ஜிப்பா புதுசு மாற்றினார். அங்கவஸ்திரத்தை மேலே போட்டவாறு தம் தோல் பையை எடுத்தார்.

"நான் வேலூர் போறேன். இன்னிக்கு சனிக்கிழமை. கோர்ட் லீவு. நர்மதாவை பெயில்ல எடுக்கறது ஸ்ரமம் தான். மேக்ஸிமம் முயற்சி பண்ணிப் பார்க்கறேன்" என்று கூறி விட்டு வெளியே வந்தார்.

அவர் செருப்பைப் மாட்டும்போது போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகிலிருந்த துணிக் கடை ஆள் டி.வி.எஸ். பிஃப்டியில் அரக்கப் பரக்க வந்து நின்றான்.

"சர்தார்ஜி... சீக்கிரமா வாங்க. போலீஸ் ஸ்டேஷன் எதிர்க்க ஒரே ஜனக் கூட்டம். டென்ஷன். டிராபிக்கே நின்னு போயிருக்கு. நான் ஸைடுலே 'கட்' பண்ணி ஆண்ட்ருஸ் பேட்டை சர்க்கக்கா எறங்கி வர்றேன்" என்று பதறினான்.

"டென்ஷனா?"

"ஆமாங்க. ஒங்களை அர்ஜண்டா கையோட கூட்டியாரச் சொல்லி மொதலாளி அனுப்பிச்சாரு."

அந்த துணிக்கடைக்காரர் அவருடைய அபிமானிகளில் ஒருவர்.



"கைகூப்பி வணக்கம் சொல்லப்போய் பலத்த அடிபட்டதா, அதெப்படி?"

"ஸ்கூட்டர் ஓட்டிக்கிட்டுப் போகும் போது அப்படி வணக்கம் சொல்லித் தொலைச்சேன்!"

– ராதா வாசுதேவன்

அனந்தாச்சாரி பின்னால் உட்கார அந்த டி.வி.எஸ். பிஃப்டி சீறிக் கொண்டு புறப்பட் டது.

ஐந்தாவது நிமிஷம் ஒவ்வொருவரையாக் கெஞ்சிக் கூத்தாடி வழி ஏற்படுத்தியவாறு ஓட்டி வந்தவன் அந்த டி.வி.எஸ். பிஃப்டியை காவல் நிலையம் வரை கொண்டு போய் விட்டான்.

அனந்தாச்சாரி கீழே இறங்கியதும் "அருணாசலம், கடையிலேர்ந்து ஒரு ஸ்டூலை எடுத்தா" என்றார்.

அவன் எதற்கு என்று புரியாமல் விழித்து விட்டு சொன்னதைச் செய்வது மேல் என்று ஓடிப்போய் பெரிய ஸ்டூலாக எடுத்து வந்தான்.

ஸ்டேஷன் வாசலை விட்டு சற்று ஒதுங்கி சாலை விளிம்பில் அந்த ஸ்டூலைப் போடச்

சொன்னார்.

ஒருவர் தோளைப் பற்றி மெதுவாக ஏறி ஸ்டூலின் மீது நின்றார்.

கூட்டத்தை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டார் பின் பேசத் தொடங்கினார்.

"உங்க எல்லோருக்கும் வணக்கம்! நீங்க காட்டற ஆதரவுக்கும் உற்சாகத்துக்கும் தலை தாழ்ந்த நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கேன்.

"நாம நடத்தறது சாத்வீகப் போராட்டம். போலீஸ் நர்மதாவையும் தொண்டர்களையும் கைது பண்ணியிருக்காங்க. அது அவங்க டூட்டி.

மேலிடத்து உத்தரவுக்கு அவங்க கீழ்ப்படிஞ்சு தீரணும். சட்டமும் ஒழுங்கும் எண்ணிக்கும் எதனாலயும் சீர்குலைய விடப்படாது.

நர்மதாவை விடுதலை செய்ய இவங்களுக்கு அதிகாரமில்லே. அது ஒங்களுக்கே தெரிஞ்சிருக்கும். நர்மதா குழு தப்பு பண்ணித்தான்னு தீர்ப்புச் சொல்ல வேண்டியது கோர்ட். இவங்களை விடுதலை பண்ண வேண்டிய உரிமை கோர்ட்டோடது.

ஆனா நீங்க இப்படி ஒரு தார்மீக கோபத்தால உணர்ச்சிவசப்பட்டு நிக்கறது பெரிய தப்பாப் போகும்.

நம்ம பிரச்னைக்கு மதிப்பில்லாம போய் எல்லார் வயத்தெரிச்சலையும் கொட்டிக்கற மாதிரி ஆயிடும்.

பாருங்கோ, கிலோ மீட்டர் கணக்கிலே டிராபிக் ஜாம் ஆயிருக்கு. பொது மக்களுக்கு அசௌகரியம். இருக்கூடல்காரனுங்க வழி மடக்கிற பேர்வழிங்கன்னு வயறு எரிஞ்சு சொல்லிட்டுப் போவாங்க.

தயவு செய்து ஒங்க எல்லாரையும் கையெடுத்துக் கும்பிட்டு வேண்டிக்கறேன்... கலைஞ்சு போயிடுங்கோ.. போலீஸுக்கு விபரீதமான ஒரு முடிவு எடுக்கும் வாய்ப்புத் தராதீங்கோ. தயவுசெய்து கலைஞ்சு போயிடுங்கோ..."

அனந்தாச்சாரியின் குரலில் சாந்தமான- ஓர் அதிகார தோரணை ஒலித்தது. அதற்குக் கட்டுப்பட்டே தீரவேண்டும் என்ற அசையாத உறுதி தொனித்தது.

அவர் மீண்டும் மீண்டும் கையெடுத்துக் கும்பிட்டது. கூட்டதின் கொதிப்பைச் சிறுகச் சிறுகத் தணித்தது.


"மோகன்ராஜ்... மீனாட்சி- கொஞ்சம் கூட்டம் கலைய விடுங்கோ.. உதவி பண்ணுங்கோ... ட்ராபிக் போகட்டும்..."

"தலைவர் சொல்றது கரீக்கட்டுப்பா... இன்னாத்துக்கு இவனுங்களாண்டே பேஜாரு... போன தபா இன்னா 'கரம்' வச்சி ஜீப்ல சுத்தி சுத்தி அடிச்சானுங்க..."

ஏதோ ஒரு பழைய உதாரணம் கூறப்பட்டது. கூட்டம் மெதுமெதுவாக அசைந்து, நகர்ந்து கரையத் தொடங்கியது.

எனினும் எப்.ஐ.ஆர். போட்டும் ஜுடிசியல் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட வேண்டியவர்கள் 'டிராபிக் ஜாம்' அகலும் வரை அடுத்த ஒரு மணி நேரம் காத்திருந்தனர்.

(தொடரும்)



காயலான் கடையிலிருந்து கண்காட்சிக்கு...

ஆர்சன் கம்பாட்டா. வயது 29. மும்பைக்காரர். இவர் ஒரு வித்தியாசமான சிற்பக் கலைஞர். காயலான் கடைகளில் சுற்றி, அங்கேயிருந்து பலவிதமான பொருட்களை வாங்கி வருவார். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவை போல இருக்கும் சமாசாரங்களைக் கொண்டு, ஒரு கலைப் பொருளை வடிவமைத்து விடுவார்.

இவர் வடிவமைத்த காயலான் கடை கலைப் பொருட்களைக் கொண்டு பல கண்காட்சிகளை நடத்தியிருக்கிறார். பல கம்பெனிகளின் ரிசப்ஷனில், இவரது கலைப் பொருட்கள், பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்திக் கொண்டிருக்கின்றன!

– மௌஷ்மி
நன்றி: சன்

“‘அனகோண்டா’ ஆட்சிக்கு வழி செய்துவிடாதீர்கள்!”

✉ ‘காமராஜர் ஆட்சிக்கு வாய்தா கொடுங்கள்!’ - தலையங்கம் படித்தேன். த.மா.கா - தி.மு.க உறவுகள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதை உங்கள் தலையங்கம் மிக அழகாகச் சுட்டிக் காட்டியது. மீண்டும் தப்பித் தவறிக் கூட ஜெயலலிதா ஆட்சி வந்து விடக் கூடாது என்ற கவலை உங்கள் தலையங்கத்தில் தெரிகின்றது. தி.மு.க. ஆட்சியே காமராஜர் ஆட்சி போன்று நடக்க முழு ஒத்துழைப்புக் கொடுத்தால் அதுவே த.மா.காவிற்கும் மூப்பனாருக்கும் நல்ல பெயரையும் நல்லதொரு இமேஜையும் ஏற்படுத்தித் தரும்.

திருச்சுழி, சுந்தர் அழகேசன்.

✉ காமராஜர் ஆட்சிக்கு வாய்தா கொடுக்கச் சொன்ன தலையங்கத்தை அன்புடன் வரவேற்கிறேன்: தி.மு.க. - த.மா.கா. இப்படி அடித்துக் கொள்ளும் பட்சத்தில் நாளை ஊழல் ராணி கோட்டையேறி கோலோச்ச ஆரம்பித்து விடுவார். பிறகு, காமராஜ் ஆட்சியும் கிடையாது.... அண்ணாவின் ஆட்சியும் நஹி. ‘ஜெ-சசி’யின் அனகோண்டா (பங்களாக்களை - வளைத்துப் போடுவதால்) ஆட்சிதான் நடக்கும். த.மா.கா விற்கு என்ன உத்தேசம்!

சேலம்-9, மு. இரவிச்சந்திரன்.

✉ “இந்தியாவை எல்லா துறைகளிலும் வல்லரசு ஆக்க வேண்டும்” என்று கடவுளிடம் கேட்பேன் என்ற 15 வயதே ஆன குற்றாலீஸ்வரனின் பதில், அறிவின் முதிர்ச்சியை வெளிப்படுத்திய அசத்தலான கருத்து. நாட்டுப் பற்று மிக்க நம்பிக்கை நட்சத்திரத்திற்குப் பாராட்டுக்கள்!

கோவை-14, ஏ.எஸ். இராமசாமி.

✉ வீரப்பனை ஹீரோவாக்கியது கோபால் தான் என்று கூறிய அடுத்தநொடியே, அரசால் செய்ய முடியாததை ஒரு பத்திரிகையாளர் செய்திருக்கிறார் என்று பெருமையாகவும் சொல்கிறீர் பாரும்! அதிலே ‘பளிச்’செனத் தெரிகிறது. உமது நடுநிலைமை.

நல்லத்துக்குடி, கே.வி. சூர்யா.

✉ “விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் தடை செய்யப் பட வேண்டுமா? கூடாதா?” என்ற விவாதத்தைப் படித்தேன். அதில் பா.ஜ. கட்சியை சேர்ந்த சுபாஷ் “நம் போலீசுக்கு தெரு முழுக்க நாலு அடிக்கு ஒருவர் என்று மரம் போல் நிற்கத்தான் தெரியும். கும்பலை விஞ்ஞானபூர்வமாய் கட்டுப்படுத்தும் முறைகள் தெரியாது!” என்று கூறியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். 95 ஆம்

வட்டமேஜை

ஆண்டு விநாயகர் சதுர்த்தி ஊர்வல கலவரத்தில் எத்தனை போலீஸ்காரர்கள் கல்லடிபட்டு, மண்டை உடைந்து, சிகிச்சை பெற்றார்கள்? கடவுளை கடலில் கரைக்க வருபவர்கள் கம்பியோடும், கத்தியோடும் ஏன் வர வேண்டும்? அன்று மட்டும் சென்னை சீரணி அரங்கில் போலீஸார் தங்கள் உயிரையும் பணயம் வைத்து ‘பலத்த தடியடி’ நடத்தாமல் போயிருந்தால் எத்தனை உயிர்கள் பறி போயிருக்கும்!

சூரனூர், எஸ். காளிதாஸ்.

✉ ‘விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் தடை செய்யப்பட வேண்டுமா? கூடாதா?’ - காரசார மோதல் அல்ல. கருத்துச் செறிவுள்ள மோதல்!

பெங்களூர்-47, வசந்தமலர்.

✉ தாம்பத்தியத்தின் மகத்துவத்தை உணர்த்தும் ஜானகி பாத்திரப் படைப்பும் ‘கோகுலாஷ்டமி’ சிறு கதையின் கதைப்போக்கும் மனதைத் தொட்டது... பாராட்டுக்கள்!

வலையப்பட்டி, எம். பாலசுப்பிரமணியன்.

✉ பேனாவை ஆறாவது விரலாகக் கொண்டு எழுதுவது என்பது தியானத்திற்கு ஒப்பாகும் என்ற தகவல் எழுதுபவர்களுக்கெல்லாம் ஒரு உற்சாக டானிக்!

சென்னை-1, கே.ஆர். உதயகுமார்.

✉ நமது காலம் காதலுக்குச் செய்யும் சோதனையை புதுக் கவிதை வரிகளில் என்னமாய்ப் புரிய வைத்து விட்டார் அம்சப்ரியா!

சென்னை-14, அய்யாவு வாசுதேவன்.

✉ வேரூன்றி வளர்ந்துள்ள ஊழல் இயக்கத்தை இந்தியாவில் அகற்றுவது கடினமான செயல் என்பதை நையாண்டித்தனமாய் வெளிப்படுத்தியிருந்தார், சித்தார்த்!

சென்னை-78, சி. மகேஷ்.

‘வெளிச்சத்துக்கு வந்துவிட்டோம்’ என்கிறாரே பாரதிராஜா?

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? கறுப்பழகியாகத் தோன்றும் (ராமன் அப்துல்லா) கதாநாயகி ஈஸ்வரி ராவ் எப்படி...?

! ‘நான் இத்தனை அழகா?’ என்று பாலு மகேந்திரா எடுத்த ஸ்டில்களைப் பார்த்துத் தாமே வியந்தாராம் ஈஸ்வரி ராவ். பாலு மகேந்திரா ரஸவாதிதான்!

● எஸ். காளிதாஸ், சூரனூர்.

? ‘ஜெ’வுடைய முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன் பிறந்த நாள் வாழ்த்துப் போஸ்டர்களில் எம்.ஜி.ஆரின் வாரிசு என அச்சடித்துள்ளது பற்றி....?

! பாவம் எம்.ஜி.ஆர்! இப்படி கணக்கற்ற வாரிசுகளை உருவாக்குவோம் என்று எதிர்பார்த்தே இருக்க மாட்டார்.



• ரஸவாதி!



• ரஸவாதம்!



• கனிந்த நெருப்பு!



• வாரிசு பட்டியல்!



• தொலைந்தது போக....

● சூர்யநிலா, சேலம்-2.

? சோ. பாலகிருஷ்ணனின் திடீர் உண்ணாவிரதம் கடைந்தெடுத்த ‘ஸ்டண்ட்’தானே?

! அதுவும் ஸ்டண்ட் அல்ல; அவருடைய கோரிக்கைகளை தி.மு.க. ஆட்சி ஏற்றதும் ஸ்டண்ட் அல்ல...

● வி. சிவா, அரசரடி.

? சுப்பிரமணியம் சுவாமி பிச்சை எடுத்துத்தான் கட்சியை நடத்துகிறாராமே?

! ஏன் இப்படி தன்னையும் வருத்திக் கொண்டு பிறரையும் வருத்த வேண்டும்! பேசாமல் அரசியலையே விட்டு விடலாம்.

● கே.ஆர். வேலுச்சாமி, வடக்கலூர்.

? போலி மது பதுக்கிய சிவகங்கை யூனியன் தலைவரை, கட்சியிலிருந்து மூப்பனார் வெளியேற்றி விட்டாரே?...

! அது மட்டுமா...! குற்றம் சாட்டப் பட்டவர்களும் கிரிமினல் பின்னணி உள்ளவர்களும் தமது கட்சியில் தேர்தல் டிக்கெட் பெற மாட்டார்கள் என்றுகூட சொல்லியிருக்கிறார்.



• விலகாத இருள்

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 2002 ஆம் ஆண்டில் உலகத்தையே கட்டிப் போட்டு அதன் தலைவர் ஆவார் ரஜினி என்று சித்தர்களின் ஓலைச்சுவடி சொல்கிறதாமே...!

! எந்த சினிமாவில் என்பதும் சொல்லப் பட்டிருக்கிறதா...?

● கே. சோமசேகர், காவேரிபட்டணம்.

? பாகிஸ்தானுடன் போர் செய்து நமது வலிமையை நிரூபித்தால் என்ன...!

! கடவுளே! கடவுளே! போர் என்கிற பயங்கரம் ஒழிய வேண்டும். உலகமே ஒரு குடும்பமாக வேண்டும் என்று பிரார்த்திப்பதை விட்டு இப்படி விபரீத ஆசையா....!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
பஞ்சவர்ணமகன்,
கருப்பம்புலம், 614 707.

● ப. இராம் முருகன், சிவகங்கை.
? 'பீஹாரில் நடப்பது அரசாங்கம் அல்ல; காட்டு தர்பார்' என பாட்னா உயர்நீதி மன்றம் கூறியிருப்பது பற்றி...?
! நீதிமன்றம் சொல்வதை மக்கள் மன்றமும் கவனித்துச் செயல்பட்டால் சரி.

● பெ. பொன்ராஜபாண்டி., மதுரை-10.
? ஒரு சில மாதங்கள் இருட்டில் இருந்தோம்; இப்போது வெளிச்சத்துக்கு வந்து விட்டோம்...' என்று பாரதிராஜா கூறுகிறாரே?
! இவர்கள் எங்கே வெளிச்சத்துக்கு வந்தார்கள்...! பிரச்னைகள், பூசல்கள், ஈகோ ஆதிக்கங்கள்தான் வெளிச்சத்துக்கு வந்தன.

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.
? தமிழ் மாநில காங்கிரஸ் நெருப்பில் பிறந்த இயக்கம். எங்கள் விமர்சனம் தி.மு.கவுக்குச் சுடத்தான் செய்யும் என்று சிதம்பரம் சொல்கிறாரே...?
! இடைத்தேர்தல்


• அழகல்ல...


• டபுள் வருத்தம்!


• 'நோ டிக்கெட்'

முடியும்வரை விமர்சனங்களை ஆறப் போடுமாறு உத்தரவாகியிருக்கிறதே!

● வெ. நீலா, மன்னார்குடி.
? வில்லனாக நடித்த எம்.என். நம்பியாரிடம் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. கதாநாயகர்கள் வேடத்தில் நடிப்பவர்களிடம் எல்லா கெட்ட பழக்கங்களும் உள்ளன... ஏன் முரண்பாடு?
! கேள்வியின் முதல் பாதி ஓ.கே. இரண்டாம் பாதி sweeping generalisation! பொதுவாகக் கலையுலகில் இருப்பவர்களுக்குக் கெட்ட பழக்கங்கள் உண்டு என்கிற நிலை மாறி வருகிறது.

● அ. கிருஷ்ணகுமார், பு. புளியம்பட்டி.
? 'வீரப்பன் வெளியே அழைத்து வரப்பட்டால் கட்டிக் கொல்வேன்' என்று தேவாரம் சொல்லியிருப்பது குறித்து...?
! வீரப்பன் சுட்டால் தாமும் சுடுவதாகத்தான் பேசியிருக்கிறார். இருப்பினும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவது அழகல்ல. அரசிடமிருந்து அவருக்கு நோட்டீஸ் போயிருக்கிறது.

● எம். அசோக்ராஜா, திருச்சி-15.
? இன்னும் இரண்டு ஆண்டுகளில் பதிவு செய்த உடனேயே சமையல் கேஸ் கிடைத்து விடும் என்கிறாரே டி..ஆர்.பாலு?
! அப்போது சிலிண்டர் என்ன விலையிருக்கும் என்பதையும் இப்போதே சொல்லி வைக்கட்டும் அண்ணாச்சி!

● ச. செந்தில், விருதுநகர்.
? தம் உயிரைப் பணயம் வைத்து கர்நாடகப் பிணைக் கைதிகளை வீரப்பனிடமிருந்து மீட்டிருக்கிறார் நக்கீரன் கோபால். இனியாவது கர்நாடக அரசு நெஞ்சில் ஈரத்துடன் காவிரி பிரச்னையில் நடுநிலை காட்டுமா...?
! ஒரு நல்ல காரியத்துக்கு இப்படி விலை பேசி அதைக் கொச்சைப்படுத்தாதீர்கள். இரண்டும் இருவேறு பிரச்னைகள்.

● பஞ்சவர்ணமகன், கருப்பம்புலம் ❑
? தாமோ ஏழை நாடு! நம்மை ஆள்பவர்கள் ஒரு நிமிடத்துக்கு ஏழாயிரம் ரூபாய் செலவழித்துத்தான் நம்மை ஆள வேண்டுமா....? இதைக் குறைக்க முடியாதா...?
! செலவைக் குறைக்க முடியாது. ஆனால் செலவின் மதிப்பை முழுமையாகப் பெறும் அளவுக்கு அந்த நேரத்தை அர்த்தமுள்ளதாக்கலாம். அதற்கு நாடாளுமன்றத்தின் தரம் மேலும் உயர வேண்டும்.


• எதிர்கால விலையென்ன...?


'குறி' தவறலாமா...?

● வே. ஈஸ்வரன், பரமக்குடி..
? கிரிமினல்கள் தேர்தலில் நிற்கத் தேர்தல் கமிஷன் தடை விதித்துள்ளதே?
! நல்லெண்ணத்தில் தான் சொன்னார்கள். ஆனால், அரசியல் சாசனத் திருத்தம் கொண்டு வந்தாலொழிய சாத்தியமில்லையாமே!

● ப. இராம் முருகன், சிவகங்கை.
? நான் அருள்வாக்கு சொன்னால் இந்தியாவையே வாங்கிவிடுவேன் என்கிறாரே பங்காரு அடிகளார்.... அதைப் பற்றி....?
! பங்காரு அடிகள்கூட வாங்குவதில்தானா இருக்க வேண்டும்? கொடுப்பதில் இருக்கக் கூடாதா!

● வே. முருகேசன், சென்னை-4
? மதச்சார்பின்மைக்காக காங்கிரஸ் எதையும் இழக்கத் தயார் என்று சீதாராம் கேசரி கூறியிருக்கிறாரே?
! காங்கிரஸின் உயிர்மூச்சான நேர்மை, உண்மை, மக்கள் நலன் என்பதையெல்லாம்தான் எப்போதோ இழந்து விட்டார்களே. இனியும் இழப்பதற்கு என்ன இருக்கிறது.

5



நான்

எம்.என். நம்பியார்

தியேட்டர்ல பின் வீட்ல கன்னையாவைப் பார்த்ததும். 'என்ன நம்பியார், காலையி லேயே வரேன்னியே'ன்னு அவர் கேட்டார். நான் நடந்த கூத்தையெல்லாம் அவர்கிட்ட சொன்னேன்.

'சரி... இதுவரைக்கும் என்னப்பா கதை?'ன்னு கன்னையா கேட்டார். அதாவது அமர ஜோதியில இன்டர்வல் வரைக்கும் என்ன நடந்ததுன்னு அவருக்குத் தெரிஞ்சுக்கணும். நான் பெரிய ஹிந்தி பண்டிட் பாருங்க, என்னைக் கேட்டார். நான் அதுவரையில நடந்தது, இனிமே நடக்கப் போறது எல்லாத்தையும் ஒரு மாதிரியா சொல்லி முடிச்சேன்.

சினிமா விட்டதும் கன்னையா வீட்டுக்குப் போனேன். அவங்க வீட்டிலதான் எல்லாரையும் எனக்குத் தெரியுமே, நல்ல அன்பான வரவேற்பு. பேரூர் கோவில், மருதமலை இங்கெல்லாம் என்னை அழைச்சிக்கிட்டுப் போய் சுத்திக் காமிச்சாங்க.

ரெண்டு மூணு நாள் அவங்க கூட இருந்துட்டு கம்பெனிக்குத் திரும்பி போய்ச் சேர்ந்தேன்.

பாலக்காட்டில இருந்து காலிகட் போனோம். அங்கே நாடகம் நடந்தபோது எங்க கம்பெனியில இருந்த ஹார்மோனிஸ்ட் வெளியூருக்குப் போயிட்டாரு. வெளியூர்ன்னா எங்க பாஷையில கம்பெனியை விட்டு ஓடிப் போயிட்டார்னு அர்த்தம். அவர் வேற யாருமில்ல. பின்னால பிரமாதமான மியூசிக் டைரக்டரா வந்த எஸ்.எம். சுப்பையா நாயுடுதான் அவரு.

பொதுவாவே நாடகத்துக்கு எங்க வாத்தியார் தம்பி பெரிய கோவிந்தண்ணன் பாதி வாசிப்பாரு. மீதி சுப்பையா நாயுடு.

அவரு போன பிறகு பூராவும் இவர் ஒருத்தரே வாசிக்கிறது சிரமமா இருக்கும்னு ஒரு அரைமணி நேரமாவது அவருக்கு ரெஸ்ட் குடுக்கலாமே அப்படீன்னு நினைச்சு யாரை வாசிக்கச் சொல்லலாம்னு பார்த்தாரு. கம்பெனியில அப்போ எனக்கும், கன்னையாவுக்கு மட்டும்தான் ஹார்மோனியம் வாசிக்கத் தெரியும். நான்தான் ஏற்கெனவே என் முதல் சினிமா சம்பளத்தில் பாதியை சங்கீதத்துக்காக தியாகம் பண்ணி, செகண்ட் ஹாண்ட் ஹார்மோனியம் வாங்கி வச்சிருந்தேன். அதையும் வாசிப்பேன். வேற யாராவது வச்சிட்டுப் போயிருந்தா அதையும் விடறதில்ல... அப்போல்லாம் கால்ல வாசிக்கிற ஹார்மோனியம்தான் மேடையில டிராமாவுக்கு. நான் அதையும் வாசிப்பேன்.

ஆனா என்னைவிட கன்னையா ஞானஸ்தன். ஆகவே அவரை வாசிக்கச் சொன்னார்.

பெரிய கோவிந்தண்ணன் மேல இருந்த பயமோ, இல்ல கால் ஹார்மோனியம் வாசிச்சு பழக்கமில்லாத காரணமோ தெரியலே, கன்னா பின்னான்னு வாசிச்சாரு கன்னையா.

'அடச் சீ போ... டேய் நம்பியார் நீ வாசிடா' அப்படீன்னார் கோவிந்தண்ணன்.

நான் பிரமாதமா வாசிச்சேன். என் சாபல்யம் நிறைவேறின சந்தோஷத்துல நான்

இருந்தேன்.

மறுநாள் நடாகத்துக்கு நாங்க தங்கியிருந்த வீட்ல இருந்து - ஷாஜஹான் தியேட்டர்னு நினைக்கிறேன். அதுக்குப் போறப்போ வாத்தி யாரு 'டேய் நம்பியார்.. எங்கூட வாடா'ன்னார். நடந்துதான் போனோம். அவர் என்னைத் தன் னோட 'வா'ன்னு கூப்பிட்டது என் வாழ்க்கை யில பெரிய திருப்பு முனையாகப் போவுதுன்னு அப்போ எனக்குத் தெரியல...

அப்போ இவர் என்னைக் கேட்டார்.

"ஏண்டா.. நம்ம கம்பெனியில யார்டா ஆர் மோனியம் வாசிக்கிறது?"

"என்னண்ணே... நம் கோவிந்தண்ணன் தான்... உங்க தம்பி..."

"எத்தினி வருஷமா வாசிக்கிறான்?"

"என்ன ஒரு அஞ்சு வருஷமா இருக்கும்."

"இல்லே பத்து வருஷமா வாசிக்கிறான். ஆனா இதுவரைக்கும் ஒருத்தன் கூட 'யார் உன் கம்பெனியில ஆர்மோனியம் வாசிக்கிறான்'னு என்னைக் கேட்டதில்லடா. உருப்படாத பயலே... ஆனா நேத்து டிராமாவில நீ போட் டியே சின்ன வேஷம் அதைப் பாத்துட்டு என் னோட சிநேகிதர் ஒருத்தர் 'யார் அந்தப் பையன்?

ஜெல்லென் அல்லெ!

நல்லா நடிக்கிறானே'ன்னு கேட்டாருடா. இதப்பாருடா... நீ ஆர் மோனியம்னு போனே ஒரு பய உன்னைச் சீண்ட மாட்டான். உன் வழி நடிப்புதாண்டா. ஆர்மோனியத்தைத் தொட்டே உன் கை காலை ஒடிச்சிடுவேன்!"

அப்புறம் என்ன பண்றது? கப்சிப்தான். ஆர்மோனியத்தைத் தொடவே இல்லே. மூடி வைக்க வேண்டியதா போச்சு.

"என்னடா இது நம்ம ஆசை நிறைவேறாம போச்சே"ன்னு வேதனைப் பட்டேன். ஆனா பல வருஷங்களுக்குப் பிறகு அது நிறை வேறியது. அதை அப்புறம் சொல்றேன்.

காலிகட்ல எங்களுக்கு நல்ல பேரு. எப் படின்னா டி.கே.எஸ். பிரதர்ஸ் எங்களுக்கு முன் னாடி அங்கே நாடகம் போட்டுட்டுப் போயிருந்தாங்க. அவங்களும் ராமாயணம் போட்டாங்க. நாங்களும் போட்டோம். ஜனங்க தீர்ப்பு என்ன தெரியுமா?

"ஷண்முகம் வாலைவிட ராஜமாணிக்கம் வால்தாம்பா பெரிசு. இதாம்பா நல்ல நாடகம்!"

அதாவது டி.கே. ஷண்முகம் அண்ணன், அனுமன் வேஷம் போட்டார். எங்க வாத்தி யாரும் போட்டார். இதுதான் பெட்டர்னு தீர்ப்பு.

ஆனா சும்மா சொல்லக் கூடாது, அந்தந்த டைமுக்குத் தகுந்த மாதிரி மெட்டுப் போட்டு பாட்டுப்பாடி எங்க கம்பெனி ராமாயணத்தை ரொம்ப நல்லா நடத்தினது உண்மை.

எர்ணாகுளம் போனோம். அங்க ஏகநாதர் டிராமால்லாம் போட்டோம். எதிர்பார்த்த வர வேற்பு கிடைக்கலே.

1937 ல் ஊட்டிக்குப் போனோம். அதில எனக்கு ரொம்ப சந்தோஷம். ஏன்னா ஊட்டி யிலதானே நான் கம்பெனியில் சேர்ந்தேன்.

அதுக்குள்ள நான் ஒரு நடிகனா ஆயிட் டேன். ஊட்டியில கம்பெனி இருந்தப்ப எத்தி ராஜ் அண்ணனும், சம்பங்கி அண்ணனும் கம் பெனியை விட்டு ஓடிட்டாங்க. அதனால எத்தி ராஜ் அண்ணன் வேஷமெல்லாம் எனக்குக் கிடைச்சது.

எங்க வாத்தியாரோட திறமையைப் பத்தி நான் முழுசா தெரிஞ்சிக் கிற வாய்ப்பு எனக்கு அங்கே கிடைச்சது.

சம்பங்கி அண்ணன் 'பிரபல சந்திரா' என்ற நாடகத்தில ஒரு அருமையான வேஷம் போடு வாரு. அற்புதமா பண்ணுவாரு.

அவரு ஓடிப் போன பிறகு யார் அந்த வேஷம் போடுவாங்கன்னு சஸ்பென்ஸ். கடைசி யில வாத்தியாரே போட்டாரு. நாங்க மனசுக் குள்ளற சிரிச்சிக்கிட்டோம். ஏன்னா இவரு பொதுவா கம்ஸன், ராவணன், இரண்யன் இப் படிப் போட்டாத்தானே நல்லா இருக்கும். சோஷியல்ல எப்படி இவரால பரிமளிக்க முடி யும்னு எங்களுக்குள்ளே ஒரு சந்தேகம்.

ஆன அவரு நடிச்சதைப் பார்த்தப்போ நம்பவே முடியல. சம்பங்கி அண்ணன் நடிப் பைப் பார்த்து 'இப்படியில்ல நடிக்கணும்'னு நினைச்சிருந்த எங்களுக்கு வாத்தியார் அந்த வேஷத்தைப் போட்டு நடிச்சதைப் பார்த்தப் புறம் அந்த வேஷத்தில இவ்வளவு நடிப்பு பாக்கியிருக்கான்னு நான் நினைக்க ஆச் சரியப்பட்டேன்.

'ரத்தக் கண்ணீர்' படத்திலயும், அதுக்கு அப் புறம் பல படங்களிலேயும் நான் பார்த்து ரசிச்ச எம்.ஆர். ராதாவை அதுக்கு நாற்பது வருஷங் களுக்கு முன்னாடியே எங்க வாத்தியார் ராஜ

மாணிக்கம் ரூபத்தில் நான் பார்த்து ரசிச்சேன்.

நிறைய வாத்தியாருங்க இருந்தாங்கதான் காளி என். ரத்னம், பொன்னுசாமி பிள்ளை, சம்பந்தம் அண்ணன், எம்.கே. ராதாவோட அப்பா கந்தசாமி பிள்ளை இப்படி ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு துறையில கெட்டிக்காரங்க. ஆனா எங்க வாத்தியாரோ எல்லாத்திலேயும் கெட்டி. ஒரு ஸீன் சரியா செட்அப் ஆகிற வரைக்கும். அவர் அதுக்கான வசனம் எல்லாம் பார்க்க மாட்டார். எல்லா வகையிலும் புகுந்து புகுந்து பார்த்து நாடகத்தைப் பரிமளிக்கச் செய்யறதில ராஜமாணிக்கம் ஒரு சூரர்.

அவர் மட்டும் சுயநலக்காரரா இருந்திருந்தா, ஜெமினியில நடிப்பு சொல்லித்தர அவரைப் பலதடவை கூப்பிட்டப்போ போய் கைநிறைய சம்பாதிச்சி சந்தோஷமா இருந்திருக்கலாம். ஆனா அவர் அங்கல்லாம் போகாம, கிட்டத்தட்ட நூறு குடும்பங்களை காப்பாத்தற நாடகக் கம்பெனியோடவே தன் ஆயுசை இணைச்சிருந்தார். இதைவிடப்பெரிய தியாகம் என்ன இருக்க முடியும்?

மொதல்ல தர்மபுரி போனப்போ நடந்த ஒரு சம்பவத்தை இங்கே சொல்லணும்.

அங்கே 'கிருஷ்ணலீலா' போட்டோம். நாடகம் முடிஞ்சுது. அந்த ஊர்ல ஒரு பெரிய என்ஜினீயர். கிறிஸ்டியன். இன்னொருத்தர் டாக்டர். ரெண்டு பேருமே பெரிய மனுஷங்க. அவங்க உள்ளே வந்து 'ஸ்டேஜைச் சுத்திப் பாக்கணும்'னு ஆசைப்பட்டாங்க.

அழைச்சிக்கிட்டுப் போனோம்.

"ஷூவைக் கழட்டி வெச்சிட்டு வாங்க"ன்னு சொன்னோம்.

"நீங்க மட்டும் போட்டிருக்கீங்களே!"

"இது ஸ்டேஜுக்கு மட்டும் போட்டுக்கற ஷூ. நீங்க கழட்டி வெச்சிட்டுத்தான் ஸ்டேஜ் மேல வரணும்."

அப்படியே வந்தாங்க.

அந்த என்ஜினீயர் ரொம்ப ஆர்வமா மேடையில ஒரு இடம் பாக்கியில்லாம மூலை முடுக்கெல்லாம் கண்ல விளக்கெண்ணெய் விட்டுப் பாக்கறா மாதிரி பார்த்தார். மேல பார்த்தார். கீழே பார்த்தார் எங்களுக்கு ஒண்ணும் புரியல்ல.

"இல்லே.. இங்க தர்மபுரியில எங்களுக்குப் பயங்கர தண்ணி பஞ்சம் இருக்குது. நீங்க என்னடான்னா ஸ்டேஜ் பூரா தண்ணிவிட்டு அந்த 'காளிங்கநர்த்தனம்' சீன் பண்ணியதைப் பார்த்தேன். உங்களுக்கு மட்டும் எங்கிருந்து தண்ணி கிடைக்குதுன்னு ஒரு என்ஜினீயர்ங்கற முறையில நான் தெரிஞ்சிக்க ஆசைப்படறேன். உண்மையைச் சொல்லுங்க."

இதுதான் அந்த என்ஜினீயருடைய ஆசை.

உண்மையிலேயே அந்த ஸீன் எல்லாரையும் அசத்திரும். ஸ்டேஜுக்குக் கீழே தண்ணி தெரியும். அதுல மீன் நீந்தும். அந்த மீனுக்கு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் கண்ணுக்குத் தெரியாத கயிறுகட்டி அதை லாகவமா இழுக்கணும். அதுக்கு ரெண்டு பேர் தயாரா இருப்பாங்க. அதே போல காளிங்கன் கழுத்துக்கு, இடுப்புக்கு, வாலுக்கு அப்படீன்னு அங்கங்கே ஆளுங்க இருந்து கயிறு கட்டி நேக்கா இழுக்கறப்போ பாக்கறதுக்குத் தத்ரூபமா இருக்கும். இதுக்குள்ளே முப்பது முப்பத்தஞ்சு பேர் வேலை பாப்பாங்க.

இதில என்ன வேடிக்கைன்னா, அப்ப ஸ்டேஜுக்கு முன்னாடி லைட் கிரீன்கலர்ல ஒரு படுதா கட்டியிருப்பாங்க. அது கட்டியிருக்கிறதே தெரியாது. அவ்வளவு நைஸ் படுதா. அதை ரெண்டு பக்கமும் இருந்து இரண்டு சின்னப் பசங்க பக்குவமா அப்படியும் இப்படியும் லேசா அசைப்பாங்க. உட்கார்ந்து பாக்கிறவங்களுக்கு ஏதோ ஸ்டேஜ்பூரா தண்ணி கொட்டி அப்படியே மிதக்கிற மாதிரி தெரியும். அந்த என்ஜினீயரும் அப்படித்தான் ஏமாந்து போனாரு.

அப்பவே மேடையில எங்க கம்பெனி செஞ்சி காமிச்ச நிறைய டெக்னிகல் ஐடியாக்களுக்கு இது ஒரு சின்ன சாம்பிள். இதப் போல இன்னும் எவ்வளவோ.

(தொடரும்)



அமெரிக்காவிலும் தான்....!

சிந்து சமவெளி நாகரிக காலத்திற்கு அடுத்ததாக இந்த ஆண்டு தான் பூமிக்கு அருகே வந்து புகழ் பெற்றது ஹேல்-பாப் வால் நட்சத்திரம்! இதனை 1995-ல் கண்டு பிடித்த இரு விஞ்ஞானிகளுள் ஒருவரான அலன் ஹேல் அமெரிக்காவில் நல்ல வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்! இதனால் வீட்டு வாடகை கொடுப்பதற்கே சிரமப்படுவதாக இன்டர்நெட் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்!

— பூங்கோதை கிருஷ்ணராஜ்

என்றும் இளமையாய் இருப்பது எப்படி?

இளமைக்குக் காரணம் மனசு



“உடலுக்கும் மனசுக்கும் நிறையத் தொடர்பு உண்டு. மனசு அமைதியாக இருக்கும்போதுதான் உடலும், உடலின் உறுப்புக்களும் அமைதியாக இருக்கும்!” என்கிறார் மனநல மருத்துவர் டாக்டர் எஸ். நம்பி.”

“முக்கியமாக முகத்துக்கும் மனசுக்கும் ஸ்ட்ராங் ரிலேஷன்ஷிப் உண்டு. மனசு வெம்பி வேதனைப்படும்போது, அது முகத்தில் நிச்சயம் தெரிந்து விடும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சுருக்கமாய்ச் சொன்னது இந்தக் கருத்தில்தான்!” என்று கூறும் டாக்டர் “இளமைக்குக் காரணம் வயதல்ல. எண்ணங்கள்தான்” என்றும் அடித்துச் சொல்கிறார்.

“எண்ணங்களின் பிறப்பிடம் மனசு. எனவே மனசு எத்தனைக் கெத்தனை இளமையாகவும், உற்சாகமாகவும், இருக்கிறதோ அத்தனைக்கத்தனை தோற்றத்திலும் அது வெளிப்படும். எனக்குத் தெரிந்த ஒருவருக்கு வயது எண்பதைத் தாண்டிவிட்டது. ஆனால் பார்த்தால் தெரியாது. அவரைச் சுற்றி எப்போதும் இளைஞர்கள் இருப்பார்கள். கிண்டலடித்துப் பேசுவார்கள். இவரும் அவருக்குச் சரிசமமாக உரையாடுவார். அவர் இருக்கும் இடமே உற்சாகத்தின் உச்சத்தை வெளிப்படுத்துகிற மாதிரி இருக்கும். மனசை இளமைத் துடிப்புடன் வைத்துக் கொண்டால், மகிழ்ச்சியாக இருக்க முடியும். மகிழ்ச்சியுடன் இருக்கும்போது இளமையும் தோற்றத்திலேயே தெரியும்” என்கிறார் டாக்டர் நம்பி.

“அதற்கென்று ஒரேயடியாக உற்சாக வெள்ளத்தில் மூழ்கி, சந்தோஷத்தின் உச்சத்தில் மிதக்க வேண்டும் என்றில்லை. அதுவும் கூட அளவோடு இருக்க வேண்டும். கூடவும் இருக்கலாகாது. குறைவாகவும் இருக்கலாகாது. சந்தோஷத்தை அப்படியே வெளிப்படுத்துங்கள். வருத்தத்தையும் மனசுக்குள்ளேயே போட்டுப் புதைத்து வைத்துக் கொண்டு, குமுறிக் கொண்டிருக்காதீர்கள் அப்புறம் ஸைக்கோ ஸோமேடிக் நோய்கள் ஒவ்வொன்றாக வந்து உடலை வதைக்கும். அப்புறம் இளமையாவது! தோற்றமாவது!”

“பயம், துக்கம், கோபம் போன்ற எதிர்மறை எண்ணங்கள் மனசில் இருந்தால், இவை இளமையைப் போக்கடித்து விடும். இவற்றைத் தவிர்ப்பவன் முகத்தில்தான் புன்னகை தெரியும். இளமை வெளிப்படும்.

“ஸ்ட்ரெஸ் எனப்படும் மன அழுத்தம் இல்லாத மனிதர் இருக்க முடியாது. அதற்கு ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி ரீயாக்ட் பண்ணுகிறோம். ஸ்ட்ரெஸ்ஸை வெற்றி கொண்டால், மனச் சோர்வும் இல்லை; உடல் சோர்வும் இல்லை.

“எதிர்பார்ப்பு உணர்வு- ஆன்ட்டிசிபேஷன்- இருந்தால், பிரச்னைகளைத் தவிர்த்து ஒதுங்கிவிடும் சுபாவம் உங்களுக்குள் உருவாகிவிடும். ‘எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை அதிர வருவதோர் நோய்’ என்று திருக்குறளில் வருகிறது. அதைத்தான் சொல்லுகிறது குறள்.

முக்கியமாக மனதில் நம்பிக்கை வேண்டும். Trust in everything. மாறுபட்ட சிந்தனைகள் கூடாது. என்னால் முடியும் என்ற மன உற்சாகம் இருக்கையில்தான், செயலில் வெற்றி காண முடியும். ஜே.ஆர்.டி. டாட்டா, எண்பது வயதுக்கு அப்புறமும் தனியே விமானத்தை ஓட்டி வந்து சாதனை புரிந்தார். வயதானாலும் இளமையாய் இருந்தார்.

“பழையதையே நினைத்துக் கொண்டிருப்பது சோர்வைத்தான் தரும். நம்பிக்கையைத் தராது. பழையதைக் கொஞ்சமாக நினையுங்கள். பத்து சதவீத நினைப்பாக அது

இளமைப் போட்டி — 5

மனோதத்துவ மருத்துவத்தின் பிதாமகராக ஒருவரைக் குறிப்பிடு வார்கள். அவர் யார்? கண்டுபிடித்து வைத்துக் கொள்ளுங்கள். போட்டி யின் இறுதியில் அனுப்ப உதவும்!

இருக்கட்டும். நிகழ்காலத்தைப் பற்றி முப்பது சதவீதம் நினையுங்கள். வருங்காலத்தைப் பற்றி அறுபது சதவீதம் நினையுங்கள். காரில் ரியர் வியூ மிர்ரர் சிறியதுதான். ஆனால் எதிரே வரப்போகிற சாலையைப் பார்க்கப் பெரிய விண்ட் ஷீல்ட் கண்ணாடி! ரியர் வியூ மிர்ரர் இல்லாமல், பின்னால் இருப்பதைப் பாராமல், காரை ஓட்ட முடியாதுதான். ஆனால் அதையே பார்த்துக் கொண்டு காரை ஓட்ட முடியுமா? மனசு பழையதையே நினைத்துக் கொண்டிருக்கையில், தோற்றம் இளமையாக இருக்க ஏது வாய்ப்பு?" என்கிறார் நம்பி.

என்றும் இளமையாக இருக்க சில டிப்ஸ்:

- முகத்தை எப்போதும் மலர்ச்சியாக வைத்திருங்கள்
- துன்ப- துயர நிகழ்ச்சிகளை மனத்திலிருந்து அகற்றுங்கள்.
- டென்ஷனாக இருக்கிற வேளைகளிலும் அமைதி காக்கப் பழகுங்கள்.
- சினம் இளமையைப் போக்கும்; முகத்தைச் சுருங்க வைக்கும். சினத்தைத் தவிருங்கள்.
- 'ஸ்ட்ரெஸ்'ஸை அழுத்துக் கொள்ளாமல், பாஸிடிவ்வாக எடுத்துக் கொள்ளுங்கள். உற்சாகம் ஊற்றெடுக்கும்; மிடுக்கான தோற்றம் வரும்.
- நல்லதையே கேளுங்கள்; நல்லதையே பாருங்கள்; நல்லதையே படியுங்கள்; நல்லதையே பேசுங்கள்; கூடவே, நல்லதையே நினையுங்கள்!

— எஸ்.வி.என்.



''இந்த ஆபரேஷன்ல ரிஸ்க் எதுவும் இல்லையே டாக்டர்?''

''அதான் உங்ககிட்ட கையெழுத்து வாங்கிக்கிட்டோமே... எங்களுக்கு என்ன ரிஸ்க்!

- சீர்காழி வி. ரேவதி

''உங்க காரைத் திருடியவனுக்கு நிச்சயமா நாலுபேர் உதவியிருக் கணும்னு சொல்றீங்களே எப்படி....''

''நாலு பேர் தள்ளினாத்தான் என் கார் 'ஸ்டார்ட்'டே ஆகும்... அதான்!''

— புதுக்கோட்டை சிற்பிசோமு





''ஆபீஸ் நேரத்தில வேலை இல்லாம சும்மா உட்கார எனக்குப் பிடிக்காது!''

''என்ன செய்வே?''

''அரட்டை அடிப்பேன்!'

— பர்வதவர்த்தினி

"டெலிவிஷன் செய்தி வாசிக்க எனக்குப் பிடிக்கவில்லை!"



சில்லையூர் செல்வராசனின் கவிதைகள் கமலினிக்கு ரொம்பவும் பிடித்தன. கூடவே கவிஞரையும்.

"அப்போது அவருக்கு ஏற்கெனவே திருமணமாகி இருந்தது. எங்களின் ஆர்வமும், கலைத் துறை ஈடுபாடும் ஒத்துப் போனதால் முதல் மனைவியை முறைப்படி விவாகரத்து செய்து, பின்னர் என்னைத் திருமணம் செய்து கொண்டார்!"

கமலினிக்கு அவரது கணவர் கொடுத்த ஊக்கம் அளவில்லாதது.

"அவர் கத்தோலிக்க கிறிஸ்துவர். நான் ஹிந்து. என்னை மதம் மாறக் கூடச் சொல்லவில்லை அவர்!"

- இலங்கையின் இலக்கியவாதிகளை, கவிஞர்களை, எழுத்தாளர்களைத் தெரிந்திருப்பவர்களுக்கு சில்லையூர் செல்வராசன் என்ற பெயர் பிரபலம்.

கமலினியின் குடும்பமும் இலக்கியக் குடும்பம்.

தென்புலோலியூர் மு. கணபதி பிள்ளையின் மகள். இலக்கிய ஆர்வம் தானாக வந்தது.

பள்ளியில் மேடைப் பேச்சு, பின்னர் அகில இலங்கை கட்டுரைப் போட்டியில் வென்று தேசாதிபதி (ஜனாதிபதி) கையால் பரிசு என்று விளையும் பயிர் முளையிலேயே தெரிந்தது.

கலை இலக்கிய ஆர்வத்துக்கு இடையே வருமானத்துக்கென்று விளம்பரத் துறையில் இருந்து வந்தார் சில்லையூர்.

பொருட்களையும், நிறுவனங்களையும் புதுமையாக விளம்பரப்படுத்துவதில் கணவருக்குத் துணையாக நின்ற கமலினியின் பங்கு மகத்தானது.

ஆயுள் இன்ஷூரன்ஸ் பற்றிச் செய்த விளம்பரத்தில் 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி.. நீங்களும் சீதக்காதி ஆகுங்கள்' என்று செல்வராசன் எழுதிக் குரல் கொடுத்த வாசகங்கள் பெரும் பாராட்டைப் பெற்றன.

கணவனும் மனைவியும் சேர்ந்து 'கோமாளிகள்' என்ற இலங்கையில் எடுக்கப்பட்ட தமிழ்ப் படத்தில் கதாநாயகன் - கதாநாயகியாக நடித்திருக்கிறார்கள்.

மூன்று மாத காலம் இலங்கை தொலைக்

காட்சியான ரூபவாஹினியில் செய்தி வாசிப் பாளராகவும் கமலினி பணியாற்றியதுண்டு. பிறகு அது பிடிக்காததால் விட்டு விட்டார்.

"ஏன் பிடிக்கவில்லை?"

"அவர்கள் எழுதித் தரும் செய்திகளில் பாதி பொய் என்று எனக்குத் தெரியும். அதை என் வாயால் படிக்கப் பிடிக்கவில்லை!"

மனத்தில் பட்டதை வெளியில் பட்டென்று சொல்வதிலும் துணிச்சலாக முன் நிற்பதிலும் கமலினி பெயர் போனவர்.

இலங்கை டீ.வியில் 'ஆயுபோவன்' என்று ஒரு பல்சுவை நிகழ்ச்சியை, இப்போது மாதம் ஒரு முறை மூன்று மணி நேரங்களுக்கு நேரடி ஒளி பரப்பாகச் செய்து வருகிறார் கமலினி. தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று மொழி களைச் சேர்ந்தவர்களும் பங்கு பெற்று, அந்தந்த கால கட்ட முக்கிய நிகழ்ச்சிகளை அசை போட்டு அலசுகின்ற நிகழ்ச்சி. கமலினி மூன்று மொழி களிலும் வல்லவர்.

> ● பெண்களைச் சமாளிக்க ஒரு சிறந்த வழி இருக்கிறது; ஆனால் அந்த வழி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை!
> தகவல்: எஸ். சரவணன்

ஆயுபோவன் லைவ் நிகழ்ச்சி என்பதால் ரொம்பக் கவனமாக இருக்க வேண்டும். இருந் தும் துணிச்சலாக எதையாவது சொல்லிவிடு வது கமலினிக்கு கைவந்த கலை. இலங்கையின் முன்னாள் அதிபர் ஒருவர் எங்கே போனாலும் மனைவியை அழைத்துக் கொண்டே போவார். பொது நிகழ்ச்சியானாலும் அவர்களைச் சேர்த்தே பார்க்கலாம். 'ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்' திரைப்பாடலை ஒளிபரப்பு முன்பாக கமலினி சொன்னார்: "ஒரு நாட்டின் தலைவனின் பார்வை குடிமக்கள் மீதுதான் எப் போதும் இருக்க வேண்டும். ராணியின் பக்கமே ராஜாவின் பார்வை இருந்தால் நாடு எப்படி இருக்கும்?"

நேயர்கள் ரசித்தார்கள். ஆனால் மறுநாள் கமலினிக்கு அரசாங்கம், 'அழைப்பு' அனுப்பி விசாரித்தது. 'ஆமாம் அப்படித்தான் சொன் னேன்' என்று உறுதிப்படுத்தினார் கமலினி.

"இப்போதைய அதிபர் சந்திரிகாவுக்கு நேரம் தவறாமைக்கும் ரொம்ப தூரம். எந்த விழாவானாலும் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரமாவது தாமதமாகத்தான் வரு வார். சமீபத்தில் இலங்கைப் பத்திரிகைகளில் நேபாள மன்னருடன் சந்திரிகா கை குலுக்கு வது போல புகைப்படம் பிரசுரமாகி இருந்தது.

ஒரு பத்திரிகை அந்தப் படத்தின் கீழே கிண்டலாக எழுதியிருந்தது. 'ஐ ஆம் ஸாரி. ஐ ஆம் லேட்' என்று சந்திரிகா சொல்வதாகவும், 'ஐ நோ இட். அதனால்தான் இன்றைக்கு நான் வேறு எந்த அப்பாயிண்ட்மெண்ட்டும் தர வில்லை!' என்று நேபாள மன்னர் சொல்வ தாகவும் கிண்டல்!

"சந்திரிகா கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சி யின் தொகுப்பாளராக நான் போயிருந்தேன். வழக்கம் போல தாமதமாகவே வந்தார். மறு நாள் 'ஆயுபோவன்' நிகழ்ச்சியில் சந்திரிகாவின் லேட்-கம்மிங்கை சாடினேன். மறுநாள் மீண்டும் அழைப்பு. விசாரணை. 'நான் நேரில் பார்த்ததைத்தானே சொன்னேன்' என்றேன். விட்டு விட்டார்கள்!"

சென்ற வருடம் தில்லையூர் செல்வ ராசன் திடீரென இறந்து போனார்.

"பதின்மூன்றாவது நாளே நான் டீ.வி. நிகழ்ச்சி செய்யப் போய்விட்டேன். எனக்கு ரேணுகா பாலசூர்ய என்று ஒரு நெருங்கிய சிங் களத் தோழி இருக்கிறாள். டீ.வி. நிகழ்ச்சியில் அவளும் பங்கேற்பாள். என்னை அவ்வளவு சீக்கிரம் டீ.வி. நிலையத்தில் பார்த்த சிலர் அவ ளிடம், "என்ன உன் ஃப்ரண்ட் இரண்டு வாரத் தில் வந்துட்டா. பொட்டு வச்சிருக்கா?" என்று கமெண்ட் அடிக்க, ரேணுகா சொன்னாள் : "தில்லையூர் செத்த போது உங்களில் எத்தனை பேர் அவளிடம் போய் ஆறுதல் சொன்னீர்கள்? அடுத்த வேளை சாப்பாட்டுக்கு இருக்கிறதா என்று எத்தனை பேர் அக்கறைப்பட்டீர்கள்? அதைச் செய்யாத உங்களுக்கு, அவள் வேலைக்கு வருவதைப் பற்றிப் பேச அருகதை இல்லை!" - 'இப்படிச் சொன்னேன் கமலினி' என்று ரேணுகா என்னிடம் தெரிவித்த போது, தாங்க்ஸ்.. என்னிடம் நேராக அப்படி கமெண்ட் அடித்திருந்தால் என் பதிலும் அப்படித்தான் இருந்திருக்கும்" என்றேன்.

"கணவர் போன சோகம் என்னுள் நிரந் தரம். அதற்காக பூ எடுத்து, பொட்டு விலக்கி வாழ எனக்குச் சம்மதம் இல்லை. நான் உடைந்து விடக்கூடாது. அதுதான் இப்போது எனக்கு முக்கியம்!" என்றார் சென்னை வந் திருந்த கமலினி.

இலங்கையில், சிறுவர் பாலியல் வன்முறை எதிர்ப்பு, எய்ட்ஸ் விழிப்புணர்வு போன்றவற்றி லும் தீவிரமாக தம்மை ஈடுபடுத்திக் கொண் டிருக்கிறார் கமலினி.

தம் கணவரின் முதல் மனைவியின் மகளுக்கு நடைபெற்ற திருமணத்தில் கலந்து கொள்ள பெங்களூருக்கு தமது மகன் அதிசயனுடன் வந் திருந்தார்! அதற்காகவே இந்தியப் பயணம்!

சந்திப்பு : **ராணிமைந்தன்**

பொங்கல் பானை உற்சாகம்

'வாழ நினைத்தால் வாழலாம்' என்பது வெறும் எதுகை மோனைக்காக அமைத்த பாடல் வரி அல்ல... வாழ்க்கையின் உண்மை அது என்பதைக் காட்டுகிறது இக்கதை....

எஸ்.ஐ.ஆர்.

மாதவன்! அவன் பெயரைச் சொன்னாலே எல்லோருக்கும் அந்த மாறாத புன்னகையும் பொங்கல் பானை போன்ற அவன் உற்சாகமும்தான் ஞாபகம் வரும்.

"சௌக்கியமா?" என்று சம்பிரதாய கேள்வி கேட்டால் 'ஏதோ இருக்கேன்...' என்று முனக மாட்டான். "அட்டகாசமாயிருக்கேன்!" இதுதான் அவன் துடிப்பான பதில்.

உணவகம் ஒன்றில் மானேஜர் வேலை. அவனைச் சுற்றிலும் 'பேரர்கள்' பட்டாளம் ஒன்று மொய்த்துக் கொண்டேயிருக்கும்.

"சர்! சர்! யெஸ் சர்! உடனே பண்றேன்... செஞ்சு முடிச்சுடலாம்" என்று நம்ப முடியாத ஒத்துழைப்பை அவர்களிடமிருந்து பெற்றான் மாதவன்.

பணி மாறி வேறு ஹோட்டல்களுக்கு அவன் போனபோது, விசுவாசமான நாய்க் குட்டிகளைப் போல் அவனைப் பின் தொடர்ந்து அந்தப் பட்டாளமும் போனது.

"இவ்வளவு 'பாஸிடிவ்'வா எப்படிடா இருக்க முடியுது? எங்களுக்கெல்லாம் ஏதோ வருஷத்துல இரண்டு மூணு நாள் வாய்க்கற மூட் உனக்கு மட்டும் எப்படி நிரந்தரமா அமைஞ்சிருக்கு?" நண்பர்கள் மாதவனைக் கேட்பதுண்டு.

"காலைல எழுந்திருக்கும்போது என்னை நானே கேள்வி கேட்டுப்பேன்.." என்பான் மாதவன். 'டேய் மாதவா! இன்னிக்கு நல்ல மூடா சொத்தை மூடா? வசதி எப்படி...' அப்படின்னு கேட்டுக்கிட்டா நல்ல மூடைத்தானே தேர்ந்தெடுத்தாகணும்.. எல்லாமே நாம தேர்ந்தெடுக்கறதுதான் நண்பனே! நமக்கே ஏதாவது கெடுதல் நடந்துடுச்சுன்னா கூட நம்ம தேர்வு திறமையினால அதை நல்லதா மாத்திடலாம்..."

"என்னடா உளர்றே? நிறைய சுயமுன்னேற்ற புத்தகம் படிச்சதன் விளைவா?"

"இதுக்கு எந்த புஸ்தகமும் படிக்க வேண்டாம்பா... நமக்கு நடந்த கெடுதலை நினைச்சு வேதனைப்படலாம், புலம்பலாம். இல்லைன்னா அதிலேருந்து பாடம் கத்துக்கலாம். அதே மாதிரி நம்ம கிட்டே யாராவது புலம்பினாங்கன்னா ஐயோ பாவம்னு பச்சாதாபப்படலாம்; இல்லைன்னா 'வாழ்க்கைல பாஸிடிவான விஷயங்களைப் பாருப்பான்னு' அவங்களை திசை திருப்பி விடலாம்.. தேர்ந்தெடுத்து சரியாகச் செயல்படறது நம்ம கையிலதானேயிருக்கு!..."

மாதவன் மேல்பூச்சுக்காகப் பேசவில்லை என்று தெரிந்தாலும் எனக்குக் கொஞ்சம் அவநம்பிக்கைதான். 'ஏதோ பேசிவிட்டுப் போகிறான்' என்று அலட்சியப்படுத்தி விட்டேன், அந்தச் சம்பவம் நடக்கும்வரை!

என்ன சம்பவம்?

யாரும் செய்யக்கூடாத தப்பை மாதவன் ஒரு முறை செய்தான். ஹோட்டல் பின்புற கதவைப் பூட்ட மறந்து போனான். அன்றைய இரவைத் தான் திருடர்கள் 'தேர்வு' செய்தார்கள். கணிசமான 'கலெக்ஷன்' களவாடப்பட்டது மட்டுமின்றி, கை கலப்பில் மாதவனைச் சுட்டும் போட்டு விட்டார்கள்!

ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு ஓடினோம். பதினெட்டு மணி நேரம் ஆபரேஷன் நடந்தது. அப்படியும் துப்பாக்கித் தோட்டாக்களை முழுமையாக வெளியேற்ற முடியவில்லை. மாதவன் டிஸ்சார்ஜ் ஆகி வந்த போது அவற்றின் சொச்ச மிச்சங்களை அவன் உடல் சுமந்து கொண்டுதான் இருந்தது!

இவ்வளவு நடந்த பிறகு ஆள் சற்று ஆட்டம் கண்டிருப்பான் என்றே நினைத்தேன். இத்தனை பேசியவன் கொல்லைக் கதவை அலட்சியமாய்த் திறந்து வைத்ததற்காகத் தன்னைத் தானே நொந்து கொள்ளாமல் இருக்க முடியுமா!



ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கிக் கொண்டு அவனைப் பார்க்கப் போனபோது என் எதிர்பார்ப்பை பொய்யாக்கினான்!

''எப்படிடாயிருக்கே மாதவா?''

''அட்டகாசமாயிருக்கேன்!'' என்று அவன் என் தோளில் தட்டியபோது அழுகையே வந்து விட்டது எனக்கு!

''பதினோரு இடத்துல தையல் போட்டிருக்காங்க, பார்க்கறியா?'' சட்டைப் பொத்தான்களைக் கழற்றவிருந்தவனைத் தடுத்தேன்.

''எப்படிடா? எப்படி முடியுது உன்னால, திருட்டு நடந்தப்ப கூட இதே மாதிரி உற்சாகமாயிருந்தியா?''

மாதவன் பெரிதாகச் சிரித்தான்.

''சிரிக்காதேடா! உனக்கு பயமாயில்லையா? மயக்கமாகிற நிலையில உன் மனசு என்ன பாடுபட்டிருக்கும்?''

''அதெல்லாம் இல்லை...'' என்றான் மாதவன். ''சே! பின் கதவை மூடாமல் போனது முட்டாள்தனம் என்கிற எண்ணம் வரத்தான்

காணாமல் போன கோலம்!



(கல்கி 3.8.97 விக்ரமாதித்யன் கவிதைக்கு எதிர்க் கவிதை!)

கால மாற்றத்தில்
கோலம்
காணாமல் போய் விட்டது.

காரணம்
அடுக்கு மாடி வீடுகளோ
குறுகிய வாசலோ இல்லை
இறுகிய மனமே.

ஆசைகளுக்கு இன்று
உச்ச வரம்பு இல்லை
அதைத் தூண்ட விளம்பரங்களுக்கு
பஞ்சமும் இல்லை.

யார் சொன்னது
யானை இல்லையென்று
துண்டு விழும் பட்ஜெட்டே சாட்சி
வெள்ளை யானை உண்டென்று

பெற்ற பிள்ளைகள்
காப்பகத்திலே, – தன்னைப்
பெற்றவர்களோ
முதியோர் இல்லத்திலே!

மனிதனை விரட்டும்
இயந்திர உலகம்,
காலத்தை விரட்டும்
மனிதனின் வேகம்.

காபி போடுவது
நீயா நானா?
காலையில் சர்ச்சை
இந்த அவசரத்தில்
யார்தான்
கோலம் போடுவது.

— வி. பத்மநாபன்

வந்தது. ஆனா திருடங்க என்னைச் சுட்டுப் போட்டுட்டு வெளியேறின பிறகு எனக்கு இரண்டு விதமான தேர்வு இருக்கறதைப் புரிஞ்சுக்கிட்டேன். ஒண்ணுல நான் மரணத்தைத் தேர்ந்தெடுக்கணும், இல்லைன்னா தொடர்ந்து உயிர் வாழறதைத் தேர்ந்தெடுக்கணும்...''

அவன் இளைத்துப்போன முகத்தை நம்ப முடியாமல் பார்த்தேன்.

''என்னடா அப்படிப் பார்க்கறே...! ஆஸ்பத்திரியில டாக்டர்களும் நர்ஸுகளும் என்ன வேலை செஞ்சாங்க தெரியுமா? 'உனக்கு ஒண்ணுமே இல்லை; சரியாயிடுவே' அப்படின்னு உற்சாகப்படுத்திக்கிட்டே எமர்ஜென்ஸி வார்டுக்கு என்னை வீல் சேர்ல தள்ளிக்கிட்டுப் போனாங்க. ஆனா அவங்க முகத்தைப் பார்த்தா பேயறைஞ்ச மாதிரியிருந்தது. என்னை 'பூட்ட கேஸு'ன்னு அவங்க முடிவு பண்ணிட்டது புரிஞ்சது... சரி! நம்ம ஃபார்முலாவை அவிழ்த்து விடலைன்னா கதை கந்தலாயிடும்னு புரிஞ்சுக்கிட்டேன்... நல்ல வாட்ட சாட்டமா ஒரு சிஸ்டர் இருந்தாங்க. அவங்க பேரு பொருத்தத்தைப் பாரு... சிஸ்டர் ஆசீர்வாதம்! அந்த சிஸ்டர் என்னைக் கேட்டாங்க... 'ஏன் தம்பி உனக்கு ஏதானும் அலர்ஜி உண்டா....?' சாதாரணமா ட்ரீட்மெண்ட் தொடங்கறதுக்கு முந்தி மாமூலா கேக்கற கேள்விதான்.''

''என்னடா பதில் சொன்னே மாதவா?''

''உண்டு சிஸ்டர்! ஒரே ஒரு விஷயம் அலர்ஜி!'' அப்படின்னேன் 'அது என்ன விஷயம்?'னு கேட்டாங்க. மூச்சை இழுத்துப் பிடிச்சுக்கிட்டு பலமா கத்தினேன்: 'துப்பாக்கி தோட்டாக்கள்! துப்பாக்கி தோட்டாதான் எனக்கு ரொம்ப அலர்ஜி!'

''ஆபரேஷன் தியேட்டரே கொல்லுனு சிரிச்சுடுச்சு!... சிஸ்டர், டாக்டர்... நான் உயிரோட இருக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன். மரணத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையிலான இந்த நிலையில் என் தேர்வு வாழ்க்கைதான். அதனால் நான் சாகப்போறவன்ற உங்க முடிவை மாத்திக்கிட்டு, நான் வாழப்போறவன்னு நினைச்சு ஆபரேஷன் பண்ணுங்க'ன்னேன். என்னைக் காப்பாத்திக் குடுத்துட்டாங்கடா...'' சாவதானமாகச் சொன்னான் மாதவன்.

டார்டர்களின் திறமையால் மாதவனின் 'போகிற உயிர்' பிடித்து நிறுத்தப்பட்டது. ஆனால், அந்த டாக்டர்களுக்கு உற்சாக ஊசி போட்டது மாதவனுடைய அதிசயமான அணுகுமுறைதான் என்பது புரிந்தது.

அந்த ஆக்கபூர்வமான அணுகு முறைதான் வாழ்க்கையின் ஒவ்வொரு தினத்தையும் மகிழ்ச்சியாக அமைத்துக் கொள்ளும் தேர்வை நமக்கு அளிக்கிறது என்பதும் எனக்குப் புரிந்தது.

செப்டம்பர் 12ல் கன்னிமரா நூலகத்தின் நூற்றாண்டு விழாவும் பொது நூலக இயக்ககத்தின் 25வது ஆண்டு விழாவும் முதல்வர் தலைமையில் மியூசியம் தியேட்டரில் நடக்க உள்ளது

எத்தனும் எழுத்தாளனும்

பதிப்பாளர் சொக்கையா புடலங்காய் வியாபாரம் செய்யாமல், புத்தக வியாபாரம் செய்ய வந்ததற்குக் காரணம் புத்தகத் தொழிலை அவர் ஒரு மதிப்பும் மரியாதையும் உள்ள தொழிலாக நினைத்ததுதான். அவர் இளைஞராக இருந்த காலத்தில் ஒரு புத்தகப் பூச்சி. நல்ல ஆசிரியர்கள் சிலரது நூல்களைப் படித்து, அவர்களிடம் ஏற்பட்ட மதிப்பாலும் இந்தத் தொழிலுக்கு வந்தாரென்று சொல்லலாம்.

தொழிலைத் தொடங்கிய காலத்தில் பல விதச் சிரமங்கள் அவருக்கு. பெயர் பெற்றிருந்த ஆசிரியர்கள் சிலரைச் சந்தித்து அவர்களிடம் எழுதித் தருமாறு கேட்டபோது அவர்கள் உச்சாணிக் கொம்புகளில் ஏறிக் கொண்டார்கள். ஒருசிலர் அவரிடம் முன் பணம் வாங்கிக் கொண்டு சென்றதோடு அவருடைய கடைப்பக்கமே மறுபடியும் திரும்பிப் பார்க்கவில்லை. பதிப்பாளரைத் தாமாகத் தேடி வந்து தான் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதிகளைக் கொடுத்துச் சென்றார்கள் சிலர்.

அவைகளையெல்லாம் பொறுமையோடு படித்துப் பார்த்து, தேர்ந்தெடுத்து இரண்டு மூன்று நூல்களை முதலில் வெளியிட்டார் சொக்கையா. செலவு செய்து பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தினார். மதிப்புரைக்கு அனுப்பினார். வாசகர்களும் மெல்ல மெல்ல அவரிடம் காசு கொடுத்துப் புத்தகங்களை வாங்கலானார்கள். சிறிது சிறிதாக அவரைப் புறக்கணித்த எழுத்தாளர் கூட்டமும் அவர் கடைக்கு வந்து குழுமத் தொடங்கியது. செலவைப் பார்க்காமல் காபியும் வெற்றிலையும் பாக்குமாய் அவர்களைப் பெருமைப் படுத்தலானார் பதிப்பாளர்.

புத்தக ஆசிரியர்கள் ஆரம்ப எழுத்தாளர்களாக இருந்தாலும் அவர்களிடம் ஒழுங்காகக் கணக்குக் காட்டி அவர்களுக்குரிய தொகையை உரிய காலத்தில் கொடுத்து வந்தார் சொக்கையா. அச்சுப் போட்ட பிரதிகளின் எண்ணிக்கையை அவர் குறைத்துச் சொல்வதில்லை; விற்ற புத்தகங்களை அவர் "விற்கவில்லை" என்று மழுப்புவதில்லை. செட்டும் சிக்கனமுமாக, அதே சமயம் எழுத்தாளர்களை ஏமாற்றாமல் அவர் தொழில் நடத்தி வந்தார்.

இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டவுடன், முதலில் உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்ட சில பெரிய எழுத்தாளர்கள் சொக்கையாவைத் தேடி வரலானார்கள். சொக்கையாவின் நாணயமும் திறமையும் சீக்கிரமாகவே அவரை ஒரு முதல் தரமான பதிப்பாளராக்கி விட்டன.

அந்தக் காலத்தில் மக்களிடம் 'நூலக வரி' என்று வரி வசூல் செய்து நாடெங்கும் நூலகங்கள் ஏற்படுத்தாததால், காசு கொடுத்துப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாசகர்களை நம்பித் தான் புத்தகம் போட வேண்டியிருந்தது. அளவுக்கதிமான பேர் காசு கொடுத்து வாங்க முடியாவிட்டாலும் தொழில் அவ்வளவு மோசமாகவும் போய் விடவில்லை. தரமான ஆசிரியர்களின் தரமான நூல்களைப் போட்டு வந்தால், ஓரளவு லாபகரமாகவே தொழில் நடந்து வந்தது.

லாபத்துக்கு மேற்பட்ட ஒரு மனநிறைவு சொக்கையாவுக்கு. தமிழ்நாட்டில் தலைசிறந்த எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டு வருகிறோம் என்ற பெருமை! அவர்களது படைப்புகளை வாசகர்களிடம் பரப்புவதோடு, அவர்களுக்கும் உதவி செய்கிறோம் என்ற ஆனந்தம். மேலும், எப்படியோ சமுதாயத்திலும் தமக்கு மதிப்பு உயர்ந்து வருவதைக் கவனித்தார் சொக்கையா. வெங்காய வியாபாரமும் விளக்கெண்ணெய் வியாபாரமும் செய்து லட்சாதிபதியானவர்களுக்கு இருந்த மதிப்பைவிட, புத்தக வியாபாரியான சொக்கையாவுக்குத்



தனி மதிப்பு இந்தக் காலத்தில் இருக்கத்தான் செய்தது. 'தமிழுக்குத் தொண்டு செய்கிறார். இலக்கியத்துக்குப் பணி செய்கிறார்' என்று மற்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பணக்காரர்களும் பதவியில் இருந்தவர்களும்கூட, சொக்கையா அவர்களைக் காண வருகிறார் என்றால், தனி மதிப்போடுதான் அவரை வரவேற்று உபசரித்தார்கள். இதற்கெல்லாம் காரணம், தம்மிடமுள்ள எழுத்தாளர் கூட்டம் என்பதை சொக்கையாவும் மறந்து விடவில்லை.

பத்துப் பன்னிரண்டு எழுத்தாளர்களின் நூல்களையே அவர் குறிப்பாக வெளியிட்டு வந்தாரென்றாலும், அவர்களில் எழுத்தாளர் பக்கிரிசாமியிடம் அவருக்குத் தனி மதிப்பு உண்டு. 'பக்கிரி' என்ற புனைபெயரில் எழுதிய அவர் நூல்களை வாசகர்கள் விருப்பத்தோடு அதிகமாக வாங்கிப் படித்தார்கள் என்பது மட்டும் காரணமல்ல. பக்கிரி எழுதவே பிறந்தவர் என்பது சொக்கையாவின் நம்பிக்கை, எழுதிப் பிழைக்க முடியாது என்பதால், பக்கிரிசாமி ஏதோ அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டு, கிடைத்த நேரத்திற்கெல்லாம் முழு மூச்சோடும் வெறியோடும் எழுதி வந்தார்.

ஒருநாள் மாலை பக்கிரிசாமிக்கு சொக்கையா வழக்கம்போல் காபியை வரவழைத்துக் கொடுத்து விட்டு, ''தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்குள்ளேயே சோம்பலுக்கு யாருக்காவது முதல் பரிசு கொடுப்பதானால் அது உங்களுக்குத்தான் கிடைக்கும். வாசகர்கள் அடுத்த புத்தகம் வரவில்லையா என்று கேட்கிறார்கள்; வருஷத்துக்கு ஒன்றுகூட எழுதமாட்டேன் என்கிறீர்கள்'' என்று குறைப்பட்டுக் கொண்டார்.

''என்னையா சோம்பேறி என்கிறீர்கள்?'' என்றார் எழுத்தாளர்.

"நான் சொல்லவில்லை; வாசகர்கள் சொல்கிறார்கள்.'' சிரித்தார் பதிப்பாளர்.

"பட்டினி கிடந்து என்னால் எழுத முடியாது. அதற்காகத்தான் பார்க்கும் வேலைக்கு ஒரு நாளைக்குப் பத்து மணி செலவிடுகிறேன். எழுத்து சம்பந்தமான வேலைகளில் என் உறக்கத்தையும் ஓய்வு நேரப் பொழுதுபோக்கையும் கெடுத்துக் கொண்டு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு மணி நேரம் உழைக்கிறேன். சோம்பேறிகள் மடமாய்ப் போய்க் கொண்டிருக்கும் இந்த நாட்டில் என்னையா நீங்கள் சோம்பேறி என்கிறீர்கள்?''

கருக்கென்று தைத்து விட்டது சொக்கையாவுக்கு. அவசரத்தில் எதையாவது எழுதிப் பக்கங்களை நிரப்பிக் கொண்டு வருபவரல்ல பக்கிரி. அவரிடம் சொல்வதற்குச் செய்தி இருப்பதாக நம்பியவர், அதைத் திறமையோடும் அழகாகவும் சொல்ல வேண்டுமென்று பாடுபட்டார்.

''இன்னும் அதிகமாக நீங்கள் எழுத வேண்டுமென்ற ஆசை எனக்கு; அதனால்தான் சொன்னேன்'' என்றார் சொக்கையா.

''எனக்கும் ஆசைதான்; வயிற்றுப் பாட்டுக்கு வேறு தொழிலை நம்பாத நிலை வந்தால் கட்டாயம் எழுதத்தான் செய்வேன்.''

"அந்த நாள் வரப் போகிறது; கவலைப்

அகிலன்

படாதீர்கள்!" என்று உற்சாகமாய்க் கூறினார் சொக்கையா. 'மக்களுடைய அரசாங்கம் மக்களுடைய நலனுக்காக' ஊர்தோறும் நூல் நிலையம் திறக்கப் போகிறதாம். அப்படித் திறந்தால், உங்களைப் போன்ற தலை சிறந்த எழுத்தாளர்களின் நூல்கள் கட்டாயம் ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இடம் பெறத்தான் செய்யும். புத்தக விற்பனை அதிகமாகும்போது உங்களுடைய பங்குப் பணமும் அதிகமாகக் கிடைக்கும். அப்போது நீங்கள் உங்களுடைய முழு நேரத்தையும் அதற்காகவே செலவிடலாம்."

"உண்மையாகவா?" என்று ஆவலோடு கேட்டார் பக்கிரிசாமி.

"ஆமாம்; நீங்கள் மட்டுமல்ல, சுமார் ஐம்பது அறுபது எழுத்தாளர்களாவது இந்த நாட்டில் வரப் போகும் நூலக இயக்கத்தால் தங்களுடைய முழுமூச்சையும் எழுத்துக்கே செலவிட முடியும். எந்த நாட்டில் புதிய இலக்கியம் வளர்கிறதோ அந்த நாட்டில் பண்பாடும் வளரும். இந்த நாட்டில் குடியாட்சி நிலைப்பதற்கு எழுத்தாளர் பங்கு எவ்வளவோ இருக்கிறது. ஆகவே நீங்கள் விரும்பும் தொழிலைச் செய்து, இலக்கியப் பணியால் கவலையில்லாமல் வாழும் காலம் உதயமாகிவிட்டதென்றே சொல்லலாம்."

"வாழ்க நூலக இயக்கம்" என்று கூறிய எழுத்தாளர், "நாளைக்கே நான் என் உத்தியோகத்துக்குக் கால்சீட்டுக் கொடுத்து விடுகிறேன். அதில் கிடைக்கும் மாதச் சம்பளப் பணம் அளவுக்கு எனக்கு எழுத்தில் கிடைத்தால் போதும்" என்றார்.

"உத்தியோகத்தை விடுகிறீர்களா? உபகாரச் சம்பளம், மருத்துவ உதவி, வீட்டு வாடகை, பஞ்சப்படி என்றெல்லாம் எவ்வளவோ உண்டு உங்களுக்கு; எழுத்தை நம்பிப் பிழைப்பை விடுகிறேன் என்கிறீர்களே?"

"எழுத்து ஒரு பொறாமை கொண்ட மனைவி. வேறு பிழைப்பை வைத்துக் கொண்டால், அது அவ்வளவு சுலபமாக நம் கைவசப் பட்டு வராது. தாகூரும், பாரதியும் வேறு வேலை பார்த்தார்களா? நாவலாசிரியர் சரத் சந்திரர் வேலையை உதறிவிடவில்லையா. இலக்கியப் பணியை முழு நேரச் சாதனையாக்க வேண்டுமென்றுதான் நானும் ஏங்கிக் கொண்டிருந்தேன். அதற்கான காலமும் வந்து விட்டது."

எழுத்தாளர் உற்சாகத்தில் எதையும் செய்து விடக் கூடியவர். சோம்பேறி என்று அவரைக் குற்றம் சாட்டப்போய், அது இப்படி ஒரு பிடிவாதத்துக்குத் திரும்புகிறதே என்று பார்த்தார் பதிப்பாளர். திடீரென்று அவர் வேலையை உதறிவிட்டு வந்து நிற்க வேண்டாமென்பதற்காக "யோசித்துச் செய்யுங்கள்" என்றார் சொக்கையா.

யோசிக்கவில்லை எழுத்தாளர். பதினைந்து ஆண்டு எழுத்துப் பழக்கம் அவரைத் தம் வேலையிலிருந்து விடுதலை பெறத் தூண்டி விட்டது. அடுத்த மாதமே தமது அரசாங்க உத்தியோகத்துக்குக் கால்கடுதாசி நீட்டினார். கால் ரீம் வெள்ளைத் தாளை வாங்கி வீட்டில் போட்டுக் கொண்டு தம் அறைக் கதவுகளை அடைத்துக் கொண்டார். கரை கடந்த உற்சாகத்தில் எழுத முனைந்து விட்டார்.

சொக்கையா கூறியதும் நடக்கத்தான் செய்தது. நாடெங்கிலும் நூலகங்கள் திறக்கப் பட்டன. மாவட்டத்துக்கு மாவட்டம் மக்களிடமிருந்து நூலக வரி வசூல் செய்யப்பட்டது. வேறு எங்கிருந்தெல்லாமோ இதற்காகப் பணம் வந்து குவிந்தது. 'மக்கள் பிரதிநிதி'களும், அதிகாரிகளும் நூல்களை வாங்கிச் சேர்க்க நியமிக்கப்பட்டனர். திறப்பு விழாக்கள், அந்த விழாக்கள், இந்த விழாக்கள் என்றெல்லாம் நூல்களின் பெயர்களில் நடைபெற்றன.

"தமிழ்நாட்டு அறிவாளிகள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் இனி உற்சாகத்தோடு தங்கள் படைப்புக்களில் ஈடுபடலாம். அவர்களுடைய உழைப்பையும் திறமையையும் அவர்கள் இந்தத் தமிழகத்துக்குப் பயன்படுத்தி, அதனால் இந்த நாட்டின் மண் வளத்தையும் சிந்தனை வளத்தையும் பெருக்கலாம். மக்களாட்சி ஒரு நாட்டில் வேரூன்றித் தழைக்க வேண்டுமானால், அந்த நாட்டில் மண வளமும் சிந்தனை வளமும் பெருக வேண்டும். அதற்காகவே இந்த நூலக இயக்கம் தீவிரமாக்கப்பட்டு வருகிறது" என்று ஒரு பத்திரிகை தலையங்கமே எழுதியது.

தாங்க முடியாத பெருமை பக்கிரிசாமிக்கு. அந்தத் தலையங்கத்தை சொக்கையாவிடம் படித்துக் காட்டிவிட்டு, "பார்த்தீர்களா, சொக்கையா! தமிழ்நாட்டின் முக்கியமான எழுத்தாளர்களின் நூல்களையெல்லாம் நீங்கள் தாம் வெளியிடுகிறீர்கள். முதலில் உங்களுக்குத்தான் யோகம் அடிக்கப் போகிறது!" என்று குதித்தார்.

பாவம்...! சொக்கையாவும் அதை நம்பினார்!.... பாவம் எழுத்தாளர்!.... பாவம் பதிப்பாளர்!....

ஆனால், யோகம் அடிக்கத்தான் செய்தது. யாருக்கு யோகம் அடித்தது என்று கேட்கிறீர்களா?

ஏதோ ஒரு சில மனச்சாட்சியுள்ள நூலக அதிகாரிகளும், தரமான நூல்களையே நூலகங்களில் வைக்க வேண்டுமென்று ஆசைப் பட்ட நூலகத் தலைவர்களும் மட்டும் சொக்கையாவுக்கும் அவரைப் போன்ற தரமான

நூல்களை வெளியிட்டு வரும் வேறு சிலருக்கும் எழுதி நூல்களை வரவழைத்து வைத்தார்கள். எழுத்தாளரின் தரம், நூலின் தரம், படிப்பவருக்கு அதனால் விளையும் நன்மை இவற்றை மனதில் கொண்டு செய்தார்கள்.

நாளாக நாளாக, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக மாறிக் கொண்டு வந்தது. சொக்கையாவைப் போன்றவர்கள் பதிப்பித்துக் கொண்டும், பக்கிரியைப் போன்றவர்கள் எழுதிக் கொண்டும்தான் வந்தார்கள். ஆனால் நூல்கள், படிப்பதற்குத் துடித்த வாசகர்களின் கூட்டத்துக்குக் கிடைக்கவில்லை. நூலகங்களுக்குச் செல்லவில்லை. சொக்கையாவின் கிடங்கில் கட்டுக்கட்டாகத் தேங்கத் தொடங்கின. ஆனால் அதே சமயத்தில் நூலகங்கள், கொள்ளாதபடி நூல்களும் குவிந்தன. தேடுவாரற்ற நூல்கள், தொடுவாரற்ற நூல்கள், தொடவுங்கூடாத நூல்கள், ஊர் பேர் தெரியாத ஆசிரியர்களின் நூல்கள், ஊர் பேர் தெரியாத பதிப்பாளர்களின் நூல்கள்!

திடீர் ரசம், திடீர் சாம்பார் மாதிரி, நூலக இயக்கத்துக்கு ஒதுக்கப் பெற்ற மக்களின் வரிப்பணத்தைப் பங்கு போட்டுக் கொள்வதற்கென்று திடீர்ப் பதிப்பகத்தார் அங்கங்கே தோன்றினார்கள். தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டால், எழுத்தாளர்களுக்கு 'ராயல்டி' கொடுக்க வேண்டுமென்பதற்காக திடீர் எழுத்தாளர்களை அவர்கள் உற்பத்தி செய்யலானார்கள். வெள்ளைக் காகிதத்தைக் கறுப்புக் காகிதமாக்கி, ஒட்டு மொத்தமாய் வீசை விலைக்கு விற்பனை செய்யும் ஒரு 'நூலக எழுத்தாளர்கள் கூட்டம்' இந்த 'நூலகப் பதிப்பாளர்'களால் தோற்றுவிக்கப்பட்டது.

திடீரென்று சொக்கையாவிடம் புத்தகம் கட்டும் வேலை பார்த்துக் கொண்டிருந்த கருப்பையா எப்படியோ தானும் ஒரு நூலகப் பதிப்பாளராகி விட்டான். அரசியல் கட்சிப் பேச்சாளர் ஒருவரை எப்படியோ பிடித்து, அந்த 'தியாகி'யின் பையில் பணத்தை நிரப்பினான். இரண்டு மூன்று வருடங்களில் இருநூறு முந்நூறு நூல்களை வெளியிட்டு, எப்படியோ நேரடியான கமிஷனும் மறைமுகமான லஞ்சமும் கொடுத்து அவற்றை நூலகங்களுக்குள் தள்ளிவிட்டான். இப்போது அவன் இரண்டு பங்களாக்களுக்கும் இரண்டு கார்களுக்கும் அதிபதி!

பாவம், கருப்பையாவுக்கு ஒருவரிகூடத் தமிழைப் பிழையில்லாமல் எழுதத் தெரியாது! அவன் தமிழ் படித்துக் கேட்டால், கேட்பவர்கள் காதில் உருக்கிய ஈயம் பாய்வதுபோல் இருக்கும். அவன் தமிழ் நூல்களின் பதிப்பாளன்! அவனைப் போல் இன்னும் எத்தனை எத்தனையோ பேர்.



"ஏங்க! புதுசா நாவல் எழுதிட்டு இருக்கீங்களே எதுவரை வந்திருக்கு?"

"ஒண்ணரை கிலோ வந்திருக்கு."

— க. சரவணன்

திடீரென்று ஒருநாள் கருப்பையாவுக்குத் தன்னுடைய முன்னாள் முதலாளி சொக்கையாவின் மேல் இரக்கம் வந்து இறங்கி அவரிடம் சென்றான்.

"அண்ணே, நீங்களும் உங்கள் சொத்தையெல்லாம் இதிலே போட்டு, இருபது வருஷமா இந்தத் தொழில் செய்யுறிங்க. உங்கள் தொழில் நொடிக்கிறதைப் பார்த்தா எனக்கு மனசு கேக்கலே. இப்படியே இருந்தீங்கன்னா நீங்க உங்க கடையை இழுத்து மூட வேண்டி வரும்."

"என்னடா செய்யச் சொல்றே?" என்றார் சொக்கையா.

"முதல்லே, இந்த எழுத்தாளர் கூட்டத்தை இங்கே அண்டவிடாமல் துரத்துங்க! நம்ம தொழிலுக்கு முதல் எதிரி இந்த எழுத்தாளன் தான்! இவனுக்குக் காசு கொடுத்து எழுதச் சொன்னா எப்படி நம்மாலே இடைத்தரகனுக்கு லஞ்சம் கொடுக்க முடியும்? கமிஷன் குடுக்க முடியும்?"

"கருப்பையா, வேண்டாண்டா! அந்தப் பாவத்தை நான் செய்ய மாட்டேன். புத்தகத் தொழில் புனிதமான தொழில்: யோக்கியனும் படித்தவனும் செய்ய வேண்டிய தொழில்."

"அண்ணே! வீணாக் கெட்டுப் போகாதீங்க. நூலகத்துக்குப் புஸ்தகம் வாங்குகிறவர்கள்ளே பாதிப்பேரு, அதை யார் எழுதியிருக்கான்னோ, அதுக்குள்ளே என்ன இருக்குன்னோ பார்க்கிறதில்லை: கழுதையை எழுதித் தரச் சொல்லி அச்சுப் போட்டுக் குடுத்தாலும் போதும். விலையை நம்ப எவ்வளவு அதிகமாக வைச்சாலும் கவலையில்லே. அவனுக்கு வேண்டியது கமிஷன். 'பில்'லில் போட்ட கமிஷன்; போடாத உள் கமிஷன். பேப்பருக்கு விலை குடுக்காமல் முடியாது. அச்சுப் போடறவனுக்குக் காசு குடுக்கலேன்னா ஸ்ட்ரைக் பண்ணுவான். இந்த நிலையிலே எழுத்துக்குக் காசு கேக்கிற எழுத்தாளன் புஸ்தகத்தைப்



''சார்... இன்னிக்கு உங்க பையன் கிளாசுக்கு வரல்லே!''

''கிளாசுக்கு வராட்டா அவன் நிச்சயம் சினிமாவுக்குப் போயிருப்பான் சார்! அவனுக்கு நேரத்தை வீணாக்கறது கொஞ்சம் கூடப் பிடிக்காது!''

— கே. அனிதா

போட்டா நமக்குக் கட்டுப்படியாகுமா?''

சொக்கையாவுக்கு கருப்பையாவின் பேச்சைக் கேட்பதற்கே அருவருப்பாக இருந்தது. கருப்பையா தன் காரை அனுப்பி யார் யாருக்குக் கருவாடு வாங்கிக் கொடுத்தது, கறி வாங்கிக் கொடுத்தது என்ற பட்டியலையெல்லாம் அடுக்கிக் கொண்டு போனான். புத்தகத் தொழில் செய்யும் மனிதன்கூட இவ்வளவு கீழ்த்தரமாக, கேவலத்திலும் கேவலமான நிலைக்கு இறங்குவானா என்று தோன்றியது சொக்கையாவுக்கு. ஆனால் அவன்தான் இன்றைக்குத் திடீர் லட்சாதிபதி.

"சொல்றதைச் சொல்லிவிட்டேன்; பிறகு உங்க இஷ்டம்!'' என்று சொல்லிக் கிளம்பினான் கருப்பையா. பெருமையான தொழில் என்று நம்பி வந்து இருபது வருடங்களாய்ப் போராடிய சொக்கையாவோ உச்சி முகட்டை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஈயோட்டும் நிலைக்கு வந்து விட்டது தொழில். இத்தனைக்கும் தமிழ்நாட்டின் அறிவுச் சுரங்கம், நூல்களின் உருவில் அவரிடம் கட்டிக் கிடந்தது. அற்புதமான படைப்பு இலக்கியங்கள் அடைபட்டுத் திணறின.

சற்று நேரத்திற்கெல்லாம் இருமிக் கொண்டே ஒரு எலும்புக்கூடு அங்கே வந்தது. குழி விழுந்த கண்கள்; கூனி முதுகு. கசங்கிய கந்தல் சட்டை; தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர் பக்கிரி வந்து சேர்ந்தார். அவ்வளவு ஒடிந்துவிட்ட நிலையிலும் விழிகளில் மட்டும் தீட்சண்யம் குறையவில்லை.

"இனி இந்த அக்கிரமத்தை நம்மால் தாங்கவே முடியாது. புரட்சி செய்ய வேண்டும், புரட்சி!'' என்று முழங்கியபடி சொக்கையாவின் முன்னால் வந்து உட்கார்ந்தார்.

"என்ன புரட்சி நடத்தப் போகிறீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் சொக்கையா. எழுத்தாளரின் வீட்டில் குழந்தைகளும் மனைவியும் பசியால் புரட்சி நடத்துகிறார்கள் என்பது அவருக்குப் புரிந்து விட்டது. 'மாதா மாதம் கை நிறைய காசு வந்து கொண்டிருந்த உத்தியோகத்தை, எழுத்தை நம்பி உதறிய இலட்சியவாதிக்கா இந்த நிலை?'' என்று நினைத்தபோது சொக்கையாவுக்கே தாங்க முடியவில்லை. எந்த அளவுக்குத்தான் அவரால் உதவி செய்ய முடியும்?

"நூல் நிலையங்களில் என் புத்தகங்கள் கிடைக்கவில்லையென்று, என்னிடம் ஓசிப் புத்தகம் கேட்டு எழுதுகிறார்கள் வாசகர்கள்!''

"அதற்காக?''

"வாசகர்கள் புரட்சி செய்தால் தவிர, வேறு வழியில்லை. ஓசியில் யார் தயவாலும் நூலகங்களில் வாசகர்கள் படிக்கவில்லை. அவர்களுடைய வரிப்பணத்தால் உருவாவது நூலகம். அவர்கள் விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து அவர்களைத் தடுக்க யாருக்கும் உரிமை இல்லை'' என்று சொல்லிவிட்டு, இதோ பாருங்கள், எனக்கு ஒரு வாசகர் எழுதியுள்ள கடிதம்!'' என்று நீட்டினார்.

அதில் அந்த வாசகர் எழுதியிருந்தது: "புத்தகம் என்றால் வெள்ளைத் தாளில் கறுப்பு மையால் அச்சடித்தது. அவ்வளவு இருந்தால் போதும். தமிழ்நாட்டின் வாசகர்களைவிட இரண்டு மடங்கு எழுத்தாளர்கள் என்பது எங்கள் நூலகப் புத்தகங்களைப் பார்க்கும்போது தெரிகிறது. ஒருமுறை கூட யாரும் கையால் தொடாத குப்பைப் புத்தகங்கள் இங்கே குவிந்து கிடக்கின்றன. நாங்கள் கேட்பது எங்களுக்குக் கிடைப்பதில்லை.''

படித்துவிட்டு, "எந்தப் புரட்சியும் உங்களால் இங்கே நடத்த முடியாது; பசி உங்களை இப்படிப் பேச வைக்கிறது!'' என்றார் பதிப்பாளர்.

"நீங்கள்தானே நூலக இயக்கம் வந்தால், இந்த நாட்டில் ஐம்பது அறுபது எழுத்தாளராவது முழு நேரமும் எழுதிப் பிழைக்க முடியுமென்றீர்கள்?'' என்றார்..

"இந்த நாட்டில் இனி உங்களைப் போல எழுத்தாளர்கள் பிழைக்க முடியாது; எத்தர்களே பிழைக்க முடியும்'' என்றார் பதிப்பாளர்.

"அப்படியானால் நீங்களும் உங்கள் கடையைக் கட்ட வேண்டியதுதான்'' என்றார் பக்கிரி.

"பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்றார் பதிப்பாளர்.

"நானா? நானா?'' என்று ஆவேசத்தோடு எழுந்தார் எழுத்தாளர். தேகம் வெடவெடவென்று நடுங்கியது. கண்களை உருட்டி விழித்தார். இருமல்கள் வெடித்துக் கிளம்பின. "இதோ செய்கிறேன் பாருங்கள்!'' ஓங்கித் தமது பேனாவைத் தரையில் தூக்கி அடித்தார். அது கொட்டிய கறுப்பு மசியோடு, அவரது இருமல்களோடு வாயிலிருந்து பொங்கிய இரத்தமும் ஒன்றாக வழிந்தது.

மக்கள் மதிப்பை இழந்த உல்ஃபா தீவிரவாதிகள்

அசாமில் மறுபடி தீவிரவாதம், போடோ பிரச்னை எல்லாம் தலைதூக்கி இருக்கின்றன. கொத்துக் கொத்தாய்க் கொலைகள்; ரயில் பாதைகளில் வெடிகுண்டுத் தகர்ப்பு என்று மறுபடி ஆரம்பித்திருக்கின்றன.

'சூப்பர் காப்' என்று சொல்லப்படும், முன்னாள் பஞ்சாப் போலீஸ் அதிகாரி கே.பி.எஸ். கில்லை, பாதுகாப்பு ஆலோசகராக முதல்வர் மகந்தா குவஹாத்திக்கு வரவழைத்திருக்கிறார்.

ஆளுநரையும் மாற்றிவிட்டது மத்திய அரசு. ஓய்வு பெற்ற ராணுவத் துணைத் தளபதி எஸ்.கே. சின்ஹாவை ஆளுநராக நியமித்துவிட்டது. 'ஒரு சிவிலியனை வேண்டுமானால் நியமியுங்கள். ராணுவ நபர் எதற்கு?' என்று இதற்குத் தீவிரவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்!

பிரதம செயலராக ஹிரேன் குமார் ஜஃபாவைக் கொண்டு வந்தது. இவர் கெட்டிக்கார ஐ.ஏ.எஸ். அதிகாரி என்று பெயர் எடுத்தவர்.

ஆனால், இப்படி முக்கியப் பொறுப்புகளில் எல்லாம் அதிரடி மாற்றம் செய்யக் காரணம் இருக்கிறது.

அசாமின் மேற்குப் பகுதியில் உள்ள மஜாவ்லி என்கிற கிராமத்தில் மக்களிடையே, சமூக சேவை செய்து வந்தார் சஞ்சய் கோஷ் என்கிற இளைஞர். AVARD-NE என்ற அமைப்பின் செயலர் அவர். அங்கேயே தங்கி, பணியாற்றி, கிராம மக்களிடையே செல்வாக்கும், மதிப்பும் பெற்ற இளைஞர் சஞ்சய் கோஷ். மத்திய செய்தி - ஒலிபரப்புத் துறைச் செயலராக இருந்த பாஸ்கர் கோஷ், ஐ.நா.வில் இந்தியப் பிரதிநிதியாக இருக்கும் அருந்ததி கோஷ் ஆகியோரின் மருமான்.

சஞ்சய் கோஷை ஜூலை 4 ஆம் தேதி கடத்திக் கொண்டு போயிற்று உல்ஃபா தீவிரவாதக் கும்பல்.

அசாம் முழுக்கப் பரபரப்பாய்ப் பேசப்பட்டது இந்தக் கடத்தல். சஞ்சய் கோஷ் உயிரோடு, நலமாக இருப்பதாகவும், அவருக்கு ஆபத்து எதுவும் இல்லை என்றும் செய்திகள் வெளியிட்டு வந்த உல்ஃபா, ஆகஸ்ட் 10ஆம் தேதி உண்மையை வெளியிட்டது -

சஞ்சய் கோஷ் இறந்துவிட்டார் என்று!

அருணாசலப் பிரதேசத்தில், பெயர் குறிப்பிடாத இடம் ஒன்றில், தப்பித்துப் போக அவர் முயன்றதாகவும், அப்போது மலை உச்சியிலிருந்து கீழே விழுந்து இறந்ததாகவும் உல்ஃபா தெரிவித்தது.

இது அப்பட்டமான பொய் என்று, மக்கள் நம்ப மறுத்தார்கள். இன்னும் சில நாட்களில் அவரை விடுவித்து விடப் போவதாகச் சொன்ன உல்ஃபாவிடமிருந்து அவர் ஏன் தப்ப முயல வேண்டும்? சஞ்சய் கோஷை நன்கு அறிந்த மக்கள், உல்ஃபாவின் கொடுஞ்செயலை மன்னிக்கத் தயாராய் இல்லை.

இது வரை உல்ஃபா மீது கொஞ்ச நஞ்சம் மரியாதை வைத்திருந்த மக்கள் கூட, அவர்களை வைது தீர்த்தனர். பலதரப்பட்ட அரசியல் கட்சிகளும் உல்ஃபாவின் கொடூர வழிகளை ஆதரிக்க மறுத்தன.

உல்ஃபா, சஞ்சய் கோஷ் யார் என்றோ அவரது குடும்பப் பின்னணியையோ அறியவில்லை என்பதுதான் இன்னும் விசித்திரம்!

கடத்திக் கொண்டு போன சில நாட்களிலேயே சஞ்சய் கோஷை உல்ஃபா கொன்று போட்டிருக்க வேண்டும் என்று இப்போது ஊகிக்கப்படுகிறது. ஜூலை 16 ஆம் தேதியே, முதல்வர் மகந்தா செய்தியாளர்களிடம் பேசும் போது இதைச் சொன்னார். ஆனால் நிச்சயமாக எதுவும் தெரியாத நிலையில், இந்தச் செய்

• ரயில் பாதைகளில் குண்டு வெடிப்பு....





• பரேஷ் பருவா : உல்ஃபா தீவிரவாதிகளின் தலைவன்



• சஞ்சய் கோஷ்

தியை இப்போது வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்குக் காரணமும் இருந்தது.

நம்மூர் சுப்பிரமணிய சுவாமி மாதிரி அங்கே ஓர் அரசியல்வாதி (பெயரை மகந்தா குறிப்பிடவில்லை), "நான் இப்போதுதான் சஞ்சய் கோஷைப் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன். உல்ஃபாவையும் பார்த்துப் பேசிவிட்டேன். நீங்கள் மட்டும் சஞ்சய் கோஷைக் காப்பாற்றுவதற்காக, ராணுவ கமாண்டோக்களை அந்தப் பகுதிக்கு அனுப்பி வைக்காமல் இருந்தால் போதும்!' என்று மகந்தாவிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு, உல்ஃபா தீவிரவாதிகள் சஞ்சய் கோஷை மஜாவ்லியிலிருந்து அருணாசலப் பிரதேசப் பகுதிக்குக் கடத்திக் கொண்டு போய் விட்டனர்!

சஞ்சய் கோஷின் கொலைக்குப் பிறகு, உல்ஃபா தீவிரவாதிகள் இனி மஜாவ்லி கிராமத்துக்குள்ளேயே நுழையக் கூடாது என்று மக்கள் தடைவிதித்து விட்டார்கள். அவர்களுக்கு அத்தனை தைரியம் வந்து விட்டது.

மஜாவ்லி கிராம மக்கள் சஞ்சய் கோஷுக்கு வெண்கலச் சிலை வைத்திருக்கிறார்கள். சஞ்சயின் உடலைத் தரும்படி, உல்ஃபா தீவிரவாதிகளிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகஸ்ட் 6 ஆம் தேதி உல்ஃபா சஞ்சய் கோஷைக் கொலை செய்திருக்கக் கூடும் என்று பின்னர் தெரியவந்தது. 8 ஆம் தேதி, பல் டாக்டரின் கிளினிக்கிலிருந்து வெளியே வந்த இரண்டு ராணுவ அதிகாரிகளை, அவர்களின் மகன்கள் முன்னிலையிலேயே உல்ஃபா தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்; உடனே தப்பித்து ஓடியும் விட்டனர்!

சஞ்சய் கோஷைக் கடத்திக் கொண்டு போய்க் கொடூரமாகக் கொலை செய்ய என்ன காரணம்?

இருந்தது - வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கிய நிதி முழுவதையும், விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த காண்ட்ராக்டர்கள் - அதிகாரிகள் நெருக்கத்தை சஞ்சய் அறிந்திருந்தார். அதை அடியோடு ஒழித்துக் கட்ட, கிராம இளைஞர்களையும், திடகாத்திரமான ஆண்களையும், பெண்களையும் வாலன்டியர் அணியாக உருவாக்கி, கிராம மேம்பாட்டுப் பணிகளைப் பிரச்னைகள் எதுவுமின்றி முடித்து வந்தார் சஞ்சய் கோஷ். காண்டிராக்டர் - அதிகார வர்க்கம் இதில் கைவைக்க முடியாமல் திண்டாடியது! இந்தக் கூட்டணியின் ஆசியோடுதான், உல்ஃபா தீவிரவாதிகள் சஞ்சய் கோஷைக் கடத்திக் கொண்டு போய்க் கொலை செய்திருக்க வேண்டுமென்று நம்பப் படுகிறது.

சுதந்தர தினப் பொன்விழாக் கொண்டாட்டங்களைக் கொண்டாடக் கூடாது என்று போடோ தீவிரவாதிகளும், உல்ஃபா கும்பலும் விடுத்த எச்சரிக்கையை இதனால்தான் யாரும் பொருட்படுத்தவில்லை. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஓவியர்கள், சிந்தனையாளர்கள், அரசியல்வாதிகள், பொது மக்கள் என்று பிரம்மாண்டமான கூட்டம் கூடி ஒரு மாபெரும் ஊர்வலத்தையே நடத்தி விட்டார்கள் அசாம் மக்கள்.

உல்ஃபா மீது மக்களுக்கு மரியாதை போய் விட்டது என்று இக்கூட்டமே நிரூபித்தது!

— நம்பி



தவுட்

வீரமும், அப்பாவித்தனமும் இணைந்த இளைஞன் சஞ்சய்தத்தை பயன்படுத்திக் கொள்கிறது அண்டர் வோர்ல்ட் தாதா கூட்டம் ஒன்று (படத்தைக் குறிப்பிடுகிறோம்). கமிஷன் தொகைக்காக இரண்டு கோடி ரூபாய் அடங்கிய பெட்டியை கடற்படை அதிகாரிகளிடமிருந்து மீட்டு வர சம்மதிக்கிறார்.

அதே சமயம் அரசிடமுள்ள நியூட்ரான் அணுகுண்டு அடங்கிய பெட்டி ஒன்று பறி போகிறது. அணுகுண்டு பெட்டியை சஞ்சய் தவறுதலாகத் தூக்கிக் கொண்டுவிட, தாதாக்கள், போலீஸார் இரு தரப்பினருமே சஞ்சயைத் துரத்துகிறார்கள். வழியில் ஊர்மிளாவைச் சந்திக்கிறார். காதலிக்காமலேயே (அதெல்லாம் பின்னால்) இருவரும் சேர்ந்து, ஓடுகிறார்கள், ஓடுகிறார்கள், வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடுகிறார்கள். (தவுட் - ஓடு).

கதை முழுவதும் நகைச்சுவை ட்ரீட்மெண்ட். இரண்டு சீரியஸான போலீஸ் சேஸ்கள் பாடல்களின் பின்னணியில். ஹீமேன் இமேஜ் கொண்ட சஞ்சய்தத் நகைச்சுவைக் காட்சிகளில் பொருந்த கஷ்டப்படுவது தெரிகிறது. 'என் அப்பா ஒரு மிகப் பெரிய வேட்டைக்காரர்!'- இந்த வாக்கியத்தை இந்தியில் சொல்லும்போது யாராவது சிரித்தால் அவர் இந்தப் படத்தைப் பார்த்திருக்கிறார். இந்த வாக்கியத்தை மீண்டும் மீண்டும் விதவிதமாகச் சொல்லியே சஞ்சய்தத்தும், ஊர்மிளாவும் காமெடியனை வெறுப்பேற்றும் நீண்ட நகைச்சுவைக் காட்சிக்கு தியேட்டரில் செமை வரவேற்பு. எல்லாவற்றையும் தூக்கியடிக்கும் நகைச்சுவைக் காட்சி, "ஒரு பெண் புடைவை கட்டிக் கொண்டிருக்கும்போது, கதவைத் திறக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா? மகளிர் அணி இயக்கங்களிடம் முறையிட்டு உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்" என்று ஊர்மிளா (சஞ்சய்தத்தைக் காக்க) போலீஸாரை மிரட்டும் காட்சி.

கவர்ச்சி, ஆபாசம் ஆகிய எல்லைகளையெல்லாம் தாண்டி விரச அசைவுகளை பாடல் காட்சிகளில் வாரி வழங்கும் ஒரு கதாநாயகி, அடுத்த காட்சியிலேயே குறும்பும் குழந்தைத்தனமுமாக வந்தால் ஏற்க முடியுமா? முடிகிறது. அந்த ரசவாதத்தை ஊர்மிளா செய்கிறார்.

லொகேஷன்கள் அருமையான தேர்வு. அற்புத ஓவியனின் படைப்புகளை வெளுவாயிடில் பார்த்த நிறைவு.

கதையைப் பற்றி அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. எனவே குழப்பங்களும் இல்லை. "இயக்குனர் ராம்கோபால் வர்மாவும், இசைச்சிற்பி ஏ.ஆர். ரஹ்மானும் இணைந்து பங்கேற்கும்" என்கிறது டைட்டில். ரங்கீலாவைத் தொடர்ந்து இதிலும் இசைப் பரபரப்பை ஊட்டியிருக்கிறார் நம்மவர்.

— ஜீ.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 208/-; Overseas Rs. 1200/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 104/-; Overseas Rs. 600/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka